
# 1996 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 8</u>

**09.01.1996** குழந்தை நிலையிலிருந்து எஜமானத்தன்மையின் போதையில் இருப்பதற்காக மனதின் இராஜாவாக ஆகுங்கள்!

**18.01.1996** எப்பொழுதும் சக்தியுடனிருப்பதற்கான எளியவிதி -நற்சிந்தனை செய்யுங்கள் மற்றும் நற்சிந்தனையாளர் ஆகுங்கள்!

**16.02.1996** இப்பொழுது விசேஷ கவனம் செலுத்தி நேரம் மற்றும் எண்ணத்தின் பொக்கிஷத்தை சேமியுங்கள்! (சிவ ஜெயந்தி)

**27.02.1996** சத்தியத்தின் அஸ்திவாரம் தூய்மை ஆகும் மற்றும் அதன் அடையாளம் நடத்தை மற்றும் முகத்தில் தெய்வீகத் தன்மை இருக்கும்!

**10.03.1996** செய்பவர் மற்றும் செய்விப்பவரின் நினைவு மூலம் கர்மாதீத் நிலையின் அனுபவம்!

**22.03.1996** பிராமண வாழ்க்கையின் பெர்சனாலிட்டி (தனித்தன்மை) -அனைத்து கேள்விகளிலிருந்து விடுபட்டு எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருப்பது!

**03.04.1996 சேவைகளின் கூடவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு மூலமாக பழைய மற்றும் வீணான சம்ஸ்காரங்களிலிருந்து விடுபட்டவர் ஆகுக!**

**31.12.1996 புதிய வருடத்தில் அனுபவம் நிறைந்தவராகி அனைவரையும் அனுபவிகளாக ஆக்குங்கள்!**

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

# 09.01.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# குழந்தை நிலையிலிருந்து எஜமானத்தன்மையின் போதையில் இருப்பதற்காக மனதின் இராஜாவாக ஆகுங்கள்!

இன்று உலகின் எஜமான், தந்தை தன்னுடைய நாலாபுறங்களிலுள்ள எஜமான நிலையிலிருந்து குழந்தைகளானவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். குழந்தையாகவும் இருக்கிறீர்கள் என்றால், அதிபதியாகவும் இருக்கிறீர்கள். உலகின் அதிபதிகளாக எதிர்காலத்தில் ஆவீர்கள் ஆனால் தந்தையின் அனைத்து பொக்கிஷங்களின் அதிபதியாக இப்பொழுது இருக்கிறீர்கள். இரண்டுமாக இருக்கிறீர்கள் இல்லையா? குழந்தை என்பதின் போதை எப்பொழுதுமே இருக்கத்தான் செய்கிறது. குழந்தைத்தன்மையின் போதை வெளிப்படும் ரூபத்தில் இருந்தாலும் அல்லது உள்ளடங்கிய ரூபத்தில் இருந்தாலும் பெரும்பான்மையோருக்கு இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். ஏனென்றால், நினைவில் அமர்கிறீர்கள் என்றாலும் என்ன நினைவிருக்கிறது? பாபா. அப்படி "பாபா" (தந்தை) என்று நினைப்பது மற்றும் கூறுவது, குழந்தையாக இருக்கிறார், அப்பொழுது தான் பாபா என்று கூறுகிறார் இல்லையா? மேலும் யார் உண்மையான சேவாதாரியாக இருக்கிறாரோ அவருடைய வாயிலிருந்து அடிக்கடி என்ன வெளியாகிறது. பாபா இதைக் கூறினார், பாபா இதைக் கூறுகிறார் என்ற வார்த்தைகள் தான். முழு நாளில் எத்தனை தடவை "பாபா, பாபா" என்ற வார்த்தையை சேவையில் கூறிக் கொண்டே இருக்கிறீர்கள்? ஆனால் "பாபா" என்ற வார்த்தையை இரண்டு விதமாக கூறுபவர்கள் இருக்கிறார்கள். ஒன்று உள்ளப்பூர்வமாக பாபா என்று கூறுபவர்கள், இன்னொன்று ஞானத்தின் புத்தியால் கூறுபவர்கள். யார் உள்ளப்பூர்வமாக பாபா என்று கூறுகிறாரோ அவருக்கு எப்பொழுதும்

சுலபமாக உள்ளத்தில் பாபா மூலமாக உடனடி பிராப்தியாக குஷி, சக்தி கிடைக்கிறது. புத்தி நன்றாக இருக்கும் காரணத்தினால் மட்டும் ஞானத்தின் ஆதாரத்தினால் "பாபா பாபா" என்ற வார்த்தையை கூறுகின்றார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அந்த நேரம் கூறுவதில் தனக்குத் தானே குஷி ஏற்படுகிறது மற்றும் கேட்பவர்களுக்கும் அந்த நேரம் வரை குஷி இருக்கிறது, பிடித்திருக்கிறது ஆனால் நிரந்தரமாக உள்ளத்தில் குஷி மற்றும் சக்தி இரண்டுமே இருக்க வேண்டும். அது எப்பொழுதும் இருப்பதில்லை. சில நேரம் இருக்கிறது, சில நேரம் இல்லை. உள்ளப்பூர்வமாக பாபா என்று கூறவில்லை. ஏன்? அப்படி குழந்தை என்ற நிச்சயம் அனைவருக்கும் இருக்கிறது என்பதை பாப்தாதா பார்த்தார். போதை சில நேரம் இருக்கிறது, சில நேரம் இருப்பதில்லை. நான் பாபாவின் உடையவன்/உடையவள் என்ற இதில் பெரும்பான்மையோர் சரி தான். அப்படி குழந்தை என்பதின் நிச்சயம் அனைவருக்கும் இருக்கிறது, போதை சில நேரம் இருக்கிறது, சில நேரம் இருப்பதில்லை, குழந்தையாகவோ இருக்கத்தான் செய்கிறீர்கள் ஆனால் குழந்தை மட்டும் அல்ல, குழந்தையிலிருந்து அதிபதி ஆகப் போகிறவர்கள், டபுள் (இரண்டு) இருக்கிறது.

அதிகார நிலை -ஒன்று சுயராஜ்ய அதிகாரி என்ற அதிகார நிலை மற்றும் இன்னொன்று தந்தையின் அனைத்து பொக்கிஷங்களின் உரிமையாளர் என்ற அதிகார நிலை. ஏனென்றால் அனைத்து பொக்கிஷங்களையும் உங்களுடையதாக ஆக்குகிறீர்கள், என்னுடைய ஆஸ்தி ஆகும். கொடுப்பவர் தந்தை ஆவார், ஆனால் நீங்கள் ஆஸ்தியின் உரிமையாளர்கள் என்று தந்தை கொடுத்தார். அப்படியானால் இந்த ஆஸ்தி அனைவருக்கும் கிடைத்திருக்கிறதா? யாருக்காவது குறைவாக, யாருக்காவது அதிகமாகவோ கிடைக்கவில்லையே? அனைவருக்கும் ஒரே மாதிரியாக கிடைத்தது தான் இல்லையா? அல்லது யாருக்காவது ஒரு கோடி கிடைத்தது, யாருக்கோ 10-கோடிகள் கிடைத்தது என்று அப்படி இல்லை இல்லையா? ஏனென்றால் தந்தையின் பொக்கிஷங்கள் அளவில்லாதவை. எத்தனை தான் குழந்தைகள் தான் இருந்தாலும் தந்தையின் பொக்கிஷத்தை அனைவருக்கும் கொடுப்பதினால் குறைந்து போகுபவை அல்ல. திறந்த மற்றும் நிரம்பிய களஞ்சியமாகும். எனவே தந்தை யாருக்காவது குறைவாக ஏன் கொடுக்க வேண்டும். எப்பொழுது இருப்பதே

குழந்தைகளுக்காகத் தான் என்றால் யாருக்காவது குறைவாகவும், யாருக்காவது அதிகமாகவும் ஏன் கொடுக்க வேண்டும்? அப்படி ஒன்று தந்தையின் ஆஸ்திக்கான அதிகார உரிமையாளர், மற்றொன்று சுய இராஜ்யத்தின் அதிகாரமுள்ளவர். அப்படியானால் சுய இராஜ்யம் கிடைத்திருக்கிறதா? இரண்டிற்கும் அதிகாரிகளாக இருக்கிறீர்களா? உறுதி தான் இல்லையா? அப்படியானால் அதிகாரி ஆகி எவ்வளவு நேரம் நடந்து கொள்கிறீர்கள்? சுய இராஜ்யம் எங்களது பிறப்புரிமை என்று கூறவும் செய்கிறீர்கள். கூறுகிறீர்கள் தான் இல்லையா? அல்லது மகாரதிகளின் பிறப்புரிமையா? எங்களுடையது குறைவாகவா? சுய இராஜ்யத்தின் அதிகாரம் அனைவருக்கும் கிடைத்திருக்கிறதா? அல்லது கொஞ்சம் தான் கிடைத்திருக்கிறதா? இந்த விஷயத்தின் மேல் முழுமையான உறுதியோடு இருக்க வேண்டும். எனவே தன்னுடைய அனைத்து கர்மேந்திரியங்களும் கட்டளைக்குட்பட்டு இருக்கிறதா என்று சோதனை செய்யுங்கள். கர்ம இந்திரியங்கள் சுய இராஜ்ய அதிகாரி குழந்தைகள் உங்களுடைய (வேலைக்காரர்கள் தான் இல்லையா? எஜமானனாகவோ இல்லையே? நீங்கள் எஜமானனாக இருக்கிறீர்கள், இது சரி தானே? அல்லது வேலைக்காரர்கள் எஜமானனாக இருக்கிறார்கள் மற்றும் நீங்கள் வேலைக்காரர்கள் ஆகி விடுகிறீர்களா?

அப்படி குழந்தைகளின் நிலையில் அனைத்தையும் விட அதிகமாக அதிகார நிலையை மறக்கச் செய்யக்கூடியது மற்றும் அவ்வப்பொழுது ராஜாவிலிருந்து தன்னுடைய வசமாக்கக்கூடியது மனம் என்று பாப்தாதா பார்த்தார். எனவே தந்தையின் மந்திரம் கூட மன்மனாபவ (மனதை என்னோடு ஈடுபடுத்துங்கள்) என்பதாகும். தன் (உடல்) மனாபவ, தன் (செல்வம்) மனாபவ அல்லது புத்தி மனாபவ என்றில்லை. மன்மனாபவ தான். அப்படி மனம், தன்னுடைய பிரபாவத்தை ஏற்படுத்தி விடுகிறது. மனதின் வசத்தில் வந்து விடுகிறார்கள். பாருங்கள் ஏதாவது சிறிய வீணான விஷயம் மற்றும் வீணான சூழ்நிலை மேலும் வீணான காட்சி ஆகிய அனைத்தின் பிரபாவம் எதன் மேல் ஏற்படுகிறது? மனதின் மேல் தான் பிரபாவம் ஏற்படுகிறது தான் இல்லையா? பின்பு புத்தி அதற்கு சகயோகம் கொடுக்கிறது. மனம் மற்றும் புத்தி ஒருவேளை அதன்படியே நடந்து கொண்டிருக்கிறது என்றால் சம்ஸ்காரம் ஆகி விடுகிறது. இப்பொழுது கூட என்னுடைய வீணான சம்ஸ்காரமாக எது இருக்கிறதோ அது எப்படி உருவானது? என்று தன்னை சோதனை

செய்யுங்கள், உதாரணமாக யாருடைய சம்ஸ்காரமோ சிறிய விஷயத்தில் மனதில் ஃபீலிங்-ல் (உணர்ச்சி வசப்படுவதில்) வருவதற்கான சம்ஸ்காரம் ஆகி விட்டது என்றால் இந்த சம்ஸ்காரம் எப்படி உருவானது? பின்பு விரும்பவில்லை, நினைக்கவும் இல்லை ஆனால் நடந்து விடுகிறது என்று கூறுகிறார்கள். இதைத் தான் சம்ஸ்கார வசம் என்று கூறுவது. சிலருக்கு கொஞ்ச நேரத்தில் மனம் சோர்வு ஆகி விடுகிறது, கொஞ்சம் பார்த்தார், கேட்டார் மற்றும் மனம் சோர்வு ஆகி விட்டது. பின்பு யாராவது என்ன என்று கேட்டார்கள் என்றால் என்ன கூறுவார்கள். ஒன்றுமில்லை, இது என்னுடைய சம்ஸ்காரம் என்று கூறுவார்கள். சரியாகி விடும். இது சம்ஸ்காரம் என்று கூறுவார்கள் ஆனால் இது எப்படி உருவானது? மனம் மற்றும் புத்தியின் ஆதாரத்தினால் சம்ஸ்காரம் உருவாகி விட்டது. அப்படி விதவிதமான சம்ஸ்காரம் இருக்கிறது, எது பிராமண சம்ஸ்காரமே இல்லையோ, நீங்கள் யார் என்று யாரிடமாவது கேட்டால் என்ன கூறுவார்கள்? பிரம்மா குமாரி அல்லது பிரம்மா குமார் என்று தான் கூறுவார்கள். அப்படி பிரம்மாவின் குழந்தைகள் என்றால், என்னவாக ஆகிறார்கள்? பிராமணன் ஆனால் எப்பொழுது வீணான சம்ஸ்காரத்தின் வசமாகி விடுகிறார்கள் என்றால், அந்த நேரம் பிரம்மா குமார், பிராமணர்களாக இருக்கிறீர்களா அல்லது சத்திரியர்களா? அந்த நேரம் யாராக இருக்கிறீர்கள்? ஒருவேளை தன்னோடு இது இல்லை, இது இல்லை என்று யுத்தம் செய்கிறீர்கள் என்றால் பிராமணனா அல்லது சத்திரியனா? சில குழந்தைகள் இரண்டு நாட்களாக என் மனதில் குஷியில்லாமல் போய் விட்டது. ஏன் என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள். பார்க்கப்போனால் உள்மனதில் என்ன காரணம் என்று தெரிந்திருக்கிறார்கள் ஆனால் வெளிமுகமாக என்ன காரணம் என்று தெரியவில்லை என்று கூறுகிறார்கள் ஆனால் அந்த நேரத்தில் பிராமணனா அல்லது சத்திரியனா? யாருக்காவது குஷியில்லாமல் ஆகி விட்டது என்றால் அவர் பிராமணனா? அப்படி எப்பொழுதாவது பிராமணன் ஆகிறீர்கள் மற்றும் எப்பொழுதாவது சத்திரியன் ஆகிறீர்களா? அனைவரும் நாங்கள் எஜமானர்கள் என்று கூறினீர்கள் ஆனால் அந்த நேரம் என்னவாக இருக்கிறீர்கள்? அந்த நேரம் எஜமானனாகவா அல்லது அடிமையாகவா?

அப்படி எஜமான நிலையை அசைக்கக் கூடியது விசேஷமாக மனமாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். நீங்கள் சுய இராஜ்ய அதிகாரி, இராஜாவாக இருக்கிறீர்கள், மனம் உங்களுடைய மந்திரியாகும். அல்லது மனம் இராஜாவாகவும் மற்றும் நீங்கள் மந்திரியாகவும் இருக்கிறீர்களா? நீங்கள் இராஜா தான் இல்லையா, மனம் இராஜாவாக வா? இல்லையே? மந்திரியாக இருக்கிறது, சகயோகியாக இருக்கிறது. எனவே மனதின் மேல் உள்ள அதிகார நிலை எப்பொழுதுமே இருக்க வேண்டும் அப்பொழுது தான் சுயராஜ்ய அதிகாரி என்று கூறுவோம். இல்லையென்றால் சில நேரம் அதிகாரியாகவும், சில நேரம் அடிமையாகவும் இருக்கிறீர்கள். இதற்கான காரணம் என்ன? ஏன் பரிவர்த்தனை ஏற்படுவதில்லை? எப்பொழுது புரிந்தும் கொள்கிறீர்கள். இருந்தும் சம்ஸ்காரத்தின் வசம் ஆகி விடுகிறீர்கள். எனவே முதலில் மனதைக் கட்டுப்படுத்துங்கள். தன்னை இராஜா என்று கூறுகிறீர்கள் ஆனால் இராஜாவின் அர்த்தமே யாரிடம் ஆளுமை சக்தி (ரூலிங் பவர்) இருக்கிறதோ அவர் தான். ஒருவேளை பெயர் இராஜா மற்றும் அவரிடம் ரூலிங் பவர் இல்லை என்றால் அவருடைய நிலைமை என்னவாகும்? அவருடைய இராஜ்யம் நடக்குமா? நடக்காது இல்லையா? எனவே ரூலிங் பவர் எத்தனை சதவிகிதத்தில் வந்திருக்கிறது என்று சோதனை செய்யுங்கள்.

ஒரு தவறை அதிகமானோர் செய்கிறீர்கள், அதன் காரணமாகவும் சம்ஸ்காரத்தின் மேல் வெற்றி அடைய முடிவதில்லை. வெகு காலம் எடுக்கிறது. நாளையிலிருந்து செய்ய மாட்டோம் என்றும் நினைக்கிறீர்கள் ஆனால் எப்பொழுது நாளை வருகிறதோ அப்பொழுது இன்றைய விஷயம், நேற்றையதை விட பெரியதாகி விடுகிறது. நேற்று சிறிய விஷயமாக இருந்தது. இன்று மிகப் பெரிய விஷயமாக இருந்தது இல்லையா? என்று கூறுகிறார்கள். அப்படி பெரிய விஷயமாக இருந்த காரணத்தினால் கொஞ்சம் அப்படி ஆகி விட்டது, பின்பு சரி செய்து விடுவோம் என்று பெரியவர்களுக்கு தங்களுடைய மனதின் ஆறுதலைக் கொடுக்கிறீர்கள். மேலும் இந்த ஆறுதலைக் கூறி நடக்கிறீர்கள், ஆனால் இது ஆறுதல் இல்லை, ஏமாற்றம் ஆகும். அந்த நேரம் கொஞ்ச நேரத்திற்காக தனக்கும் அல்லது மற்றவர்களுக்கும், அவ்வளவு தான் முடிந்து விட்டது இனி சரியாகி விடும் என்று ஆறுதல் கூறுகிறீர்கள் ஆனால் தனக்கு ஏமாற்றம் கொடுக்கும் இந்தப் பழக்கத்தை

உறுதியாக்கிக் கொண்டே செல்கிறீர்கள். இது அந்த நேரம் தெரிவதில்லை ஆனால் எப்பொழுது நடைமுறையில் ஏமாற்றம் கிடைக்கிறதோ அப்பொழுது இதுவோ ஏமாற்றமாக இருந்தது என்று புரிந்து கொள்கிறீர்கள். அப்படி இந்த தவறை ஏன் செய்கிறீர்கள். பெரியவர்களோ அல்லது சிறியவர்களோ எப்பொழுது ஒவ்வொருவருக்கும் அறிவுரை கூறுகிறீர்கள் என்றால் என்ன கூறுகிறீர்கள்? இது என்னுடைய சுபாவம், இது என்னுடைய சம்ஸ்காரம், அதாவது சிலருக்கு ஃபீலிங்கில் வருவதற்கான, சிலருக்கு சிலரிடமிருந்து ஒதுங்குவதற்கான, சிலருக்கு அடிக்கடி பரசிந்தனை (மற்ற / மற்றவர்களின் விஷயங்களை சிந்திப்பது) செய்வதற்கான, சிலருக்கு பரசிந்தனை கேட்பதற்கான, அப்படி விதவிதமாக இருக்கிறது. இதையோ நீங்கள் தந்தையை விட அதிகமாக தெரிந்திருக்கிறீர்கள் ஆனால் எதை நீங்கள் என்னுடைய சம்ஸ்காரம் என்று கூறினீர்களோ அது என்னுடையதா? என்று பாப்தாதா கேட்கிறார்? யாருடையது? (இராவண்னுடையது) அப்படியானால் ஏன் என்னுடையது என்று கூறினீர்கள். இது இராவணனின் சம்ஸ்காரம் என்றோ ஒருபொழுதும் கூறுவதில்லை. என்னுடைய சம்ஸ்காரம் என்று கூறுகிறீர்கள். இந்த 'என்னுடைய' என்ற வார்த்தை தான் முயற்சி செய்வதை தொய்லாக்குகிறது. இந்த இராவணனினுடையதை ஏன் மறைத்து வைத்திருக்கிறீர்கள். மனிதர்களோ இராவணனைக் கொன்ற பிறகு எரிக்கிறார்கள், எரித்த பிறகு என்னவெல்லாம் மிச்சம் இருக்கிறதோ அதையும் தண்ணீரில் போட்டு விடுகிறார்கள். மேலும் நீங்கள் என்னுடையதாக்கி வைத்து விட்டீர்கள். அப்படி எங்கு இராவணனினுடையது இருக்கிறதோ அங்கு அசுத்தத்தின் கூடவே சுத்த சம்ஸ்காரம் சேர்ந்தே இருக்குமா என்ன? மேலும் இராஜ்யம் யாருடையது? அசுத்தத்தினுடையது. சுத்தத்தினுடையதோ இல்லை தான் இல்லையா? அப்படி இராஜ்யம் அசுத்தத்தினுடையது. மேலும் அசுத்த பொருளை, எப்படி தங்கம் அல்லது வைரத்தை பாதுகாப்பாக வைக்கிறார்களோ, அப்படி உங்களிடம் பாதுகாப்பாக வைத்துக் கொண்டீர்கள். எனவே அசுத்தம் மற்றும் சுத்தம் இரண்டிற்கும் யுத்தம் நடந்து கொண்டே இருக்கிறது என்றால், அடிக்கடி பிராமணனிலிருந்து சத்திரியன் ஆகி விடுகிறீர்கள். என்னுடைய சம்ஸ்காரம் எது? எது தந்தையின் சம்ஸ்காரமோ, அதிலும் விசேஷமாக உலகிற்கு நன்மை செய்பவர், நற்சிந்தனையுள்ளவர். அனைவர் மேலும் சுபபாவனை

மற்றும் சுபவிருப்பங்கள் வைப்பவர். இது தான் என்னுடைய உண்மையான சம்ஸ்காரம். மற்றபடி வேறு எதுவும் இல்லை. மேலும் இதே அசுத்தம், எது உள்ளே மறைந்து இருக்கிறதோ அது சம்பூர்ண சுத்தமாக ஆவதில் தடை ஏற்படுத்துகிறது. அப்படி என்ன ஆக விரும்புகிறீர்களோ, லட்சியம் வைக்கிறீர்களோ அதற்கும் நடைமுறைக்கும் வித்தியாசம் ஏற்பட்டு விடுகிறது.

இந்த வைர விழாவில் தந்தைக்குச் சமமாக வைரமாக ஆகவே தான் வேண்டும் என்று பெரும்பான்மையோர் யோசித்திருக்கிறார்கள். அனேகர் தன்னுடைய எண்ணத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள், எழுதவும் செய்திருக்கிறார்கள். இது எண்ணமா அல்லது யோசிப்பதா? யோசிக்க வேண்டும் என்றால் யோசித்துக் கொள்ளுங்கள் ஆனால் வரிசை எண் பின்னால் கிடைக்கும். யார் செய்வாரோ அவர் அடைவார் என்ற பழமொழியும் இருக்கிறது. யார் யோசிப்பாரோ அவர் அடைவார் என்பதோ இல்லை தான் இல்லையா? அப்படி எண்ணமோ மிக நல்லதாக எண்ணுகிறீர்கள் செய்கிறீர்கள். பாப்தாதாவும் படித்து, கேட்டு குஷி அடைகிறார் ஆனால் இந்த இராவணனினுடையதை மறைத்து வைத்திருக்கிறீர்கள் இல்லையா, அது மனதின் அதிபதியாக ஆகவிடுவதில்லை. என்னுடைய பழக்கம், என்னுடைய சுபாவம், என்னுடைய சம்ஸ்காரம், என்னுடைய நேச்சர் (இயல்பு) ஆகிய இவை அனைத்தும் இராவணனின் சொத்தை தன்னுடன் உள்ளத்தில் வைத்திருக்கிறீர்கள் என்றால் திலாராம் (உள்ளத்தை கொள்ளை கொண்டவர்) எங்கு அமருவார். இராவணனின் ஆஸ்தியின் மேல் அமரவா என்ன? எனவே இப்பொழுது இதை அகற்றுங்கள்.

எப்பொழுது என்னுடைய வார்த்தை என்று கூறுகிறீர்களோ அப்பொழுது என்னுடைய சுபாவம் அல்லது என்னுடைய நேச்சர் என்ன என்று நினைவு செய்யுங்கள். உலகிலுள்ளவர்களும் மனம் ஒரு குதிரை, மிகவும் ஓடுகிறது, மிக வேகமாக ஓடுகிறது என்று கூறுகிறார்கள் ஆனால் உங்களுடைய மனம் ஓட முடியுமா? உங்களுடைய ஸ்ரீமத் என்ற கடிவாளம் மிக உறுதியானது. கடிவாளம் சரியாக இருக்கிறது என்றால், எந்தவிதமான குழப்பமும் ஏற்படவே முடியாது. என்ன செய்கிறீர்கள்? பாப்தாதாவோ பார்த்துக் கொண்டேதான் இருக்கிறார் இல்லையா? ஒருவேளை ஆனால் சிரிப்பும் வருகிறது. எப்படி

குதிரையில் அமர்ந்து ஓட்டிக் கொண்டிருக்கிறீர்கள். கடிவாளம் கையில் இருக்கிறது. ஒருவேளை சென்று கொண்டிருக்கும்போதே கடிவாளத்தை பிடிப்பவரின் புத்தி அல்லது மனம் ஏதாவது பக்கத்து காட்சிகளின் பக்கம் ஒன்றிப் போய்விட்டது என்றால் என்னவாகும்? கடிவாளத்தின் பிடி தொய்வாகி விடும். மேலும் கடிவாளம் தொய்வாவதினால் மனம் அவசியம் சஞ்சலத்தை ஏற்படுத்தும். எனவே ஸ்ரீமத்தின் கடிவாளத்தை தன்னுடைய மனதில் எப்பொழுதும் நினைவில் வையுங்கள். எப்பொழுதாவது ஏதாவது விஷயம் என்றாலும் மனம் சஞ்சலப்பட்டாலும் ஸ்ரீமத் என்ற கடிவாளத்தை இன்னும் உறுதியாகப் பிடியுங்கள். பிறகு ஒன்றுமே நடக்காது. பின்பு லட்சியத்தை சென்றடைந்து விடுவீர்கள். அப்படி ஸ்ரீமத் ஒவ்வொரு அடிக்காகவும் இருக்கிறதே அன்றி பிரம்மச்சாரியாக ஆகு என்பதற்காக மட்டுமல்ல. ஒவ்வொரு காரியத்திற்காகவும் ஸ்ரீமத் இருக்கிறது. நடப்பது, சாப்பிடுவது, குடிப்பது, கேட்பது, சொல்வது இந்த அனைத்திற்கும் ஸ்ரீமத் இருக்கிறது. அப்படித் தான் இல்லையா? ஒருவேளை நீங்கள் பரசிந்தனை செய்கிறீர்கள் என்றால் இது ஸ்ரீமத்படி நடப்பதா என்ன? ஸ்ரீமத்தைக் கடைப்பிடிப்பதில் தொய்வு ஏற்படுத்தினீர்கள் என்றால் மனம் சஞ்சலம் ஆவதற்கு வாய்ப்பு கிடைத்து விடுகிறது. பின்பு அதற்கு பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அப்படி பழக்கத்தை ஏற்படுத்துபவர் யார்? நீங்களே தான் இல்லையா? எனவே முதலில் மனதின் இராஜா ஆகுங்கள். உள்ளுக்குள்ளேயே இந்த மாதிரி தன்னுடைய இராஜ்யத்தையோ ஸ்தாபனை செய்து கொண்டிருக்கவில்லையே என்ற சோதனையை செய்யுங்கள். எப்படி இன்றைய நாட்களின் இராஜ்யத்தில் தனி கூட்டத்தை உருவாக்கி பதவியில் வந்து விடுகிறார்கள். மேலும் முந்தையவர்களை அசைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள் என்றால் மனமும் அதே மாதிரி செய்கிறது, புத்தியை தன்னுடையதாக ஆக்கி விடுகிறது. வாயை, காதை அனைத்தையும் தன்னுடையதாக்கி விடுகிறது. எனவே ஏ! மனம் என்ற மந்திரியே என்ன செய்தாய் என்று தினசரி செய்தியைக் கேளுங்கள் மற்றும் சோதனை செய்யுங்கள். எங்காவது ஏமாற்றம் கொடுக்கவில்லையே? எங்காவது உள்ளுக்குள்ளேயே தனக்காக ஒரு கூட்டத்தை உருவாக்கி உங்களை இராஜாவிற்குப் பதிலாக அடிமையாக ஆக்கி விடவில்லையே? அந்த மாதிரி ஏற்பட்டு விட வேண்டாம். பாருங்கள் தொடக்க காலத்தில் பிரம்மாபாபா தினசரி இந்த தர்பாரைக் கூட்டினார். அதில் அனைத்து

சகயோகிகளிடமிருந்து செய்தியைக் கேட்டார். இது பிரம்மாபாபாவின் தொடக்க காலத்தில் தினசரி நடவடிக்கையாக இருந்தது. நீங்களும் கேட்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி பிரம்மாபாபாவும் கடுமையாக உழைத்திருக்கிறார் தான் இல்லையா? கவனம் வைத்தார் அதனால் சுய இராஜ்ய அதிகாரி ஆகி பின்பு உலக இராஜ்ய அதிகாரியாக ஆனார். சிவதந்தையோ உடலற்றவராக இருக்கிறார் ஆனால் பிரம்மாபாபாவோ உங்களுக்குச் சமமாக முழு வாழ்க்கையில் முயற்சி செய்து பிராப்தியை அடைந்தார். எனவே பிரம்மாபாபாவைப் பின்பற்றி நடங்கள். இந்த மனம் மிகவும் சஞ்சலமானது. மேலும் மிகவும் துரிதமாகச் செயல்படுவது, ஒரு நொடியில் உங்களை அனைத்து வெளிநாடுகளில் சுற்றிக் கொண்டு வந்து விடும். அப்படி என்ன கேட்டீர்கள்? குழந்தைகளாக இருக்கும் நீங்கள் அதிபதிகள் ஆக வேண்டும். குழந்தையாகவோ ஆகி விட்டோம். ஆஸ்தியோ கிடைத்து விட்டது என்று குஷி அடையாதீர்கள் ஆனால் ஒருவேளை ஆஸ்தியின் அதிபதி ஆகவில்லை என்றால் குழந்தையாக இருந்து என்ன ஆனது? குழந்தையின் அர்த்தமே எஜமானன் தான் ஆனால் சுய இராஜ்யத்திலும் எஜமானன் ஆகுங்கள். ஆஸ்தியைப் பார்த்து மட்டும் குஷி அடையாதீர்கள். சுய இராஜ்ய அதிகாரி ஆகுங்கள். இவ்வளவு சின்னஞ்சிறிய கண் புள்ளியாக இருக்கிறது. அதுவும் ஏமாற்றம் கொடுக்கிறது. அப்படி எஜமானன் இல்லை என்றால் அப்பொழுது ஏமாற்றம் செய்கிறது. எனவே பாப்தாதா அனைத்து குழந்தைகளை சுய இராஜ்ய அதிகாரி இராஜாவாகப் பார்க்க விரும்புகிறார். அதிகாரி அடிமையாக இருக்க மாட்டார். புரிந்ததா? அப்படியானால் என்னவாக ஆவீர்கள். குழந்தையாக இருப்பவர்கள் எஜமானன் ஆவீர்கள். நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள குழந்தையிலிருந்து எஜமானன் இரட்டை அதிகாரத்தைப் பெறக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயராஜ்ய அதிகாரியாகி தன்னுடைய இராஜ்யத்தை நடத்தக்கூடிய பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தந்தையின் சம்ஸ்காரம் எதுவோ அது தான் என்னுடைய சம்ஸ்காரம் என்ற விதி மூலம் சேவையில் முன்னேறிச் செல்லக்கூடிய உயர்ந்த சேவாதாரி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: ஆசீர்வாதங்கள் என்ற ராக்கெட் மூலமாக அதி வேகமாக மேலே செல்லக்கூடிய தடைகளால் பாதிக்கப்படாதவர் ஆகுக!

தாய் தந்தை மற்றும் அனைவரின் சம்மந்தத்தில் வந்து கொண்டு ஆசீர்வாதங்களின் பொக்கிஷங்களினால் தன்னை நிரப்பினீர்கள் என்றால் ஒருபொழுதும் முயற்சி செய்வதில் கஷ்டப்பட வேண்டியது இருக்காது. எப்படி அறிவியலில் அனைத்தையும் விட அதிவேகமாக செல்வது ராக்கெட்டாக இருக்கிறது. அதே போல் சங்கமயுகத்தில் அனைத்தையும் விட அதி வேகமாக மேலே செல்வதற்கான இயந்திரம் மற்றும் அதையும் விட உயர்ந்த ராக்கெட் "அனைவரின் ஆசீர்வாதங்கள்" ஆகும். இதன் மூலம் எந்தவொரு தடையும் கொஞ்சம் கூட தொடக்கூட முடியாது. இதனால் தடையால் பாதிக்கப்படாதவர்கள் ஆகி விடுவீர்கள், யுத்தம் செய்ய வேண்டியதாக இருக்காது.

சுலோகன்: பரோபகாரத்தின் பாவனையினால் நிரம்பியவர் ஆவது தான் உயர்ந்த நிலைக்கான ஆதாரமாகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 18.01.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# எப்பொழுதும் சக்தியுடனிருப்பதற்கான எளியவிதி -நற்சிந்தனை செய்யுங்கள் மற்றும் நற்சிந்தனையாளர் ஆகுங்கள்!

இன்று அன்பு நிரம்பிய நினைவு நாளாகும். நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளின் அன்பின், இதயத்தின் ஓசை பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. இந்த அன்பு சுக சொரூபமான அன்பாகும். பாப்தாதா இன்றைய நாளை நினைவு நாள் என்று கூறுவதோடு சக்தி நிறைந்த நாள் என்றும் கூறுகிறார். ஏனென்றால் தந்தை பிரம்மா தன்னுடைய சாகார சொரூபத்தில் அனைத்து காரியங்களையும் செய்வதற்கான பலன்களை அதாவது சக்திகளை சாகார ரூபத்தில் குழந்தைகளுக்கு அர்ப்பணம் செய்தார். இந்த நாளை மகன் தந்தையை வெளிப்படுத்துவதற்கான வரதான நாள் என்று கூறப்படுகிறது. சாகார ரூபத்தில் குழந்தைகளை முன்னுக்கு வைத்தார் மற்றும் பரிஷ்தா ரூபத்தில் தன்னுடைய குழந்தைகளுக்கு மற்றும் உலகிற்கு சேவையை ஆரம்பம் செய்தார். இந்த 18-ஜனவரியின் நாள் பிரம்மாபாபா சம்பூர்ண பற்றுதலை வென்று நினைவு சொரூபமான நாளாக இருந்தது. எப்படி கீதையின் 18வது அத்தியாயத்தின் சாரமாக -பகவான், அர்ஜுனனை பற்றுதலை வென்று நினைவு சொரூபமானவராக ஆக்கினார் என்றிருக்கிறது. பிரம்மாபாபா எவ்வளவு குழந்தைகளுக்காக மிக அன்பானவராக இருந்தார், எப்பொழுதும் சேவையின் காரணமாக குழந்தைகளை எவ்வளவு நினைவு செய்தார் என்று அனுபவியான குழந்தைகளின் அனுபவமாக இருக்கிறது இல்லையா? அப்படி இது 18-ன் நினைவுச் சின்னமாகும். பற்றுதல் இருக்கவில்லை ஆனால் உள்ளப்பூர்வமான அன்பு இருந்தது. ஏனென்றால் எதில் தன்னுடைய சுயநலம் இருக்குமோ அதை மோகம் என்று கூறப்படும். அப்படி பிரம்மாபாபாவிற்கு தன்னுடைய சுயநலம் இருக்கவில்லை, ஆனால் சேவைக்காக குழந்தைகள் மேல் மிகுந்த அன்பு இருந்தது. உடன்

இருந்தும் கூட, குழந்தைகளை எதிரில் பார்த்தும் கூட உடல் ரூபத்தில் யாருடைய நினைவும் வாட்டவில்லை. முற்றிலும் விலகிய மற்றும் அன்பானவராக இருந்தார். எனவே தான் நினைவு சொரூபம் பற்றுதலை வென்ற நிலை என்று கூறப்படுகிறது. என்னுடையது என்று எதுவும் இருக்கவில்லை. உடல் உணர்விலிருந்தும் பற்றுதலை வென்ற நிலை, அப்படி இந்த நாள் அந்த மாதிரி தந்தையைப் பின்பற்றி நடக்கும் பாடத்தை கற்பிக்கும் நாளாக இருந்தது.

இந்த அவ்யக்த நாள் உலகின் அறியா ஆத்மாக்களை பரமாத்மா காரியத்தின் பக்கம் எழுப்பி விடுவதாக இருந்தது. ஏனென்றால் பெரும்பான்மையோர் பிரம்மாபாபாவைப் பார்த்து இவர்களின் பரமாத்மா பிரம்மா என்று நினைத்தார்கள் மற்றும் புரிந்து கொண்டிருந்தார்கள். இந்த பிரம்மா குமாரிகள், பிரம்மாவைத் தான் பகவான் என்று நம்புகிறார்கள். மேலும் பிரம்மா தன்னுடைய சாகார பங்கை மாற்றம் செய்தார் என்றால், இப்பொழுதோ பிரம்மா குமாரிகளின் பகவான் சென்று விட்டார். மேலும் இந்த பிரம்மா குமாரிகளின் காரியம் இன்று இல்லை, நாளை முடிவடைந்து விடும் என்று நினைக்க ஆரம்பித்தார்கள் ஆனால் இவர்களை செய்விப்பவர் பிரம்மா மூலமாக பரமாத்மா தான் இருந்தார், இருக்கிறார் மற்றும் கடைசி வரை இருப்பார் என்று நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். அப்படி இது பரமாத்மாவின் காரியமேயன்றி எந்தவொரு மனிதனின் காரியம் இல்லை. இதை பிரம்மாபாபாவின் சாகார பங்கு பரிவர்த்தனை ஆன பிறகு இவர்களை ஏதோவொரு சக்தி நடத்திக் கொண்டிருக்கிறது என்று நினைத்தார்கள். இப்பொழுது கூட பாலம் அவர்கள் பரமாத்மாவைத் தெரிந்திருக்கவில்லை ஆனால் ஏதோ சக்தி காரியம் செய்து கொண்டிருக்கிறது, அது எந்த சக்தி, அதையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் கடைசியிலோ புரிந்து கொள்ளத் தான் வேண்டும். அப்படி இது யாருடைய காரியம்? பிரம்மாபாபாவினுடையதா அல்லது பிரம்மா மூலமாக பரமாத்மாவினுடையதா? யாருடைய காரியம்?

எந்தக் குழந்தைகள் சாகார பாபாவிற்குப் பிறகு வந்திருக்கிறார்களோ அவர்கள் பிரம்மாபாபா தன்னுடைய சாகார பங்கை இவ்வளவு விரைவில் ஏன் முடித்தார் என்று நினைக்கிறார்கள். நாங்களும்

பார்த்திருப்போம் இல்லையா, சந்தித்திருப்போம் இல்லையா? அப்படி யோசிக்கிறார்கள் தான் இல்லையா ஆனால் சென்ற கல்பத்தின் வர்ணனையாக கௌரவ சேனையின் பொறுப்பாளர்களான மகாவீரர்களின் நன்மை யார் மூலமாக ஆனது? சக்திகள் மூலமாக ஆனது இல்லையா? அப்படி சக்திகளின் பங்கு நாடகத்தில் சாகார ரூபத்தில் அடங்கியிருக்கிறது. மேலும் தாய்மை சக்தியின்றி இந்த உலகிற்கு நன்மை ஏற்படுவது அசம்பவம் என்று அனைவரும் நம்பவும் செய்கிறார்கள். அப்படி பிரம்மாபாபா பரிஷ்தாவாக ஏன் ஆனார்? சாகார பங்கு ஏன் பரிவர்த்தனை ஆனது? ஒருவேளை பிரம்மாபாபா பரிஷ்தா ரூபத்தை தாரணை செய்யவில்லை என்றால் இத்தனை ஆத்மாக்கள் நீங்கள் இங்கு வந்து சேர்ந்திருக்க முடியாது. ஏனென்றால், சூழ்நிலையின் தவறான நம்பிக்கைகள் இந்த உலக புரட்சியின் காரியத்தை சாதாரணமானதாக ஆக்கிக் கொண்டிருந்தது. அப்படி பிரம்மாபாபா பரிஷ்தா ஆவது அதிகத்திலும் அதிகமாக குழந்தைகள் உங்களின் பாக்கியம் திறப்பதற்கான காரணமாக இருந்தது. இப்பொழுது பரிஷ்தா ரூபத்தில் சேவையின் அதிவேகத்தை நீங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் தான் இல்லையா? வேகம் அதிகரித்ததா அல்லது குறைந்ததா? அதிகரித்தது தான் இல்லையா? அதனால் தான் நீங்கள் இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள், இல்லையென்றால் மிக நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்திருப்பீர்கள். அப்படி இன்றைய நாள், எப்படி வெளியுலக மனிதர்கள். யாரையாவது குறிப்பிட்டு, அவர் போய் விட்டார், போய் விட்டார் என்று கடைபிடிக்கிறார்கள் இல்லையா? அந்த மாதிரியானது இல்லை ஆனால் நாம் அந்த மாதிரி நினைவு சொரூப பற்றுதலை வென்றவராக ஆக வேண்டும், தந்தையைப் பின்பற்ற வேண்டும் என்ற ஊக்கம் உற்சாகம் வருகிறது. இந்த நடைமுறை பாடத்தைப் படிப்பதற்கான நாள் ஆகும்.

இன்று உங்களில் யாருக்காவது இதயத்தின் துக்கக் கண்ணீர் வந்ததா? வெளிவந்ததா அல்லது உள்ளுக்குள்ளேயே கொஞ்சம் வந்ததா? கொஞ்சமாவது துக்கத்தின் உணர்வு யாருக்கு வந்ததோ அவர்கள் கையை உயர்த்துங்கள். துக்கம் ஏற்பட்டதா? ஏற்படவில்லையா? இன்றைய நாளோ பிரம்மாபாபாவிற்கு சேவையின் துணைவனாக ஆகும் நாளாகும். நீங்கள் அனைவரும் துணைவர்களா அல்லது பார்வையாளர்களா? சேவையில் துணைவர்கள் மற்றும் மாயாவின்

சூழ்நிலைகளிலிருந்து சாட்சியாக இருப்பவர். மாயாவையோ வரவேற்பு செய்தீர்களா அல்லது ஐயோ என்னவாகி விட்டது என்று பயப்படுகிறீர்களா? கொஞ்சம் கொஞ்சம் பயப்படுகிறீர்களா? மாயாவின் சிறு சிறு ரூபங்களையோ நீங்களும் தெரிந்து கொண்டீர்கள். மேலும் மாயாவும் இவர்கள் தெரிந்து கொண்டார்கள் என்று நினைக்கிறது ஆனால் எப்பொழுது ஏதாவது கொடூரமான ரூபத்தின் மாயா வந்தது என்றால், எப்பொழுதும் பார்வையாளர் ஆகி காட்சியைப் பாருங்கள். எப்படி குஸ்தியின் விளையாட்டு இருக்கிறது இல்லையா, பார்த்திருக்கிறீர்களா அல்லது காண்பிக்க வேண்டுமா? இங்கு குழந்தைகள் செய்து காண்பிக்கிறார்கள் தான் இல்லையா? அப்படி உதாரணமாக இவர்கள் குஸ்தியின் விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். நன்றாக அடி,பயப்படாதே, விளையாட்டு தான். அப்படி பார்வையாளராகி விளையாடுவதில் மகிழ்ச்சி வருகிறது. மேலும் மாயா வந்து விட்டது, மாயா வந்து விட்டது என்றால் பயந்து விடுகிறார்கள். மாயாவில் இப்பொழுது கொஞ்சம் கூட பலமே இல்லை. வெளிமுகமாக மட்டும் புலியின் ரூபம், ஆனால் அது பூனை கூட கிடையாது. உங்களை பயமுறுத்துவதற்காக மட்டும் பெரிய ரூபத்தை எடுத்து வருகிறது. பின்பு இப்பொழுது என்ன ஆகும் என்று தெரியவில்லை என்று நினைக்கிறீர்கள். செய்வேன், எப்படி ஆகும். என்னவாகும் என்று ஒருபொழுதும் கூறாதீர்கள். ஆனால் பாப்தாதா அப்படி என்ன ஏற்கனவே, என்ன நடந்து கொண்டிருக்கிறதோ அது நல்லது. மேலும் என்ன நடக்கப் போகிறதோ அது இன்னும் நல்லது என்ற பாடத்தைப் படிப்பித்திருக்கிறார். பிராமணன் ஆவது என்றால் நல்லதே நல்லது தான். ஒருபொழுதும் உங்களுடைய கனவில் கூட வராத விஷயமாகக் கூட இருக்கலாம். அனேக விஷயங்கள் அந்த மாதிரி இருக்கிறது. அஞ்ஞான காலத்தில் நடந்ததே இல்லை, ஆனால் ஞானத்திற்குப் பிறகு நடந்தது, அஞ்ஞான காலத்தில் ஒருபொழுதும் வியாபாரத்தில் ஏற்ற, இறக்கம் இல்லாமல் இருந்தது மேலும் ஞானத்திற்கு வந்த பிறகு அப்படி ஆகி விட்டது, பயப்பட்டு விடுகிறீர்கள். ஐயோ, ஞான வாழ்வையே விட்டு விடலாமா என்று யோசிக்கிறீர்கள் ஆனால் எந்தச் சூழ்நிலை வந்தாலும் அந்தச் சூழ்நிலையை தனக்கு கொஞ்ச நேரத்திற்காக பாடம் கற்பிப்பது என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஆசிரியர் என்ன செய்கிறார்? கல்வி அறிவுரை கொடுக்கிறார் இல்லையா? அப்படி சூழ்நிலை உங்களை விசேஷமாக

## 1996 அவ்யக்த முரளி

இரண்டு சக்திகளின் அனுபவியாக ஆக்குகிறது -ஒன்று சகித்துக் கொள்ளும் சக்தி, விலகியிருக்கும் நிலை, பற்றுதலை வென்ற நிலை. மேலும் இன்னொன்று எதிர்நோக்கும் சக்தியின் பாடத்தைக் கற்பிக்கிறது. அதன் மூலம் வரும் காலத்திற்காக இந்த சூழ்நிலையோ பாடம் கற்பிப்பதற்காக வந்திருக்கிறது என்று கற்றுக் கொள்ளுங்கள். மேலும் நானோ டிரஸ்டி, என்னுடையது என்று எதுவும் இல்லை என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள் என்றால், இதை வஞ்சகத்தோடோ சொல்வதில்லையே? உள்ளப்பூர்வமாகக் கூறுகிறீர்களா? டிரஸ்டியாக இருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் குடும்பஸ்தனாகவும் இருக்கிறீர்களா? சில நேரம் குடும்பஸ்தனாக ஆகி விடுகிறீர்களா? மேலும் சில நேரம் டிரஸ்டியாக ஆகி விடுகிறீர்களா?

புது ஆண்டில் பாப்தாதாவிற்கு இரண்டு நான்கு பொம்மைகள் கொடுத்திருந்தீர்கள். அதில் என்ன இருந்தது என்றால் ஒரு பக்கம் திருப்பினீர்கள் என்றால் சகோதரன். மற்றொரு பக்கம் திருப்பினீர்கள் என்றால் பெண்டு உருவம், ஒரே பொம்மை மாறி விடுகிறது. ஒரு விநாடியில் அதுவாக ஆகி விடுகிறது, அடுத்த விநாடியில் இதுவாக ஆகி விடுகிறது. அப்படி நீங்கள் இந்த நேரம் குடும்பஸ்தன் மற்றும் அடுத்த நேரம் டிரஸ்டி என்று அந்த மாதிரியான பொம்மையோ இல்லையே? கொஞ்சம் கொஞ்சம் அவ்வப்போது சில நேரம் ஆகி விடுகிறதா? பயந்து விடுகிறீர்கள் இல்லையா, பின்பு இவர் பயந்து விட்டார் என்று மாயா புரிந்து கொள்கிறது. நன்றாக அடி என்று கூறுகிறது. எனவே பயப்படாதீர்கள். டிரஸ்டியாக இருக்கிறீர்கள் என்றால் முன்பாகவே அனைத்திலிருந்தும் விடுபட்டு விட்டீர்கள். டிரஸ்டி என்றால் அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்து விட்டீர்கள். எனக்கு என்னவாகும்! அவ்வளவுதான். என்னவாகும், என்னவாகும் என்பது வந்தது என்றால் பிரச்சனையாகி விடுகிறது. அனைத்தும் நன்றாக இருக்கிறது, மேலும் நல்லது நடக்கத் தான் வேண்டும். இது நிச்சயம் -இதைத் தான் சக்தி நிறைந்த சொரூபம் என்று கூறுவது. அப்படி இன்றைய நாள் எது? சக்தி நிரம்பியவர் ஆவதற்கான பற்றுதலை வென்றவர் ஆவதற்கான நாளாகும். பாபாவின் நினைவு மட்டும் அதிகம் வரட்டும் பாடல் பாடுவதற்கான அவசியமே இல்லை. அப்படி பிரம்மாபாபா பரிஷ்தா ரூபம் ஆனது, டிராமாவில் பரமாத்மாவின் காரியத்தை பிரத்யக்ஷம் செய்வதற்காக காரணம் ஆகி

விட்டது. பிரம்மாபாபா இருக்கிறாரா அல்லது இல்லையா? (இருக்கிறார்). தென்படவில்லையே

பாருங்கள், காலதாமதமாக வந்திருக்கும் நீங்களோ மிகவும் அதிர்ஷ்டசாலிகள், ஏன்? இப்பொழுது சேவைக்காக சாதனங்கள் ஏற்கனவே தயாராகயிருக்கும் நேரத்தில் வந்திருக்கிறீர்கள். 60 வருடங்களைச் சேர்ந்தவர்கள் வெண்ணையை எடுத்தார்கள் ஆனால் வெண்ணையை சாப்பிடுபவர்கள் நீங்கள் வந்து விட்டீர்கள். இன்று யக்ஞ சரித்திரத்தைக் கேட்டிருப்பீர்கள் இல்லையா? இவ்வளவு கடும் உழைப்பை நீங்கள் செய்திருந்தீர்கள் என்றால் ஓடிவிட்டிருந்திருப்பீர்கள். மேலும் தற்சமயம் சேவைக்கான வாயுமண்டலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஜனாதிபதியானாலும், பிரதம மந்திரியானாலும் அல்லது ஏதாவது தலைவராக இருந்தாலும் பெரும்பான்மையோர் இவர்களுடைய காரியம் நல்லது என்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், நாம் செய்ய முடியுமா அல்லது முடியாதா, அது வேறு விஷயம். ஒவ்வொருவரின் பங்கு அவரவர்களுடையது, ஆனால் நல்ல காரியம் மேலும் இந்த காரியம் இன்னும் வரும் காலத்தில் அதிகரிக்க வேண்டும் என்ற இதையோ கூறுகிறார்கள் இல்லையா? முன்பு என்ன கூறினார்கள்? பிரம்மாகுமாரிகளின் முகத்தைக் கூட பார்க்கக்கூடாது என்று கூறினார்கள். ஒருவேளை தொடக்கக் காலத்தில் அழைப்பிதழ் கொடுக்கச் சென்றால் கூட கதவை மூடி விடுவார்கள். அப்படி நீங்களோ நல்ல நேரத்தில் வந்திருக்கிறீர்கள் இல்லையா? சேவைக்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. எவ்வளவு சேவை செய்ய விரும்புகிறீர்களோ அவ்வளவு செய்ய முடியும். சாகார பிரம்மாபாபாவிற்குப் பிறகு கூட பிரம்மா குமாரிகள் வெள்ளி விழாவைக் கொண்டாடினார்கள். பொன் விழாவைக் கொண்டாடினார்கள், இப்பொழுது வைர விழா வரை வந்து சேர்ந்து விட்டார்கள் என்ற இதையோ அனைவரும் உணருகிறார்கள். ஏனென்றால், ஏதாவது பெரிய குரு உடலை விட்டுச் சென்று விட்டார் என்றால் பிரச்சனை ஏற்பட்டு விடுகிறது. இங்கே ஏதாவது பிரச்சனை இருக்கிறதா என்ன? இங்கோ இன்னும் அதிகமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது, அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. இதன் மூலம் இந்தக் காரியத்தை செய்விப்பவர் தந்தை பரமாத்மா ஆவார் என்று நிரூபணம் ஆகிறது. இதற்கு மாத்யமாக பிரம்மாபாபா இருக்கிறார்.

இப்பொழுது கூட மாத்யம் பிரம்மாபாபா தான். இந்த பங்கு வேறு விதமானது ஆனால் மாத்யம் நாடகத்தில் முதலில் சாகார பிரம்மா இருந்தார். மேலும் இப்பொழுது பரிஷ்தா ரூபத்தில் பிரம்மா இருக்கிறார். பிரம்மாவை தந்தை என்று கூறுவோம், படைப்பவரோ பிரம்மா தான் இல்லையா? இந்த பங்கோ இடையிடையில் குழந்தைகளை பாலனை செய்வதற்காக காரணமாக இருந்தது மற்றபடி படைப்பவர் பிரம்மா மற்றும் படைப்புக் காரியத்தில் இப்பொழுதும், கடைசி வரையிலும் கூட பிரம்மாவின் பங்கு தான் இருக்கிறது.

அப்படி இன்று நாள் முழுவதிலும் யாரிடமாவது மாயா வந்ததா? ஏதாவது பேரன், பேத்திகளின் நினைவு வந்ததா? அப்படி எப்பொழுதும் இந்த மாதிரி சக்தி நிறைந்தவராக இருங்கள். மேலும் இதற்காக அனைத்தையும் விட சுலபமான விதி இரண்டு வார்த்தைகளை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு வார்த்தைகள் நினைவில் இருக்க முடியும் இல்லையா? முழு முரளியும் மறந்து விட்டாலும் ஆனால் இரண்டு வார்த்தையை நினைவில் வையுங்கள், மேலும் நடைமுறையில் செய்து கொண்டே இருங்கள். அந்த இரண்டு வார்த்தைகள், தெரிந்தும் இருக்கிறீர்கள் ஒன்றும் புதிய விஷயம் இல்லை, ஒன்று நற்சிந்தனை, எதிர்மறையையும் நேர்மறையாக ஆக்குங்கள். இதைத் தான் நற்சிந்தனை என்று கூறுவது. எதிர்மறை நேர்மறையாக ஆக முடியுமா? மேலும் மாற்றம் செய்ய முடியுமா? காரியம் செய்து கொண்டே நற்சிந்தனை ஓடியதா என்று இதை மட்டும் சோதனை செய்யுங்கள். மேலும் இரண்டாவது, அனைவருக்காகவும் நற்சிந்தனையாளர் ஆவது. நற்சிந்தனை மற்றும் நற்சிந்தனை செய்பவர் இரண்டிற்கும் சம்மந்தம் இருக்கிறது, ஒருவேளை நற்சிந்தனை இல்லை என்றால் நற்சிந்தனையாளராகவும் ஆக முடியாது. எனவே இந்த இரண்டு விஷயங்களில் கவனம் வைக்க வேண்டும். புரிந்ததா? என்ன செய்வீர்கள்? இதை மட்டும் மறந்து விடாதீர்கள். ஏனென்றால், இப்பொழுது அதிகமாக அந்த மாதிரி பிரச்சனைகள் இருக்கிறது என்று பார்த்தோம். மனிதர்கள் நீங்கள் கூறும் ஞான வார்த்தைகளைப் புரிந்து கொள்வதில்லை ஆனால் நற்சிந்தனையாளராகி நல்எண்ணங்களின் வைப்ரேஷனை கொடுத்தீர்கள் என்றால் மாறி விடுகிறார்கள். மேலும் ஒரு விஷயத்திலிருந்து விடுபடவும் வேண்டும். இந்த பிராமண வாழ்க்கையில் விடுபடப் போகிறவர்கள் தான் இல்லையா,

விடுபடுவதற்கான 9-விஷயங்கள் கூறியிருக்கிறோம். ஒருவேளை இந்த 9-விஷயங்களிலிருந்து விடுபட்டு விட்டீர்கள் என்றால் 9 ரத்தினங்கள் ஆக முடியும். எனவே இன்று பாப்தாதா ஒரு விஷயத்தினை நினைவூட்டுகிறார். ஒருபொழுதும் ஏதாவது உடல் நோய் இருந்தால், மனதின் புயல் இருந்தால், செல்வத்தில் ஏற்றம், இறக்கம் இருந்தால், குடும்பத்தில் குழப்பம் இருந்தால். சேவையிலும் குழப்பம் இருக்கிறது என்றால், அப்படி எந்த விதமான குழப்பத்திலும் மனம் உடைந்து போகிறவராக ஒருபொழுதும் ஆகி விடாதீர்கள். பெரிய மனம் உள்ளவராக ஆகுங்கள். தந்தையின் இதயம் எவ்வளவு பெரியது, சிறியதா என்ன? தந்தை பெரிய இதயம் உள்ளவர் மற்றும் குழந்தைகள் சிறிய உள்ளம் வைத்து விடுகிறார்கள். நோய் வந்து விட்டது என்றால், வலி ஏற்படுகிறது. வலி ஏற்படுகிறது என்று அழ ஆரம்பித்து விடுகிறார்கள். அப்படி மனமுடைந்து போவது மருந்தா? நோய் சென்று விடுமா அல்லது அதிகரிக்குமா? எப்பொழுது கணக்கு வழக்கு வந்து விட்டது, வலி ஏற்பட்டது என்றால் கணக்கு வழக்கு வந்து விட்டது இல்லையா? ஆனால் மனமுடைந்து போவதினால் நோயை அதிகரித்து விடுகிறீர்கள். எனவே தைரியம் உள்ளவராக ஆனீர்கள் என்றால் தந்தையும் உதவி செய்பவராக ஆவார். ஐயோ, நான் என்ன செய்வேன், என்ன செய்வேன் என்று அழுகிறார்கள். பின்பு தந்தையின் உதவி இல்லை என்று நினைக்கிறார்கள். அந்த மாதிரி செய்யாதீர்கள். யார் தைரியம் வைக்கிறாரோ அவருக்கு உதவி கிடைக்கிறது. முதலில் குழந்தைகளின் தைரியம், பின்பு தந்தையின் உதவி. அப்படி தைரியத்தை இழந்து விடுகிறீர்கள், பின்பு தந்தையின் உதவியோ கிடைக்கவில்லை. பாபாவும் தேவையான நேரத்தில் செய்வதேயில்லை என்று யோசிக்க ஆரம்பித்து விடுகிறீர்கள். அப்படி பாதி வார்த்தையை நினைவு செய்யாதீர்கள். பாபா உதவி செய்பவர் தான், ஆனால் யாருக்கு? அந்த பாதியை மறந்து விடுகிறீர்கள். மேலும் பாதியை நினைவு செய்கிறீர்கள் என்றால் பாபாவும் மகாரதிகளுக்குத் தான் செய்கிறார், எனக்கோ செய்வதேயில்லை, எனக்கோ கொடுப்பதே இல்லை என்று நினைக்கிறார்கள். முதலில் நீங்கள், பிறகு தான் மகாரதிகள் ஆனால் மனமுடைந்தவர் ஆகாதீர்கள். மேலும் மனதில் ஏதாவது குழப்பம் வந்து விட்டது என்றாலும், அந்த நேரம் நிர்ணய சக்தி தேவையாக இருக்கிறது. மேலும் எப்பொழுது உங்களுடைய மனம் தந்தையின் பக்கம் இருக்குமோ அப்பொழுது தான் நிர்ணய சக்தி வர

முடியும். ஒருவேளை ஆம் இல்லை ஆம் -இல்லை என்று உங்களுடைய குழப்பத்திலேயே இருந்தீர்கள் என்றால், இதே குழப்பத்திலேயே இருந்து விடுவீர்கள். எனவே மனதாலும் கூட மனமுடைந்தவர் ஆகாதீர்கள். மேலும் செல்வமும் மேலே கீழே போகிறது. எப்பொழுது கோடீஸ்வரர்களுக்கே மேலே கீழே போகிறது என்றால், நீங்கள் அவர்கள் முன்பு என்னவாக இருக்கிறீர்கள். அதுவோ நடக்கத் தான் வேண்டும் ஆனால் யார் தந்தையின் துணைவனாக இருக்கிறார் மேலும் உண்மையாக இருக்கிறார் என்றால் எப்பேற்பட்ட சூழ்நிலையிலும் பாபா வயிற்றை நிரப்புவதற்காக ஒரு நேர சாதாரண உணவாவது கொடுத்து விடுவார் என்று உங்களுடைய நிச்சயம் உறுதியாக இருக்கிறது. இரண்டு வகை காய்கறிகள் இல்லாவிட்டால் கூட ரசம் சாதமாவது கொடுப்பார் ஆனால் வேலையிலிருந்து களைப்படைந்து உட்கார்ந்து விட்டு பின்பு பாபா சாதாரண உணவாவது கொடுப்பார் என்று அப்படிக் கூறாதீர்கள்! அந்த மாதிரி கவனக்குறைவானருக்கு, சோம்பல் உள்ளவருக்கு கிடைக்காது. மற்றபடி உண்மையான உள்ளத்தின் மேல் தந்தை மிகவும் திருப்தியாக இருக்கிறார். மேலும் பரிவாரத்திலும் பிரச்சனைகளோ இருக்கத் தான் செய்யும். மிக அளவு கடந்ததிற்கு பிறகு முடிவு ஏற்படும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அளவு கடந்து சென்று கொண்டிருக்கிறது, மேலும் இந்த மாதிரி சூழ்நிலையில் பரிவாரத்தில் இது நடக்கக் கூடாது, இது நடக்க வேண்டும் என்று அந்த மாதிரி பிரச்சனை இருக்க வேண்டாம் ஆனால் நீங்கள் டிரஸ்டி ஆகி, சாட்சி ஆகி தந்தையிடமிருந்து சக்தியைப் பெற்று சூழ்நிலைகளுக்கான தீர்வைக் காணுங்கள். குடும்பஸ்தனாகி யோசித்தீர்கள் என்றால் இன்னும் பிரச்சனை ஆகி விடும். முதலில் முற்றிலும் விலகிய டிரஸ்டி ஆகி விடுங்கள். என்னுடையது என்பது வேண்டாம். என்னுடைய பெயர் கெட்டு விடும். என்னுடைய இழிவு ஏற்படும், என்னுடைய குழந்தை, மேலும் எனக்கு. என்னுடைய மாமியார் என்னை அப்படி, இப்படி செய்கிறார். இந்த என்னுடையது வருகிறது என்றால் அனைத்து விஷயங்களும் வந்து விடுகிறது. என்னுடையது என்பது எங்காவது வந்தால் அங்கு புத்தி திரும்பி விடுகிறது, மாறி விடுகிறது. ஒருவேளை புத்தி எங்கேயாவது குழப்பத்தில் மாறி விடுகிறது என்றால் இது என்னுடையது என்பதாகும் என்று புரிந்து கொள்ளுங்கள். அதை சோதனை செய்யுங்கள். மேலும் எவ்வளவு அதற்கு தீர்வு காண முயற்சி செய்வீர்களோ அவ்வளவு

குழப்பமாகி விடுகிறது. எனவே அனைத்து விஷயத்திலும் என்னவாக ஆகக்கூடாது? மனமுடைந்து போகக்கூடாது. என்னவாக ஆக மாட்டீர்கள்? (மனமுடைந்து போவது). சொல்வது மட்டுமல்ல, செய்யவும் வேண்டும். பகவானின் குழந்தைகள் இதுவோ உறுதியாகும். உறுதியான உறுதிமொழி இருக்கிறது இல்லையா? இதை மாயாவும் அசைக்க முடியாது. எப்பொழுது இது உறுதியான உறுதிமொழி நிச்சயம் என்றால் பகவானின் குழந்தைகளும் மனமுடைந்து போய்விடுகிறார்கள் என்றால், பெரிய மனம் வைப்பவர்கள் வேறு யார் இருப்பார்கள்? வேறு யாராவது இருப்பார்களா? நீங்களே தான் இல்லையா? அப்படியானால் என்ன செய்வீர்கள்? இப்பொழுது சக்தி நிறைந்தவர் ஆகுங்கள். மேலும் மகன் தந்தையை வெளிப்படுத்தும் பாடத்தை உறுதியாக்குங்கள். உறுதியற்றதாக ஆக்காதீர்கள். உறுதியானதாக ஆக்குங்கள். அனைவரும் தைரியமுள்ளவர்கள் தான் இல்லையா? தைரியம் இருக்கிறதா? நல்லது.

நாலாபுறங்களிலுமுள்ள அனைத்து சக்தி நிறைந்த ஆத்மாக்களுக்கு, அனைத்து பாபாவை வென்று இயற்கையை வென்ற ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் குழந்தைகள் தந்தையை வெளிப்படுத்தக்கூடிய காரியங்கள் செய்பவர்களுக்கு எப்பொழுதும் மனதால் குஷியாக இருக்கும் குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: தன்னுடைய அனைத்து விசேஷங்களையும் காரியத்தில் ஈடுபடுத்தி, அதனை விஸ்தாரம் செய்யக்கூடிய சித்தி சொரூபமானவர் ஆகுக!

எவ்வளவிற்கு எவ்வளவு தன்னுடைய விசேஷங்களை காரியத்தில் மனசேவை மற்றும் வாய்மொழி மற்றும் உடல் மூலம் செய்யும் கர்மனா சேவையில் ஈடுபடுத்தினீர்கள் என்றால், அதே விசேஷத்தன்மை வளர்ச்சியை அடைந்து கொண்டே இருக்கும். சேவையில் ஈடுபடுத்துவது என்றால் ஒரு விதையில் இருந்து அனேக பழங்களை உற்பத்தி செய்வது, இந்த உயர்ந்த வாழ்க்கையில் பிறப்புரிமையின் அதிகார ரூபத்தில் என்ன விசேஷங்கள் கிடைத்திருக்கின்றனவோ அவற்றை விதை ரூபத்தில் மட்டும்

வைக்காதீர்கள், சேவையின் பூமியில் விதைத்தீர்கள் என்றால் பலன் சொரூபம் அதாவது சித்தி சொரூபத்தின் அனுபவம் செய்வீர்கள்.

சுலோகன்: விஸ்தாரத்தை பார்க்காமல் சாரத்தைப் பாருங்கள் மற்றும் தன்னுள் நிரப்பி விடுங்கள். இது தான் தீவிர முயற்சி ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 16.02.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்பொழுது விசேஷ கவனம் செலுத்தி நேரம் மற்றும் எண்ணத்தின் பொக்கிஷத்தை சேமியுங்கள்!

இன்று படைப்பவர் திரிமூர்த்தி சிவதந்தை குழந்தைகளுக்கு மூன்று வாழ்த்துக்கள் கொடுக்கிறார். குழந்தைகள் தந்தைக்கு வாழ்த்துக் கூற வந்திருக்கிறார்கள் என்றால் தந்தையும் அதற்குப் பதிலாக மூன்று வாழ்த்துக்கள் கூறுகிறார். ஒன்று சிவஜெயந்திக்கு, இன்னொன்று வைர விழாவிற்கு மற்றும் மூன்றாவது தற்சமயம் ஊக்கம், உற்சாகத்தோடு சேவை செய்வதற்கான வாழ்த்துக்கள்! அப்படி மூன்று வாழ்த்துக்களை நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா கொடுக்கிறார். தந்தையிடம் அனைவருடைய உள்ளத்தின் ஊக்கம், உற்சாகத்தோடு செய்த சேவையின் செய்தி வந்து சேர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த ஆன்மீக ஜெயந்தி முழுக் கல்பத்திலும் இருப்பதில்லை ஏனென்றால் முழுக் கல்பத்தில் தேவ ஆத்மாக்கள், மகாத்மாக்கள், சாதாரண ஆத்மாக்கள் யாராக இருந்தாலும் ஆத்மாக்கள், ஆத்மாவின் ஜெயந்தியைக் கொண்டாடுகிறார்கள். மேலும் இந்த சங்கமயுகத்தில் சிரேஷ்ட ஆத்மாக்கள் நீங்கள் யாருடைய ஜெயந்தியைக் கொண்டாட வந்திருக்கிறீர்கள். பரமாத்மாவின் ஜெயந்தியைக் கொண்டாடுவதற்கு மற்றும் பரமாத்மா தந்தை குழந்தைகளின் ஜெயந்தியைக்

கொண்டாடுகிறார். சத்யுகம். திரேதாயுகத்திலும் கூட பரமாத்மா உங்களுடைய ஜெயந்தியைக் கொண்டாட மாட்டார். மேலும் நீங்கள் பரமாத்மாவின் ஜெயந்தியைக் கொண்டாட மாட்டீர்கள். அப்படியானால் நீங்கள் எவ்வளவு கோடி மடங்கு பாக்கியம் நிறைந்த ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். அந்த மாதிரி தன்னுடைய உயர்ந்த பாக்கியத்தை எப்பொழுதாவது கனவிலும் கூட நினைத்திருந்திருப்பீர்களா? நினைக்கவில்லை இல்லையா? ஆனால் இன்று நடைமுறை ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அப்படியானால் குஷி தான் இல்லையா? பாருங்கள் வெளிநாட்டினரானாலும், பாரத தேசத்தை சேர்ந்தவரானாலும் அல்லது மதுபனைச் சேர்ந்தவராக இருந்தாலும் இந்த சபையில் ர்ந்திருக்கிறீர்களோ அவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! உள்மனதில் என்ன பாடலைப் பாடுகிறீர்கள்? ஆஹா, என்னுடைய பாக்கியம்! மேலும் தந்தையும் ஆஹா குழந்தைகளின் பாக்கியம்! என்று பாடுகிறார். விசேஷமாக சேவையின் குரூப் அமர்ந்திருக்கிறார்கள் இல்லையா, அனைத்து விதத்திலும் விசேஷமானவர்கள் தான் இல்லையா? அப்படி விசேஷ சேவைக்கான விசேஷ உடனடிப் பலனை பிராப்தி செய்யும் ஆத்மாக்கள் நீங்கள். அப்படி தந்தையும் அந்த மாதிரி உயர்ந்த ஆத்மாக்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். குழந்தைகள் அதிகமாக மகிழ்ச்சி அடைகிறார்களா அல்லது தந்தை அடைகிறாரா? இருவருமே. அல்லது தந்தைக்கு அதிகமாக இருக்கிறதா? அல்லது உங்களுக்கு அதிகமாக இருக்கிறதா? நல்லது.

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலுமுள்ள சேவாதாரி வைரங்களை பார்த்துக் கொண்டிருந்தார். நீங்கள் அனைவரும் மாலையில் இருக்கிறீர்கள் இல்லையா? தந்தையின் கழுத்தில் வைரமாகி மின்னக்கூடிய மாலையின் மணியாக இருக்கிறீர்களா அல்லது அது வேறு யாருமா? நீங்கள்தானா அல்லது இல்லையா? மக்கள் 108 மணி மாலை என்று கூறுகிறார்கள் ஆனால் பாப்தாதாவின் கழுத்தில் நீங்கள் அனைத்து வைரங்களின் மாலை எவ்வளவு நீளமானது. 108 என்றால் நீங்கள் கீழே அமர்ந்திருப்பவராக ஆகி விடுவீர்கள். பின்னால் இருப்பவர்களும் இருக்கிறார்கள் இல்லையா? முதலில் பின்னால் இருப்பவர்கள். இதுவும் தியாகத்தின் உடனடி பலனாகும். பாப்தாதா

பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு அதிகம் வாழ்த்துக்கள் கூறுகிறார். மேலும் அதைவிட அதிகம் கீழே இருப்பவர்களுக்கு.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் விசேஷத்தைப் பார்க்கிறார். சம்பூர்ணம் ஆகவில்லை என்றாலும், முயற்சி செய்பவர் தான் ஆனால் அந்த மாதிரி எந்த விசேஷமுமே இல்லாத தந்தையின் ஒரு குழந்தை கூட கிடையாது. அனைவரிலும் விசேஷம் இருக்கிறது. அனைத்தையும் விட முதல் விசேஷமோ கோடியில் சிலரின் பட்டியலிலோ இருக்கிறீர்கள் இல்லையா? மேலும் பெரிய பெரிய தபஸ்வி, மகான் ஆத்மாக்கள், 16,108 ஜகத்குரு, சாஸ்திரவாதியானாலும், மகாமண்டலேஷ்வரானாலும் தந்தையைத் தெரிந்திருக்க வில் மேலும் தந்தையின் அனைத்து குழந்தைகளோ தந்தையைத் தெரிந்து கொண்டார்கள் இல்லையா? அப்படி தந்தையைத் தெரிந்து கொள்வது எவ்வளவு பெரிய விசேஷத்தன்மை உள்ளப்பூர்வமாக "என்னுடைய பாபா" என்றோ கூறுகிறீர்கள் இல்லைய?. என்னுடையவர் என்று கூறி அதிகாரியாகவோ ஆகி விட்டீர்கள் இல்லையா? அப்படியானால் இதை என்னவென்று கூறுவோம். அப்படி யார் தந்தையைப் பகுத்தறிந்து கொண்டார். தெரிந்து கொண்டார் என்றால் இந்த தெரிந்து கொள்வது கூட புத்தியின் விசேஷம் ஆகும். பகுத்தறியும் சக்தி இருக்கிறது. அப்படி உங்கள் அனைவரின் பகுத்தறியும் சக்தி உயர்ந்ததாக இருக்கிறது. நல்லது -இன்று முக்கியமாக கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா? இன்று கொண்டாடும் நாளா அல்லது இன்று கூட கேட்பதற்கான நாளா? கேட்கவும் வேண்டுமா? நல்லது.

சிவராத்திரி என்று கூறுகிறார்கள் ஆனால் உங்களைப் பொருத்தவரை இப்பொழுது என்னவாக இருக்கிறது? உங்களைப் பொருத்தவரை இராத்திரி இல்லை என்றால், வேறு என்னவாக இருக்கிறது? அமிர்தவேளையாக இருக்கிறது. இப்பொழுதோ இராத்திரியிலிருந்து வெளிவந்து விட்டீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் இப்பொழுதும் இராத்திரி இருக்கிறதா? விடுபட்டு விட்டீர்களா? ஏதாவது விதமான இருள் வருகிறதா அல்லது அகன்று விட்டதா? அமிர்தவேளை எப்பொழுதும் வரதானத்திற்கான நேரமாகும் என்றால் உங்களுக்கு தினசரி வரதானம் கிடைக்கிறது தான் இல்லையா? அப்படி தந்தை வருகிறார். இரவில், ஆனால் எங்களுக்காக அமிர்தவேளை பொன்னான

காலை வேளை, வைரமான காலை வேளையாக ஆகி விட்டது. அப்படியானால் அந்த மாதிரி தன்னுடைய வரதான சொரூபத்தைப் பார்க்கிறீர்களா? மாயா வரதானத்தை மறக்கச் செய்து விடவில்லையே? மாயா வருகிறதா? சில நேரமோ வருகிறது தானே? மாயாவோ கடைசி நேரம் வரை வரும். அது சுலபமாகச் சென்று விடாது ஆனால் மாயாவினுடைய வேலை வருவது மற்றும் உங்களுடைய வேலை தூரத்திலிருந்தே அதை விரட்டுவது. வந்து விட்ட பிறகு விரட்டினீர்கள் என்று அப்படி இருக்க வேண்டாம். அந்த நேரம் இப்பொழுது முடிவடைந்து விட்டது மாயா வந்தது, மேலும் உங்களை அசைத்தது. பிறகு நீங்கள் விரட்டினீர்கள் என்றால் நேரமோ இதில் சென்றது தான் இல்லையா? ஆனால் அமைதியின் சாதனங்கள் மூலம் தூரத்திலிருந்தே நீங்கள் அதை இது மாயா என்று தெரிந்து கொள்ள முடியும். இதிலும் நேரத்தை வீணாக்காதீர்கள். மேலும் மாயாவும் வரவோ விடுகிறார்கள் தான் இல்லையா என்பதையும் பார்க்கிறது. எனவே அதற்கு வருவதற்கான பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. எப்படி ஏதாவது ஒரு பசுவை, மிருகத்தை தன்னுடைய வீட்டில் வருவதற்கான பழக்கத்தை ஏற்படுத்தி விட்டீர்கள், பின்பு தொந்தரவு தாங்காமல் விரட்டவும் செய்தீர்கள். ஆனாலும் பழக்கமோ ஏற்பட்டு விடுகிறது தான் இல்லையா? மேலும் அனேக குழந்தைகளோ மாயாவிற்கு காபி, டீ கொடுத்தும் உபசரிக்கிறார்கள் என்றும் தந்தை கூறியிருக்கிறார். காபி, டீ என்ன கொடுக்கிறார்கள் தெரியும் இல்லையா? என்ன செய்வேன், எப்படி செய்வேன், இப்பொழுதோ முயற்சி செய்பவராக இருக்கிறேன். இப்பொழுதோ சம்பூர்ணம் ஆகவில்லை இறுதியிலோ ஆகி விடுவேன் என்ற இந்த மாதிரியான எண்ணங்கள் தான் காபி, டீ எனவே காபி, டீயோ கிடைக்கிறது தானே என்று மாயாவும் பார்க்கிறது. யாருக்காவது ஒருவேளை நீங்கள் காபி, டீ குடிக்க கொடுத்தீர்கள் என்றால் அவர் வேண்டாம் என்று சென்று விடுவாரா அல்லது உட்கார்ந்து விடுவாரா? எனவே எப்பொழுதெல்லாம் ஏதாவது சூழ்நிலை வருகிறது என்றால் ஏன், என்ன, எப்படி, சில நேரமோ நடக்கத் தான் செய்கிறது, இப்பொழுது யார் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள், அனைவரிடமும் இது இருக்கிறது -இது தான் மாயாவை உபசரிப்பது. சில காரமும், சில இனிப்பும் சாப்பிடக் கொடுத்து விடுகிறீர்கள். பின்பு என்ன செய்கிறீர்கள்? பிறகு வேதனைப்பட்டு பாபா இப்பொழுது நீங்களே விரட்டுங்கள் என்று கூறுகிறீர்கள். வரவிடுவது நீங்கள், மேலும் பாபா விரட்ட வேண்டும்,

ஏன்? ஏன் வர விடுகிறீர்கள்? மாயா அடிக்கடி ஏன் வருகிறது? ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு காரியத்தையும் செய்யும் போதே. மூன்று காலத்தையும் தெரிந்த நிலை என்ற ஆசனத்தில் நிலைத்திருப்பதில்லை. மூன்று காலத்தையும் தெரிந்த நிலை என்றால் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைத் தெரிந்திருப்பவர்கள். எனவே ஏன், என்ன என்று சொல்ல வேண்டியது இருக்காது. மூன்று காலங்களையும் தெரிந்தவராக இருக்கும் காரணத்தினால் இந்த விஷயங்களோ வரும், நடக்கத்தான் செய்யும். அது தன் மூலமாகவோ, மற்றவர்கள் மூலமாகவோ. இயற்கை மூலமாகவோ, அனைத்து விதங்களிலும் சூழ்நிலைகளோ வரும். வரத்தான் செய்யும் என்று முன்பாகவே தெரிந்து கொள்வார்கள் ஆனால் சுயநிலை சக்திசாலியாக இருக்கிறது என்றால் மற்ற சூழ்நிலைகள் அதன் எதிரில் ஒன்றுமே இல்லை. சூழ்நிலை பெரியதா அல்லது சுயநிலை பெரியதா? அல்லது சில நேரம் சுயநிலை பெரியதாக ஆகி விடுகிறது. சில நேரம் சூழ்நிலை பெரியதாக ஆகி விடுகிறது என்று அப்படியா? இதற்கான சாதனம் -ஒன்றோ முதல், இடை, கடை மூன்று காலங்களையும் சோதனை செய்து, புரிந்து கொண்டு பின்பு எதையும் செய்யுங்கள். நிகழ்காலத்தை மட்டும் பார்க்காதீர்கள். நிகழ்காலத்தை மட்டும் பாக்கிறீர்கள் என்றால் சில நேரம் சூழ்நிலை உயர்ந்ததாக ஆகி விடுகிறது, மேலும் சில நேரம் சுயநிலை உயர்ந்ததாக ஆகி விடுகிறது. உலகத்திலும் முதலில் யோசியுங்கள், பின்பு செய்யுங்கள் என்று கூறுவார்கள். இல்லையென்றால், யார் யோசித்து செய்வதில்லையோ பிற்காலத்தில் யோசிப்பது வேதனைப்படும் ரூபமாக ஆகி விடும். அந்த மாதிரி செய்திருக்கக்கூடாது, அந்த மாதிரி செய்திருக்க வேண்டும். பின்னால் யோசிப்பது என்றால் வேதனைப்படுவதின் ரூபம், மேலும் முதலில் யோசிப்பது என்பது ஞான சொரூப ஆத்மாவின் குணம் ஆகும். துவாபர, கலியுகத்திலோ அனேக விதமான வேதனைகளையோ அனுபவித்தே வந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் இப்பொழுது சங்கமயுகத்தில் வேதனை அடைவது என்றால் ஞான சொரூப ஆத்மா இல்லை என்பதாகும். அந்த மாதிரி உங்களுக்கு உங்கள் மேலேயே மனதில் ஒரு விநாடி கூட வேதனைப்படுவது இல்லாத அளவிற்கு தன்னைத் தானே உருவாக்கிக் கொள்ளுங்கள்.

அப்படி இந்த வைர விழாவில் முக்கியமாக முழு நாளில் ஒன்று நேரம் மற்றும் இன்னொன்று சங்கல்பம் (எண்ணம் இந்த இரண்டு பொக்கிஷங்களின் மேல் கவனம் வையுங்கள். பொக்கிஷங்களோ பார்க்கப்போனால் அதிகம் இருக்கின்றன ஆனால் விசேஷமாக இந்த இரண்டு பொக்கிஷங்களின் மேல் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் உயர்ந்த மற்றும் நல்ல எண்ணங்கள் எவ்வளவு சேமித்திருக்கிறேன்? ஏனென்றால் முழுக் கல்பத்திற்காக சேமிப்பதற்கான வங்கி இப்பொழுது திறந்திருக்கிறது. சத்யுகத்தில் இந்த சேமிக்கும் வங்கி மூடப்பட்டு விடும். இந்த வங்கியும் இருக்காது. மற்ற வங்கிகளும் இருக்காது. இவ்வளவு செல்வம் உங்களிடம் இருக்கும். அதனால் நீங்கள் யாரிடமும், எதையும் பெறுவதற்கான அவசியமே இருக்காது வங்கியில் ஏன் பணத்தை வைக்கிறார்கள்? ஒன்று பாதுகாப்பிற்காக, இன்னொன்று வட்டி கிடைக்கிறது. சிலர் அந்த மாதிரி விவேகமானவர்களும் இருக்கிறார்கள் அவர்கள் வட்டி மூலமாகவே தன்னுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த நேரம் ஒருவேளை அந்த மாதிரி விவேகமானவர்கள் இருக்கிறார்கள் என்றால் நல்லது தான். சேமிப்பு செய்கிறார்கள் தான் இல்லையா? ஆனால் வட்டியை எந்தப் பக்கம் பயன்படுத்துகிறீர்கள் என்று அதையும் பார்க்க வேண்டும். அப்படி சத்யுகத்தில் இந்த வெளியுலக வங்கியும் இருக்காது, மேலும் ஆன்மீக பொக்கிஷங்களை சேமிப்பதற்கான வங்கியும் இருக்காது. இரண்டு வங்கிகளும் இருக்காது. இந்த நேரம் ஒன்றை பல மடங்காக்கி கொடுப்பதன் வங்கியும் இருக்கிறது, ஆனால் ஒன்றை சேமித்தீர்கள் என்றால் தான் பல கோடி மடங்கு கிடைக்கும் என்று அப்படியும் இல்லை, அதற்கும் கணக்கு இருக்கிறது. அப்படி வைர விழாவில் உண்மையான வைரமாக ஆகியே தீர வேண்டும் என்ற இது உறுதியாக இருக்கிறது தான் இல்லையா? அல்லது ஆக முடியுமோ அல்லது முடியாதோ என்று சில நேரம் எண்ணம் வருகிறதா? தெரியவில்லை என்பதோ மனதில் வரவில்லை தானே? என்னவானாலும் சரி தியாகம் செய்ய வேண்டும், தபஸ்யா செய்ய வேண்டும், பணிவானவராக ஆக வேண்டும், என்ன நடந்தாலும் சரி அவசியம் ஆக வேண்டும். அப்படியா? ஆம் அல்லது இல்லை என்று கூறுங்கள் (ஆமாம்). ஆம் என்று சொல்வது மிகச் சுலபம். ஆம் என்று சொல்லி நடப்பவராக ஆவதில் கவனம் கொடுக்க வேண்டும். முதல் முதல் தியாகம் இந்த "நான்" என்ற வார்த்தையின் தியாகம் ஆகும். இந்த

"நான்" என்ற வார்த்தை மிகப் பழையது, ஆனால் தற்சமயம் இது மிகுந்த ராயல் ரூபத்தில் ஆகி விட்டது. இந்த நான் என்ற வார்த்தையை முடித்து உங்களுடைய பேச்சிலும் கூட பாபா, பாபா என்ற வார்த்தை வந்து விட வேண்டும். சொல்லப் போனால் இது சாதாரண விஷயம் "நான்" தகுதியானவன் இல்லையா? எனவே தகுதியானவன் என்றால் சேவை மற்றும் நிவாரணம் அதன்படி கிடைக்க வேண்டும். "நான்" தகுதியானவன், "நான்" செய்கிறேன் என்றால் இது சரியா? செய்யத்தான் செய்கிறீர்கள் இல்லையா? பிறகு ஏன் "நான்" செய்கிறேன் என்று சொல்லக்கூடாது. "நான்" சரி, தவறு என்று சொல்வதிலோ "நான்" செய்கிறேன் என்று வரும் இல்லையா? நீங்கள் செய்வதில்லையா? செய்வது பாபா ஆவார். அந்த தந்தை செய்விப்பவர், ஆனால் செய்பவரோ நீங்கள் தான் இல்லையா? அப்படி "நான்" என்று கூறுவது ஏன் தவறாக ஆனது? அப்படியே எப்பொழுது "நான்" என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்கள் என்றால் உண்மையில் "நான்" என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது, ஆத்மாவையா அல்லது உடலையா? "நான்" யார்? "நான்" ஆத்மா தான் இல்லையா, உடலோ இல்லை தானே? ஒருவேளை ஆத்ம அபிமானி ஆகி "நான்" ஆத்மா ஆவேன் என்ற நினைவோடு "நான்" என்ற வார்த்தையை உபயோகம் செய்தீர்கள் என்றால் அது சரி தான். "நான்" என்ற வார்த்தையை தேக உணர்வின் ரூபத்தில் ஒருவேளை உபயோகிக்கிறீர்கள் என்றால் அது ஆனால் தவறாகும். முழுநாளில் இந்த "நான்" என்ற வார்த்தை அதிகமாக வருகிறது. மேலும் வரத்தான் செய்யும். எனவே எப்பொழுதெல்லாம் "நான்" என்ற வார்த்தையைக் கூறுகிறீர்களோ அப்பொழுது "நான்" யார் என்பதை பயிற்சி செய்யுங்கள். உண்மையிலேயே "நான்" ஒரு ஆத்மா தான். உடலை "என்னுடையது" என்று கூறுவார்கள். ஒருவேளை "நான்" என்ற வார்த்தையை ஆத்ம அபிமானியாகி கூறினீர்கள் என்றால் ஆத்மாவிற்கு தந்தை இயல்பாகவே நினைவிருக்கிறது. சொல்வதற்கும் அவசியம் இருக்காது. "நான்" ஒரு ஆத்மா தான் என்ற இந்தப் பயிற்சியை ஏற்படுத்துங்கள். எப்படி இந்த தவறான நான் என்கின்ற பயிற்சி ஆகி விட்டதனால் அதுவே இயற்கையாகி விட்டது. எப்பொழுதெல்லாம் நான் என்ற வார்த்தை கூறுகிறார்கள் என்றால் தன்னுடைய பெயர், ரூபம் நினைவில் வந்து விடுகிறது. நான் யார்? நான் இன்னார் என்பது இயற்கையாகி விட்டது தான் இல்லையா? யோசிக்க வேண்டியது இருக்காது. எனவே இந்த தவறான உணர்வோடு "நான்" என்ற

வார்த்தையை உபயோகித்தீர்கள் என்றால் அப்பொழுது தான் ரிசல்ட்டில் உழைப்பு அதிகம் மற்றும் பிராப்தி குறைவாக இருக்கிறது. அனேக குழந்தைகள் நாங்களோ அதிக சேவை செய்கிறோம். மிகக் கடுமையாக உழைக்கிறோம் ஆனால் இவ்வளவு பிராப்தி இருப்பதில்லை என்று கூறுகிறார்கள். அதற்கான காரணம் என்ன? வரதானம் அனைவருக்கும் ஒன்று தான், 60 வருடம் முடித்தவர்களுக்கும் ஒன்று என்றால், ஒரு மாதத்தினருக்கும் அதே ஒன்று தான். பொக்கிஷம் அனைவருக்கும் ஒரே மாதிரி தான். பாலனையும் அனைவருக்கும் ஒரே மாதிரி தான். தினசரி செய்ய வேண்டிய காரியங்கள், மரியாதைகள், அனைவருக்கும் ஒரே மாதிரி தான். வேறு வேறு என்பதோ இல்லை தான் இல்லையா. வெளிநாடுகளின் மரியாதைகள் வேறு, பாரதத்தின் மரியாதைகள் வேறு என்று அப்படியோ இல்லையே? கொஞ்சம், கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறதா? இல்லை தானே? அப்படியானால் எப்பொழுது அனைவரும் ஒன்று என்றால் பிறகு சிலருக்கு வெற்றி கிடைக்கிறது, சிலருக்கு குறைவாக கிடைக்கிறது என்றால் ஏன்? என்ன காரணம்? பாப்தாதா குறைவாக உதவி கொடுக்கிறாரா என்ன? சிலருக்கு அதிகமாக கொடுக்கிறார், சிலருக்கு குறைவாக அப்படி இருக்கிறதா? இல்லை. பிறகு ஏன் அந்த மாதிரி ஆகிறது? இதன் அர்த்தம் என்னவாகிறது? தன்னுடைய தவறு. அல்லது தேக உணர்வுள்ள நான் என்பது வந்து விடுகிறது அல்லது சில நேரம் உடன் இருப்பவர்களின் வெற்றியைப் பார்த்து பொறாமையும் வந்து விடுகிறது. அந்த பொறாமையின் காரணமாக உள்ளப்பூர்வமாக என்ன சேவை செய்ய வேண்டுமோ அதை புத்தியால் செய்கிறார்கள், ஆனால் உள்ளப்பூர்வமாகச் செய்வதில்லை. மேலும் உள்ளப்பூர்வமாக சேவை செய்தால் பலன் கிடைக்கிறது. அனேக தடவைகள் குழந்தைகள் புத்தியை உபயோகிக்கிறார்கள் ஆனால் உள்ளம் மற்றும் புத்தி இரண்டையும் இணையச் செய்வதில்லை. புத்தி கிடைத்திருக்கிறது, அதை காரியத்தில் ஈடுபடுத்துவது நல்லது தான்! ஆனால் புத்தி மட்டும் இல்லை. யார் உள்ளப்பூர்வமாக செய்கிறார்களோ அவர்களுடைய உள்ளத்தில் தந்தையின் நினைவும் எப்பொழுதும் இருக்கும். புத்தியால் மட்டும் செய்கிறார்கள் என்றால் கொஞ்ச நேரம் ஆம்! பாபா தான் செய்விக்கிறார் என்று புத்தியில் நினைவிருக்கும், ஆனால் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு பின்பு அதே "நான்" என்பது வந்து விடுகிறது. எனவே புத்தி மற்றும் உள்ளம் இவ்விரண்டின் சமநிலையை பராமரியுங்கள்.

வைர விழாவில் என்ன செய்ய வேண்டும் என்று கூறினோம். விசேஷமாக சேமிப்பு கணக்கை அதிகரியுங்கள். முழு நாளில் என் மூலமாக அந்த மாதிரி எந்த விஷயமும் நடக்கவில்லை, யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லை. யாருடனும் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. அதாவது இழக்கவில்லை என்று அந்த மாதிரி இல்லை. இழக்கவில்லை என்பதோ நல்ல விஷயம் தான் ஆனால் சேமித்தீர்களா? சேவையும் செய்தீர்கள் என்றால் தன்னுடைய ஆன்மீக நிலையினால் சேவையில் வெற்றியை அடைந்தீர்களா? மற்றும் வெற்றியை சேமித்தீர்களா? சேவையில் நேரத்தை ஈடுபடுத்தினீர்கள், அது நல்ல விஷயம் தான்! ஆனால் சேவை எந்த விதிமூலம் செய்தீர்கள்? சிலரோ நாங்கள் முழு நாளும் இவ்வளவு சேவையில் பிஸியாக இருக்கிறோம். நாங்கள் எங்கிருக்கிறோம் என்பது கூட தெரிவதில்லை என்று கூறுகிறார்கள். பிஸியாக இருக்கிறீர்கள் இது என்னவோ நல்ல விஷயம் தான்! ஆனால் சேவையின் பிரத்யக்ஷ பலன் சேமிப்பானதா? அல்லது உழைக்க மட்டும்தான் செய்தீர்களா? சேவையில் 8-மணி நேரத்தை ஈடுபடுத்தினீர்கள் ஆனால் 8-மணி நேரமுமே சேவைக்காக சேமிப்பானதா? நேரம் சேமிப்பானதா? அல்லது பாதி சேமிப்பானது, பாதி அங்கிங்கு செல்வதிலும், யோசிப்பதிலும் வீணாகச் சென்றதா? சிரேஷ்ட எண்ணம், சுபபாவனை, நல்விருப்பங்களின் எண்ணம் சேமிப்பாகும். அப்படி முழுநாளில் சேமிப்பு கணக்கை கவனியுங்கள். எப்பொழுது சேமிப்பு கணக்கு அதிகரித்துக் கொண்டே இருக்கும் என்றால் இயல்பாகவே வைரமாக ஆகியே விடுவீர்கள். இப்பொழுது கூட நேரம் மற்றும் எண்ணம் நல்லதாகவும் இருப்பதில்லை, கெட்டதாகவும் இருப்பதில்லை. கெட்டதாக இருப்பதில்லை, இதிலேயோ தப்பித்துக் கொண்டீர்கள் ஆனால் நல்லதில் சேமிப்பு ஆனதா? புரிந்ததா? நேரத்தை, எண்ணத்தை மிச்சப்படுத்துங்கள், எவ்வளவு இப்பொழுது மிச்சப்படுத்துவீர்கள், சேமிப்பு செய்வீர்கள் என்றால் முழுக் கல்பமும் அதே பிரகாரம் இராஜ்யமும் செய்வீர்கள் மற்றும் பூஜைக்குரியவராகவும் ஆவீர்கள். துவாபர் யுகத்திலிருந்து நீங்கள் சாகார உடல் ரூபத்திலோ இறங்கும் கலையில் வருகிறீர்கள் என்றாலும், உங்களால் சேமிக்கப்பட்ட கணக்கு உங்களுடைய ஜடச்சிலைகளுக்கு பூஜையை செய்விக்கும். அப்படி வீணானதில் மற்றும் சாதாரண நேரமாக எவ்வளவு இருந்தது என்று

கவனம் வைத்தீர்கள் என்றால் தெரிய வந்து விடும். சாதாரண எண்ணம் எத்தனை இருக்கிறது? ஆனால் ஒரு கவனம் வைக்க வேண்டும் -ஒருவேளை உதாரணமாக உங்களுடைய இன்றைய நாளின் சேமிப்பு கணக்கு மிகக் குறைவாக இருந்தது என்றால் குறைவைப் பார்த்து மனம் உடைந்து போகக்கூடாது. இப்பொழுது கூட சேமிப்பு செய்வதற்கு நமக்கு வாய்ப்பு இருக்கிறது என்று இன்னும் புரிந்து கொள்ளுங்கள். தன்னை ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். மற்றவர்களோடு செய்யாமல் உங்களோடு நீங்களே பந்தயம் செய்யுங்கள். இன்று ஒருவேளை 8-மணி நேரம் சேமிப்பு ஆனது என்றால் நாளை 10-மணி நேரம் ஆகட்டும் என்று உங்களோடு நீங்களே பந்தயம் செய்யுங்கள். மனம் உடைந்து போகக்கூடாது. ஏனென்றால் இருந்தும் இப்பொழுது சேமிப்பு செய்வதற்கான நேரம் இருக்கிறது. இப்பொழுது மிகுந்த கால தாமதத்தின் அறிக்கை பலகை போடப்படவில்லை. கடைசி முடிவின் நேரம் இப்பொழுது அறிவிக்கப்படவில்லை. எப்படி லௌக்க பரீட்சையில் தேதி முடிவு செய்யப்பட்டு விட்டது என்றால் நன்றாக முயற்சி செய்பவர் என்ன செய்கிறார்? மனமுடைந்து போகிறாரா அல்லது முயற்சி செய்வதில் முன்னேறிச் செல்கிறாரா? எனவே நீங்களும் மனம் உடைந்து போகாதீர்கள். இன்னும் அதிகமாக ஊக்கம் உற்சாகத்தில் வந்து நான் என்னுடைய சேமிப்பு கணக்கை அதிகரிக்கத் தான் வேண்டும் என்று உறுதியான எண்ணம் வையுங்கள். புரிந்ததா? மனம் உடைந்தவராகவோ ஆக மாட்டீர்களே? பிறகோ தந்தைக்கு கடுமையாக உழைக்க வேண்டியது வரும். பின்பு பாபா என்னவாகி விட்டது... அந்த மாதிரி ஆகி விட்டது..! என்று பெரிய பெரிய கடிதங்கள் எழுதத் தொடங்கி விடுவார்கள். பாபா காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்! என்று அப்படி கூறாதீர்கள். பாருங்கள். உங்களுடைய ஜடச்சிலைகளிடம் சென்று எங்களை காப்பாற்றுங்கள்! என்று வேண்டுதல் செய்கிறார்கள். அப்படி நீங்கள் காப்பாற்றுபவர்களேயன்றி, காப்பாற்று காப்பாற்று! என்று கூச்சலிடுபவர்கள் அல்ல. நல்லது.

ஜெயந்திக்கு வாழ்த்துக்கள் கூறும் நாலாபுறங்களின் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தையுடன் சேர்ந்தே இருக்கக்கூடிய இணைந்த ரூபதாரி குழந்தைகளுக்கு எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தின் மூலமாக தன்னை மற்றும் மற்றவர்களை முன்னேற்றம் செய்விக்கக்கூடிய குழந்தைகளுக்கு, நாலா புறங்களிலும் சேவையில் முன்னேறிச்

செல்லக்கூடிய உண்மையான சேவாதாரி குழந்தைகளுக்கு. பாப்தாதாவினுடைய பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் உரித்தாகுக! அன்பு நினைவின் கூடவே தந்தையும் குழந்தைகளுக்கு வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகளை ஸ்வீகாரம் செய்வித்துக் கொண்டிருக்கிறார். அனைத்து பக்கங்களிலும் வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! என்ற பாடல் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி அந்த மாதிரி வாழ்த்துக்கள் பெறுவதற்கும் மற்றும் கொடுப்பதற்கும் இரண்டின் சங்கமத்தின் விசேஷ அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

குழந்தைகளை சந்தித்த பின் பாப்தாதா தனது திருக்கரங்களால் கொடி அசைத்தார்!

இந்தக் கொடியை அசைக்கும் போது குழந்தைகளுக்கு எவ்வளவு குஷி ஏற்படுகிறது. மற்றும் எப்போது உலகில் அனைவர் முன்பும் கொடி அசையுமோ அப்போது எவ்வளவு குஷி ஏற்படும். எவ்வளவு கைத்தட்டுவார்கள். கொடி சதா உயரத்தில்தான் இருக்கும், ஏன்? உயரத்தில் இருப்பதன் அர்த்தம் எல்லோருடைய பார்வையும் அந்தப் பக்கம் சென்றது என்றால் அப்போது பிரத்யக்ஷத்தின் கொடி ஏற்றப்படும்போது அனைவரது பார்வையும் அந்த ஒரு தந்தை பக்கம் செல்லும்! உங்கள் உள்ளத்திலோ தந்தையுடைய கொடியின் ஞாபகம் உள்ளது ஆனால் இப்போது மற்றவர்களின் இதயத்திலும் இந்த பிரத்யக்ஷதாவின் கொடியை ஏற்றுங்கள். இதுவோ துணியாலான கொடி ஏற்றப்பட்டது ஆனால் பிரத்யக்ஷதாவின் கொடியை எல்லோரும் இணைந்து ஏற்ற வேண்டும் மற்றும் ஏற்றத்தான் வேண்டும்.

வரதானம்: தன்னை தந்தையிடம் ஒப்படைத்து புத்தியாலும் சமர்ப்பணம் ஆகக்கூடிய டபுள் லைட் ஆகுக!

தன்னுடைய பொறுப்பை தந்தைக்குக் கொடுத்துவிட்டு, தன்னை தந்தையிடம் ஒப்படைத்து விடுங்கள் அதாவது தன்னுடைய அனைத்து சுமைகளையும் தந்தைக்கு கொடுத்து விடுங்கள். பின்பு டபுள் லைட் ஆகி விடுவீர்கள். புத்தியால் சமர்ப்பணமாகி விட்டீர்கள் என்றால் எந்த விஷயமும் புத்தியில் வராது, அனைத்தும் தந்தையினுடையது, அனைத்தும் தந்தையில் இருக்கிறது என்றால் பின்பு வேறு எதுவுமே

இல்லை. எப்பொழுது வேறு எதுவுமே இல்லை என்றால், புத்தி எங்கே செல்லும், ஒரே ஒரு தந்தை மட்டும் தான். நினைவு என்ற ஒரே ஒரு வழி தான். இந்த வழி மூலம் சுலபமாக லட்சியத்தைச் சென்றடைந்து விடுவோம்.

சுலோகன்: ஆடாத நிலை என்ற ஆசனத்தில் அமர்ந்து, சாட்சியாகப் பார்ப்பவராகி தன்னுடைய பாகத்தைச் செய்பவர் தாள் உயர்ந்த கதாபாத்திரம் உடையவர்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

## 27.02.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சத்தியத்தின் அஸ்திவாரம் தூய்மை ஆகும் மற்றும் அதன் அடையாளம் நடத்தை மற்றும் முகத்தில் தெய்வீகத் தன்மை இருக்கும்!

இன்று சத்தியமான தந்தை, சத்தியமான ஆசிரியர், சத்தியமான குரு நாலாபுறங்களிலுமுள்ள சத்தியத்தின் சக்தி சொரூபமான தன்னுடைய குழந்தைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார். சத்தியத்தின் அஸ்திவாரம் தூய்மை ஆகும். மேலும் சத்தியத்தின் நடைமுறை வெளிப்பாடு முகத்தில் மற்றும் நடத்தையில் தெய்வீகத் தன்மை இருக்கும். உலகத்திலும் கூட அனேக ஆத்மாக்கள் தன்னை சத்தியவாதி என்று கூறுகிறார்கள் மற்றும் நினைக்கவும் செய்கிறார்கள் ஆனால் சம்பூர்ண சத்தியத்தின் நிலை தூய்மையின் ஆதாரத்தில் தான் இருக்கும். தூய்மை இல்லை என்றால் எப்பொழுதும் சத்திய நிலை இருக்க முடியாது. அப்படியானால் உங்கள் அனைவரின் அஸ்திவாரம் என்ன? தூய்மை ஆகும். அப்படி தூய்மையின் ஆதாரத்தினால் சத்தியத்தின் சொரூபம் எப்பொழுதும் சுலபமாக மற்றும் இயல்பாகவே இருக்கும். சத்தியம் என்றால் உண்மை பேசுவது, உண்மை செய்வது என்ற இதை மட்டும் சொல்வதில்லை ஆனால் அனைத்தையும் விட முதலில் சத்தியம் எதன் மூலம் உங்களுக்கு தூய்மையின் மற்றும் சத்தியத்தின் சக்தி வந்தது என்றால் முதல் விஷயமோ தன்னுடைய சத்திய சொரூபத்தை அறிவது, நான் ஆத்மா ஆவேன் என்பதை இதற்கு முன்பு தெரிந்திருக்கவில்லை ஆனால் முதல் சத்தியமானது தன்னுடைய சொரூபத்தை தெரிந்து கொள்ளுங்கள். நான் இன்னார் அல்லது இவர் ஆவேன் என்று உடலின் கணக்குப்படி இது சத்தியசொரூபமாக இருந்ததா? சத்தியமான சொரூபம் என்றால் முதலில் சுயசொரூபம் மற்றும் பின்பு தந்தையின் சத்தியமான அறிமுகத்தைத் தெரிந்து

கொள்வது. நல்ல விதமாக தன்னுடைய சத்திய சொருபம் மற்றும் தந்தையின் சத்திய அறிமுகத்தை தெரிந்து கொண்டு விட்டீர்களா? மூன்றாவது விஷயம் இந்த படைப்பு சக்கரத்தையும் சத்திய சொரூபத்தினால் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த சக்கரம் என்றால் என்ன, மேலும் இதில் என்னுடைய பங்கு என்ன, அப்படி தன்னுடைய பங்கை மிக நல்ல முறையில் தெளிவான ரூபத்தில் தெரிந்து விட்டீர்களா? உங்களுடைய பங்கு நல்லது தானே? அனைத்தையும் விட நல்ல பங்கு சங்கம் யுகத்தினுடையது என்று கூறுவோம் ஆனால் தேவ ஆத்மாக்கள் உங்களுடைய பங்கு கூட உலகத்தில் முழு சக்கரத்தில் வரும் ஆத்மாக்களை விட உயர்ந்தது. தர்ம ஆத்மாக்கள், மகான் ஆத்மாக்களும் தங்களுடைய பங்கை செய்கிறார்கள் ஆனால் அவர்கள் ஆத்மா மற்றும் உடல் இரண்டினாலும் தூய்மையில்லாதவர்கள். மேலும் தேவ ஆத்மாக்கள் நீங்கள் உடல் மற்றும் ஆத்மா இரண்டினாலும் தூய்மையானவர்கள். முழு கல்பத்திலும் வேறு எந்த ஆத்மாவும் அந்த மாதிரி இல்லை. அப்படி தூய்மையின் அஸ்திவாரம் உங்களுடையதைத் தவிர வேறு எந்த ஆத்மாவினுடையதும் உயர்ந்தது அல்ல. உங்களுக்கு தேவ ஆத்மாவின் பங்கு நினைவிருக்கிறதா? பாண்டவர்களுக்கு நினைவிருக்கிறதா? தேவ ஆத்மாக்களின் தூய்மை இயற்கையான ரூபத்தில் இருந்தது. மகான் ஆத்மாக்கள், ஆத்மாக்களை தூய்மையாக ஆக்குகிறார்கள் ஆனால் மிகுந்த முயற்சி செய்து ஆக்குகிறார்களே அன்றி இயற்கையாக அல்ல. இயற்கையானதாகவும் இல்லை, இயல்பானதாகவும் இல்லை. மேலும் உங்களுடைய அரைக்கல்பத்தின் தூய்மையான வாழ்க்கை இயற்கையானதாகவும் இருக்கிறது மற்றும் இயல்பானதாகவும் இருக்கிறது. அங்கு எந்த முயற்சியும் கிடையாது. இங்கு செய்த முயற்சி அங்கு இயற்கையாக ஆகி விடுகிறது. ஏனென்றால் அங்கு தூய்மையின்மையின் பெயர், அடையாளம் கிடையாது, தூய்மையின்மையும் இருக்கிறது என்று தெரியவே தெரியாது. எனவே உங்களுடைய தூய்மையின் நடைமுறை சொரூபமாக தேவதை அதாவது தெய்வீகத்தன்மையினுடையது. இந்த நேரம் உலகத்தினர் தன்னை எவ்வளவு தான் சத்தியமானவர் என்று நினைக்கலாம் ஆனால் சுய சொரூபத்தின் சத்தியத்தையே தெரிந்திருக்கவில்லை. தந்தையின் சத்திய அறிமுகத்தையே தெரிந்திருக்க வில்லை. அப்படி அவர்களுடையதை சம்பூர்ண சத்திய சொரூபம் என்று கூற மாட்டோம் உங்களிலும் சத்தியத்தின் சக்தி

நிரந்தரமாக எப்பொழுது இருக்கும் என்றால் எப்பொழுது தன்னுடைய மற்றும் தந்தையின் சத்திய சொரூபத்தின் நினைவு இருக்கிறதோ அப்பொழுது தான். தானாகவே ஒவ்வொரு எண்ணமும் சத்தியமாக இருக்கும். இப்பொழுது சில நேரம் மறந்தும் விடுகிறீர்கள். உடல் உணர்வில் வந்து விடுகிறீர்கள். எண்ணம், எப்பொழுதும் சத்தியத்தின் சக்தி நிறைந்ததாக, தூய்மையின் சக்தி நிறைந்ததாக இருக்க வேண்டும் ஆனால் அது எப்பொழுதும் இருப்பதில்லை. எப்பொழுதும் இருக்கிறதா அல்லது வீணானதும் இருக்கிறதா? வீணானதை சத்தியம் என்று கூறுவோமா? பொய்யோ சொல்லவே இல்லை பின்பும் ஏன் சத்தியம் இல்லை. ஒருவேளை யாராவது நான் ஒருபொழுதும் பொய் சொல்வதில்லை, எப்பொழுதும் உண்மை பேசுகிறேன் என்று யாராவது அப்படி புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் ஆனால் சத்தியத்தை பகுத்தறிவது எண்ணம், சொல், செயல், உறவு, தொடர்பு அனைத்திலும் தெய்வீகத்தன்மை அனுபவம் ஆக வேண்டும். உண்மை பேசுகிறார்கள் ஆனால் தெய்வீகத்தன்மை இல்லை. நீங்களும் பார்க்கிறீர்கள் இல்லையா, நான் உண்மை கூறுகிறேன், உண்மை கூறுகிறேன் என்று சிலர் பல தடவைகள் கூறுவார்கள். நான் எப்பொழுதும் உண்மையாக இருக்கிறேன் ஆனால் வார்த்தையில், காரியத்தில் ஒருவேளை தெய்வீகத்தன்மை இல்லை என்றால் மற்றவர்களுக்கு உங்களுடைய உண்மை, உண்மையாக அனுபவம் ஆகாது. இவர் தன்னை நிரூபித்துக் கொண்டிருக்கிறார், ஆனால் இது சத்தியமா என்று புரியவில்லை என்று இப்படித்தான் நினைப்பார்கள். சத்தியத்தை நிரூபிப்பதற்காக நிரூபணம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒருவேளை தன்னுடைய சத்தியத்தை பிடிவாதமாக நிரூபிக்கிறார்கள் என்றால் அந்த தெய்வீகத்தன்மை தென்படுவதில்லை. இது சாதாரண நிலை ஆகும். இதை உலகத்திலும் செய்கிறார்கள். மேலும் பாப்தாதா சத்தியத்தின் அடையாளத்தை ஒரு சுலோகனில் கூறுகிறார், யார் உண்மையாக இருப்பாரோ அவர் எப்படித் தென்படுவார் என்று சாகார பாபா மூலமும் கேட்டிருக்கிறீர்கள். உண்மை இருந்தால் (நடனம்) ஆடுவார். எப்பொழுதும் குஷியில் ஆடிக் கொண்டே இருப்பார். எப்பொழுது பிடிவாதம் செய்து நிரூபிக்கிறீர்கள் என்றால் நீங்கள் உங்களுடைய அல்லது மற்றவர்களின் முகத்தை கவனித்தீர்கள் என்றால் அது குஷியுடையதாக இருக்காது. கொஞ்சம் யோசிப்பதாக மற்றும் கொஞ்சம் சோர்வாக இருக்கும். நடனம் ஆடுவதற்கானதாக

இருக்காது. உண்மை இருந்தால் நடனம் ஆடுவார், உண்மையானவர் குஷியில் ஆடுவார். அப்படி குஷியில் வாழ்க்கையின் பகல் அல்லது இரவு மிகவும் நன்றாக பிடித்தமானதாக இருக்கும். மேலும் கொஞ்சமாவது சத்தியத்தில் அசத்தியம் கலந்திருக்கிறது என்றால் அந்த நேரத்து வாழ்க்கை அவ்வளவு நல்லதாக அனுபவம் ஆகாது. அப்படி சத்தியத்தின் அர்த்தமே சத்திய சொரூபத்தில் நிலைத்திருந்து எண்ணம், சொல், செயல் செய்வதாகும்.

இன்றைய நாட்களில் உலகத்தினரோ, தற்சமயம் உண்மையான மனிதர்கள் வாழ்வதே கடினம். பொய் சொல்லத்தான் வேண்டும் என்று தெளிவாகக் கூறுகிறார்கள் ஆனால் சில நேரங்களில், சில சூழ்நிலைகளில் பிராமண ஆத்மாக்களும் வாயினால் சொல்வதில்லை ஆனால் சில இடங்களில், சாதுர்யமாக நடக்கத்தான் வேண்டியது இருக்கிறது என்று மனதில் நினைக்கிறார்கள். அதை பொய் என்று கூறுவதில்லை ஆனால் சாமர்த்தியம் என்று கூறுகிறார்கள். அப்படியானால் சாமர்த்தியம் என்பது என்ன? இப்படி நடந்துக் கொள்ளத் தான் வேண்டியுள்ளது. வெளியுலக மனிதர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள், மற்றும் பிராமண ஆத்மாக்கள் ராயல் பாஷையில் கூறுகிறார்கள். பின்பு என்னுடைய உணர்வு அப்படி இருந்ததல்ல, உள்நோக்கமும் அப்படியானதல்ல ஆனால் செய்யத்தான் வேண்டியதிருக்கிறது, அப்படி நடந்து கொள்ளத்தான் வேண்டியதிருக்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் பிரம்மாபாபாவை பார்த்தீர்களா, அவரும் உங்களைப் போல் சாகார உலகத்தில் தான் வாழ்ந்தார். நிராகாரமானவரைப் பற்றியோ, சிவபாபாவோ நிராகாரமானவர், மேலே மிகவும் மகிழ்ச்சியாக அமர்ந்திருக்கிறார். கீழே வந்தார் என்றால் அவருக்கும் தெரியவரும், என்று நீங்களும் நினைப்பீர்கள் ஆனால் பிரம்மாபாபாவோ சாகார சொரூபத்தில் உங்கள் அனைவரின் கூடவே இருந்தார். மாணவனாகவும் இருந்தார். மேலும் சத்தியம் மற்றும் தூய்மைக்காக எவ்வளவு எதிர்ப்புகள் உருவானது இருந்தாலும் சாதுர்யமாக நடந்தாரா? மனிதர்கள், பாபா நீங்கள் நேரடியாக தூய்மையாக இருக்கத் தான் வேண்டும் என்று கூறாதீர்கள், கொஞ்சம் கொஞ்சம் இருங்கள் என்று கூறுங்கள் என்று எவ்வளவு அறிவுரை கொடுத்தார்கள் ஆனால் பிரம்மாபாபா பயப்பட்டாரா? சத்தியத்தின் சக்தியை தாரணை செய்வதில் சகித்துக் கொள்ளும்

சக்திக்கும் அவசியம் இருக்கிறது. சகித்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது, வளைந்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது, தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது ஆனால் அது தோல்வி அல்ல. அந்த நேரம் அது தோல்வியாக தோன்றுகிறது ஆனால் அது நிரந்தரமான வெற்றியாகும்.

சத்தியத்தின் சக்தியின் காரணமாக இன்று வைர விழா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஒருவேளை தூய்மை மற்றும் சத்தியம் இல்லாமல் இருந்திருந்தால் இன்று உங்களுடைய முகத்திலிருந்து, நடத்தையிலிருந்து வருபவர்களுக்கு என்ன தெய்வீகம் அனுபவம் ஆகிறதோ அது ஆகாது. மெதுவாக முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் காலாட்படைக்குச் சமமானவராக இருந்தாலும் சரி, வரிசைக்கிரமமாகவோ இருக்கிறார்கள் இல்லையா. வேகமாக முன்னேறிச் செல்லும் மகாரதியும் இருக்கிறார், பெயருக்கு மட்டும் மகாரதி அல்ல, ஆனால் யார் உண்மையான மகாரதியோ அதாவது சத்தியத்தின் சக்தி மூலம் நடந்து கொண்டிருக்கும் மகாரதி. யார் சூழ்நிலையைப் பார்த்து சத்தியத்திலிருந்து கொஞ்சமாவது விலகி விடுகிறார்கள். வேறு எதுவுமே செய்யவில்லை ஓரிரு வார்த்தை கூறி விட்டேன். அதுவும் உள்ளப்பூர்வமாக கூறவில்லை, வெளியளவில் கொஞ்சம் கூறினேன் என்று கூறுகிறார்கள். இதுவும் சம்பூர்ண சத்தியம் இல்லை. சத்தியத்திற்காக ஒருவேளை சகித்துக் கொள்ளவும் வேண்டியதாக இருக்கிறது என்றால் அது சகித்துக் கொள்வது அல்ல. வெளிப்படையாக நாம் சகித்துக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றுகிறது ஆனால் உங்களுடைய கணக்கில் அது சகித்துக் கொள்ளும் சக்தியின் ரூபத்தில் சேமிப்பாகிறது. இல்லையென்றால் என்னவாகிறது? ஒருவேளை யாராவது சகித்துக் கொள்வதில் கொஞ்சமாவது பலவீனம் ஆகி விடுகிறார் என்றால் அவருக்கு அசத்தியத்தின் ஆதாரத்தை அவசியம் எடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த நேரம் ஆதாரம் கிடைத்து விட்டது, சரியாகி விட்டது என்று தோன்றினாலும் அது அவருடைய கணக்கில் சகித்துக் கொள்ளும் சக்தி சேமிப்பாவதில்லை. அப்படி மேலோட்டமாக நான் நன்றாக இருக்கிறேன், எனக்கு இந்த மார்க்கத்தில் செல்வதற்கான சாதுர்யம் வந்து விட்டது என்று நினைக்கிறார்கள் ஆனால் ஒருவேளை நீங்கள் உங்களுடைய கணக்கை பார்த்தீர்கள் என்றால் உங்களுடைய சேமிப்பு

கணக்கு மிகவும் குறைவாக இருக்கும். எனவே சாதுர்யமாக நடந்து கொள்ளாதீர்கள், ஒவ்வொருவரையும் பார்த்தும் அவர்கள் செய்வது மாதிரியே (காப்பி) செய்கிறார்கள். இவர் இந்த மாதிரி நடக்கிறார் இல்லையா அதனால் தான் இவருக்கு நல்ல பெயர் கிடைத்து விட்டது, இவர் மிகவும் முன்னுக்கு இருக்கிறார். மேலும் நாம் உண்மையாக நடந்து கொள்கிறோம் இல்லையா அதனால் பின் தங்கி விட்டோம் என்று நினைக்கிறார்கள் ஆனால் அது பின்னால் இருப்பதில்லை, அது முன்னேறி செல்வதாகும். தந்தையை நெருங்கி சென்று கொண்டிருக்கிறீர்கள் மேலும் மற்றவர்களுக்கு எதிரில் பின்னால் இருப்பதாக தென்பட்டாலும் கூட ஆனால் நமக்க யாருடன் வேலை. தந்தையுடனா அல்லது ஆத்மாக்களுடனா? (தந்தையுடன்). அப்படி தந்தையின் இதயத்தில் முன்னேறிச் செல்வது என்றால் முழு கல்பத்தின் பிராப்தியில் முன்னேறிச் செல்வதாகும். மேலும் ஒருவேளை இங்கு முன்னேறிச் செல்வதில் ஆத்மாக்களை காப்பி செய்கிறீர்கள் என்றால் அந்த நேரத்திற்காக உங்களுக்கு நல்ல பெயர் ஏற்படுகிறது, மரியாதை கிடைக்கிறது. சொற்பொழிவு நிகழ்த்துபவர்களின் பட்டியலில் வந்து விடுகிறீர்கள். சென்டரின் பொறுப்பானவர்களின் பட்டியலில் வந்து விடுகிறீர்கள் ஆனால் முழு கல்பத்தின் பிராப்தி உருவாவதில்லை. இதைத் தான், கடுமையாக உழைத்தீர்கள், விதை விதைத்தீர்கள், மரத்தை பெரியதாக வளர்த்தீர்கள். பழமும் உருவானது ஆனால் பழுக்காத (கச்சா) பழத்தை சாப்பிட்டு விட்டீர்கள், நிரந்தரமாக பிராப்தியின் பலன் முடிவடைந்து விடுகிறது. அப்படி அற்ப காலத்திற்கான பெயர், புகழ், மதிப்பு, மரியாதைக்காக காப்பி செய்யாதீர்கள். இங்கே பெயர் கிடையாது ஆனால் தந்தையின் இதயத்தில் உங்களுடைய பெயரின் எண் முன்னுக்கு இருக்கிறது. எனவே வைரம் ஆக வேண்டும் என்றால் இவை அனைத்தையும் சோதனை செய்யுங்கள். கொஞ்சமாவது ராபல் ரூபத்தின் கறை வைரத்தில் மறைந்தோ இருக்கவில்லையே? அப்படி சத்தியத்தின் சக்தி மூலம் தெய்வீகத்தன்மையை தாரணை செய்யுங்கள். எதையாவது சகித்துக் கொள்ள வேண்டியது இருந்தால் பயப்படாதீர்கள். சத்தியம் தகுந்த நேரத்தில் அதுவே நிரூபணம் ஆகும். சத்தியத்தின் படகு ஆடும் ஆனால் மூழ்குவதில்லை, கரை சேர்ந்து விடும் இல்லையா. பயமற்றவராக ஆகுங்கள். ஒருவேளை எங்கேயாவது எதிர் கொள்ள வேண்டியதாக இருந்தால் பிரம்மாபாபாவின் வாழ்க்கையை

உங்கள் மனக் கண் முன் வையுங்கள். பிரம்மாபாபாவின் எதிரில் உலகியல் சூழ்நிலைகளோ இருந்தன ஆனால் பல்வேறு விதமான குழந்தைகளின் பிரச்சனைகளும் இருந்தன ஆனால் குழுவிலிருந்து கொண்டே சத்தியத்தின் சக்தி மூலம் வெற்றியாளராக ஆகியே விட்டார். குழந்தைகளின் பிரச்சனையை பிரம்மாபாபா பார்த்தாரா என்ன? பிரம்மாபாபாவின் எதிரிலும் பல்வேறு விதமான சம்ஸ்காரமுள்ள ஆத்மாக்கள் இருந்தனர் ஆனால் இவ்வளவு அனைத்து சூழ்நிலைகள் இருந்த போதிலும் சத்தியத்தின் சுயநிலை சம்பூர்ணம் ஆக்கி விட்டது.

எனவே நீங்கள் அனைவரும் என்ன ஆக வேண்டும்? சாதுர்யமானவராகவோ இல்லை தானே? நான் வேறு எதையும் செய்யவில்லை. கொஞ்சம் சாதுர்யமாக நடந்து கொள்ளத் தான் வேண்டியதாக இருக்கிறது என்று மிக நன்றாக கூறுகிறார்கள் ஆனால் எதுவரையிலும்? அப்படி சகித்துக் கொள்ளும் சக்தியை தாரணை செய்து அசத்தியத்தை எதிர்கொள்ளுங்கள். பிரபாவத்தில் வந்து விடாதீர்கள். நாங்கள் மகாரதிகளிலும் கூட அந்த மாதிரி பார்த்திருக்கிறோம் இல்லையா? எனவே மகாரதிகளை பின்பற்றி நடக்க வேண்டும், இப்பொழுதோ பிரம்மாபாபாவோ எதிரில் இல்லை, மகாரதிகள் தான் இருக்கிறார்கள் எனவே அவரைப் பின்பற்றினோம் என்று கூறுகிறார்கள் ஆனால் ஒருவேளை மகாரதியும் கூட இரண்டு விதமாகவும் செய்கிறார். சாதுர்யமாக நடந்து கொள்கிறார் என்றால் அந்த நேரம் மகாரதி, மகாரதியாக இருக்கவில்லை. அந்த நேரம் கிரகச்சாரத்தில் இருக்கிறாரேயன்றி மகாரதி அல்ல. எனவே தந்தை என்ன சுலோகன் கொடுத் திருக்கிறார்? தந்தையைப் பின்பற்றி நடக்க வேண்டுமா அல்லது சகோதரி, சகோதரர்களையா? ஆகவேதான் சாகார (ஸ்தூல) காரியத்தில் பிரம்மாபாபாவை எதிரில் வையுங்கள். பின்பற்றி நடங்கள். மேலும் அசரீரி ஆவதில் நிராகார தந்தையைப் பின்பற்றுங்கள். நல்ல நல்ல குழந்தைகளாக இருந்தாலும் அவர்களும் தந்தையைத் தான் பின்பற்றி நடக்கிறார்கள். எனவே நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ஃபாலோ ஃபாதர். உறுதியாகவா அல்லது கொஞ்சம் கொஞ்சம் லாபம் கிடைக்கிறது என்றால் எடுத்துக் கொள்வோம், பின்பு எதிர்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று அப்படியிருக்கிறதா? சத்யுகத்தில் குறைந்த பதவியை அடைந்தாலும் ஆனால் சுகமானவர்களாகவோ இருப்போம் இல்லையா என்று அந்த மாதிரியும் சிலர் நினைக்கிறார்கள்.

துக்கமோ இருக்காது, அனைத்து பிராப்திகளும் இருக்கும். பிரஜையின் பிரஜையாக இருந்தாலும் கூட எதுவும் பிராப்தி ஆகவில்லை என்ற குறை இருக்காது. எனவே இப்பொழுது அனுபவிப்போம் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று சிலர் நினைக்கிறார்கள் ஆனால் இது அற்பகாலத் திற்கான மகிழ்ச்சி, தண்டனையை தழுவவேண்டியதாக இருக்கும். அப்படி அதை ஏற்றுக் கொள்கிறீர்களா, கொஞ்சம் தண்டனையை அனுபவிப்பீர்களா, அந்த மகிழ்ச்சியையும் எடுத்துக் கொள்ளலாமா? கூடாது.

தூய்மை, சத்தியம் மற்றும் தெய்வீகத்தன்மை. என்ற மூன்று விஷயங்களையும் நினைவில் வையுங்கள் -உங்களுடையது சாதாரண வார்த்தைகளாக, சாதாரண எண்ணங்களாக, சாதாரண காரியமாக இருக்கக்கூடாது ஆனால் தெய்வீகமானதாக இருக்க வேண்டும். தெய்வீகத்தன்மையின் அர்த்தமே தெய்வீக குணங்கள் மூலமாக காரியம் செய்வது, எண்ணங்களை உருவாக்குவது. அது தான் தெய்வீகத்தன்மை ஆகும். பாவ காரியம் என்றால் என்ன என்று மனிதர்கள் கேட்கிறார்கள் இல்லையா? ஏதாவது விகாரத்தின் வசமாகி காரியம் செய்வது பாவம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அந்த மாதிரி புரிய வைக்கிறீர்கள் தான் இல்லையா? அப்படி தெய்வீகத் தன்மை என்றால் தெய்வீக குணத்தின் ஆதாரத்தில் எண்ணம், சொல், செயலைச் செய்வது. அப்படி சத்தியத்தின் மகத்துவத்தை தெரிந்து கொண்டீர்களா? (யோகப் பயிற்சி)

ஒருநொடியில் தன்னை அசரீரியாக ஆக்க முடியுமா? ஏன்? நான் அசரீரி ஆத்மா ஆவேன் என்று நினைக்கிறீர்கள் என்றால் அப்படி ஆவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கிறது? ஒரு நொடி ஆனது இல்லையா? அப்படி ஒரு நொடியில் அசரிரி, விலகியிருப்பவர் மற்றும் தந்தைக்கு பிரியமானவர் -இந்த யோகப் பயிற்சியை முழு நாளில் இடையிடையே செய்து கொண்டே இருங்கள். செய்யவோ தெரியும் தானே? இப்பொழுது அனைவரும் ஒரு நொடியில் அனைத்தையும் மறந்து முற்றிலும் அசரீரி ஆகி விடுங்கள் (பாப்தாதா ஐந்து நிமிடங்கள் யோகப் பயிற்சி செய்வித்தார்) நல்லது.

நாலாபுறங்களிலுள்ள அனைத்து தூய்மையின் அஸ்திவாரத்தை எப்பொழுதும் உறுதியாக வைத்திருக்கக்கூடிய, எப்பொழுதும் சத்தியத்தின் சக்தி மூலம் உலகிலும் சத்திய யுகம் அதாவது சத்தியத்தின் சக்தியின் எண்ண அலைகளைப் பரப்பக்கூடிய எப்பொழுதும் ஒவ்வொரு நேரமும் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தெய்வீகத் தன்மையை தாரணை செய்யக்கூடிய, எப்பொழுதும் தந்தையை பின்பற்றி நடப்பதில் இயற்கையான பயிற்சி உள்ள ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: புள்ளியின் மகத்துவத்தை தெரிந்து கடந்ததிற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய சகஜயோகி ஆகுக!

அனைத்தையும் விட சரளமான எழுத்து புள்ளி ஆகும். பாப்தாதா புள்ளியின் கணக்கை மட்டும் கூறுகிறார். நீங்களும் புள்ளி ரூபம் ஆகுங்கள், புள்ளியை நினைவும் செய்யுங்கள், மேலும் வாழ்க்கை நாடகத்தின் ஒவ்வொரு காட்சியை தெரிந்து செய்த பிறகு புள்ளி வைத்து விடுங்கள். இந்த புள்ளி எழுத்தின் மகத்துவத்தைத் தெரிந்து கடந்ததிற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள், புள்ளியாகி விட்டீர்கள் என்றால் சகஜயோகி ஆகி விடுவீர்கள். இப்பொழுது புள்ளி ஆகித் தான் வீட்டிற்குச் செல்ல வேண்டும். வீட்டில் அனைவரும் புள்ளி ரூபத்தில் இருக்கிறார்கள். அங்கு எண்ணம், செயல், சம்ஸ்காரம் அனைத்தும் உள்ளடங்கி விடும்.

சுலோகன்: கர்மயோகியாகி காரியம் செய்தாலும் விலகியிருக்கும் நிலையில் இருப்பது என்றால் பறக்கும் பறவை ஆவது!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# 10.03.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# செய்பவர் மற்றும் செய்விப்பவரின் நினைவு மூலம் கர்மாதீத் நிலையின் அனுபவம்!

இன்று நன்மையே செய்யும் தந்தை தன்னுடைய நன்மையே செய்யும் துணைவர்கள் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் முழுமையான ஈடுபாட்டோடு, அன்போடு உலக நன்மைக் காரியம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி துணைவர்களைப் பார்த்து ஆஹா! துணைவர்களாக இருக்கும் குழந்தைகளே ஆஹா! என்ற பாடலை எப்பொழுதும் பாப்தாதா பாடிக் கொண்டே இருக்கிறார். நீங்கள் அனைவரும் கூட ஆஹா! ஆஹா! என்ற பாடலை பாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா! இன்று பாப்தாதா நாலாபுறங்களில் நடக்கும் சேவையின் நிலையைப் பார்த்தார். கூடவே சுயமுயற்சியின் நிலையையும் பார்த்தார். அப்படி சேவை மற்றும் சுயமுயற்சி இரண்டின் நிலையில் என்ன பார்த்திருந்திருப்பார்? நீங்கள் தெரிந்திருக்கிறீர்களா? சேவையின் நிலை தீவிரமாக இருக்கிறதா? அல்லது சுயமுயற்சியின் நிலை தீவிரமாக இருக்கிறதா? என்னவாக இருக்கிறது. இரண்டிற்கும் சமநிலை இருக்கிறதா? இல்லையா? அப்படியானால் உலக மாற்றம் செய்யும் ஆத்மாக்களுக்கு மற்றும் இயற்கைக்கு ஆசீர்வாதம் எப்பொழுது கிடைக்கும்? ஏனென்றால் சமநிலை மூலமாக உங்கள் அனைவருக்கும் என்ன ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறதோ அது மற்றவர்களுக்கும் கிடைக்கும். அப்படியானால் ஏன் இடைவெளி இருக்கிறது? உங்களை என்னவாக கூறிக் கொள்கிறீர்கள்? கர்மயோகியாகவா அல்லது யோகி மட்டுமாகவா? கர்மயோகி தான் இல்லையா? உறுதியாகத்தான் இல்லையா? அப்படி சேவையும் கர்மம் அதாவது காரியம் தான் இல்லையா? காரியத்தில் வருகிறீர்கள், பேசுகிறீர்கள் மற்றும் திருஷ்டி கொடுக்கிறீர்கள். பாடம் எடுக்கிறீர்கள், கண்காட்சியில் விளக்கம்

கூறுகிறீர்கள், இவை அனைத்தும் சிரேஷ்ட கர்மம் அதாவது சேவை ஆகும். அப்படி கர்மயோகி என்றால் காரியம் செய்யும் நேரத்திலும் யோகாவின் சமநிலை இருப்பது ஆனால் நீங்களே சமநிலை குறைந்து விடுகிறது என்று கூறுகிறீர்கள். இதற்கான காரணம் என்ன? மிக நன்றாக தெரிந்தும் இருக்கிறீர்கள், புதிய விஷயம் ஒன்றும் இல்லை மிகவும் பழைய விஷயம் ஆகும். சேவை அல்லது காரியம் மேலும் சுயமுயற்சி என்றால் யோக சொரூபமான நிலை. அப்படி இரண்டிற்கும் சமநிலை வைப்பதற்காக விசேஷமாக ஒரே ஒரு வார்த்தையை மட்டும் நினைவு வையுங்கள். அந்த வார்த்தை எது? தந்தை 'செய்விப்பவர் மேலும் நான் ஆத்மா, நான் இன்னார் இல்லை ஆத்மா செய்பவன் அப்படி 'செய்பவர்', 'செய்விப்பவர்' இந்த ஒரு வார்த்தை உங்களை மிக சுலபமாக சமநிலை உடையவராக ஆக்கும். சுயமுயற்சியின் சமநிலை அல்லது நிலை எப்பொழுதாவது குறைவாகிறது என்றால், அதற்கான காரணம் என்ன? செய்பவர் என்பதற்கு பதிலாக தன்னை செய்விப்பவர் என்று புரிந்து கொள்கிறீர்கள். நான் செய்கிறேன், அனேக விதமான மாயா எதுவெல்லாம் வருகிறதோ அதனுடைய வாசல் எது? மாயாவினுடைய மிக நல்ல சுலபமான வாசலையோ தெரிந்தே இருக்கிறீர்கள் -'நான்' என்பது தான். இந்த வாசலை இன்னும் முழுமையாக மூடவில்லையா? அந்த மாதிரி மூடுகிறீர்கள் அதை மாயா சுலபமாகவே திறந்து விடுகிறது மேலும் வந்து விடுகிறது. ஒருவேளை 'செய்பவன் என்றால் அவசியம் செய்விப்பவரின் நினைவு வரும். செய்து கொண்டிருக்கிறேன் ஆனால் செய்விப்பவர் தந்தை ஆவார். 'செய்விப்பவர்' இன்றி 'செய்பவர்' ஆக முடியாது. இரட்டை ரூபத்தில் செய்விப்பவரின் நினைவு வேண்டும். ஒன்றோ தந்தை செய்விப்பவர் மற்றும் இன்னொன்று நான் ஆத்மாவும் இந்த கர்ம இந்திரியங்கள் மூலமாக காரியம் செய்விப்பவன் ஆவேன். இதனால் என்ன ஆகும் என்றால் காரியம் செய்து கொண்டும் செய்யும் காரியத்தின் நல்லது அல்லது தீயதின் பிரபாவத்தில் வர மாட்டீர்கள். இதைத் தான் கர்மாதீத் நிலை என்று கூறுவது.

உங்கள் அனைவரின் லட்சியமாக என்ன இருக்கிறது? கர்மாதீத் ஆக வேண்டும் தான் இல்லையா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கர்ம பந்தனம் இருந்தாலும் ஒன்றும் பாதகமில்லையா? இருக்க வேண்டுமா அல்லது இருக்க வேண்டாமா? கர்மாதீத் ஆக வேண்டுமா? தந்தை மேல் உள்ள அன்பின் அடையாளம் -கர்மாதீத் ஆவது. எனவே செய்விட்பவர்

ஆகி காரியம் செய்யுங்கள், செய்வியுங்கள், கர்ம இந்திரியங்கள் உங்களை செய்விக்க வேண்டாம் ஆனால் நீங்கள் கர்ம இந்திரியங்கள் மூலமாக செய்வியுங்கள். முற்றிலும் தன்னை விலகிய இன்னொன்றாக நினைத்து காரியம் செய்விப்பது என்ற இந்த உணர்வு எப்பொழுதும் வெளிப்படும் ரூபத்தில் இருக்கட்டும். உள்ளடங்கிய ரூபத்தில் வேண்டாம். உள்ளடங்கிய ரூபத்தில் சில நேரம் 'செய்விப்பவர்'க்கு பதிலாக கர்ம இந்திரியங்களின் அதாவது மனதின், புத்தியின், சம்ஸ்காரத்தின் வசமாகி விடுகிறார்கள். காரணம் என்ன? செய்விட்பவன் ஆத்மா நான் ஆவேன், எஜமானன் ஆவேன். விசேஷ ஆத்மா, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மா ஆவேன் என்ற இந்த நினைவு எஜமான நிலையின் நினைவை ஊட்டுகிறது. இல்லையென்றால் சில நேரம் மனம் உங்களை நடத்துவிக்கிறது, மேலும் சில நேரம் நீங்கள் மனதை நடத்துவிக்கிறீர்கள். எனவே எப்பொழுதும் இயற்கையாக மன்மனாபவ என்ற நிலை இருப்பதில்லை. முற்றிலும் நான் வேறு, மேலும் அது மட்டுமின்றி எஜமானனாகவும் இருக்கிறேன். தந்தையை நினைவு செய்வதினால் நான் குழந்தை ஆவேன். மேலும் நான் ஆத்மா செய்விப்பவன் என்றால் எஜமானன் ஆவேன். இந்தப் பயிற்சியில் இப்பொழுது கவனம் குறைவாக இருக்கிறது. சேவையில் மிக நன்றாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள் ஆனால் என்ன லட்சியம்? சேவாதாரி ஆவதற்கா அல்லது கர்மாதீத் ஆவதற்கா? அல்லது இரண்டும் சேர்ந்தே ஆவதற்கா? இந்தப் பயிற்சி உறுதியாக இருக்கிறதா? இப்பொழுதே கொஞ்ச நேரத்திற்காக இந்தப் பயிற்சியை செய்ய முடியுமா? விலகிய தனிப்பட்டவராக ஆக முடியுமா? அல்லது அந்த மாதிரி ஒட்டிக் கொண்டு விட்டீர்களா, அதிலிருந்து விலகுவதற்கு நேரம் வேண்டுமா? எவ்வளவு நேரத்தில் விலக முடியும்? 5-நிமிடங்கள் வேண்டுமா, 1-நிமிடம் வேண்டுமா அல்லது 1-விநாடி வேண்டுமா? 1-விநாடியில் ஆக முடியுமா?

பாண்டவர்கள் 1-விநாடியில் முற்றிலும் விலகியவராக ஆக முடியுமா? எஜமானன் ஆத்மா நான் வேறு மற்றும் காரியங்கள் செய்யும் என்னுடைய கர்ம இந்திரியங்கள் வேறு என்ற இந்தப் பயிற்சி எப்பொழுது விரும்புகிறீர்களோ அப்பொழுது இருக்க வேண்டும். நல்லது, இப்பொழுது ஒரு நொடியில் விலகியவராகவும் மற்றும் தந்தையின் பிரியமானவராகவும் ஆகி விடுங்கள். நான் முற்றிலுமே

விலகியவன் என்ற இந்தப் பயிற்சியை மிகவும் சக்திசாலியாக செய்யுங்கள். இந்த கர்ம இந்திரியங்கள் என்னுடைய உதவியாளர்கள், காரியம் செய்வதில் உதவியாளர்களாக இருக்கிறார்கள் ஆனால் நான் விலகியவன் மற்றும் அன்பானவன். இப்பொழுது ஒரு நொடியில் இந்தப் பயிற்சியை ஓட விடுங்கள். (டிரில்) சுலபமாக அனுபவம் ஆனதா அல்லது கடினமாக இருக்கிறதா? சுலபமாக இருக்கிறது என்றால் முழு நாளில் காரியம் செய்யும் நேரத்தில் இந்த நினைவை வெளிக் கொண்டு வந்தீர்கள் என்றால் கர்மாதீத் நிலையின் அனுபவத்தை சுலபமாக செய்வீர்கள். ஏனென்றால் சேவை மற்றும் காரியத்தை விட முடியுமா? விடுவீர்களா என்ன? செய்யத் தான் வேண்டும். தபஸ்யாவில் அமர்வது இதுவும் ஒரு செயல் ஆகும். அப்படி காரியம் செய்யாமல், சேவை செய்யாமலோ இருக்கவே முடியாது. மேலும் இருக்கவும் கூடாது. ஏனென்றால் நேரம் குறைவாக இருக்கிறது. மேலும் சேவை இன்னும் அதிகமாக இருக்கிறது. சேவையின் ரூபம் மாறியிருக்கிறது ஆனால் இப்பொழுது அனேக ஆத்மாக்களின் குறைகள் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. எனவே சேவை மற்றும் சுயமுயற்சி என்ற இரண்டிற்கும் சமநிலை வேண்டும். சேலையில் மிகவும் பிஸியாக இருந்தோம் இல்லையா எனவே சுயமுயற்சி செய்வது குறைந்து விட்டது என்று அப்படி இருக்கக் கூடாது. சேவையிலோ இன்னும் அதிகமாக சுயமுயற்சியின் மேல் கவனம் இருக்க வேண்டும். ஏனென்றால் மாயை வருவதற்கான வாய்ப்பு சேவையில் அனேக விதத்தில் இருக்கிறது. பேருக்கு சேவை செய்கிறார் ஆனால் செய்வது சுயநலமாக, தன்னை முன்னேற்ற வேண்டும், ஆனால் முன்னேறிக் கொண்டே சமநிலையை மறக்காதீர்கள். ஏனென்றால் சேவையில் தான் சுபாவம். சம்மந்தத்தின் விஸ்தாரம் இருக்கும். மேலும் இதில் மாயாவும் வாய்ப்பை எடுத்துக் கொள்கிறது. கொஞ்சம் சமநிலை குறைந்தது என்றால் மாயா புதுப்புது ரூபத்தை தாரணை செய்து விடுகிறது. பழைய ரூபத்தில் வராது புதுப்புது ரூபத்தில் புதுப்புது சூழ்நிலைகளின் ரூபத்தில், நெருக்கத்தின் ரூபத்தில் வருகிறது. சேவையை விட்டு விட்டு ஒருவேளை பாப்தாதா தனியாக அமர்த்தி வைக்கிறார், ஒரு மாதம் அமர்த்தினார். 15-நாட்கள் அமர்த்தினார் என்றால் கர்மாதீத் ஆகி விடுவீர்களா? ஒரு மாதம் கொடுக்கிறோம். வேறு எதுவுமே செய்ய வேண்டாம், அமர்ந்திருங்கள், தபஸ்யா செய்யுங்கள், உணவைக் கூட ஒரு தடவை தயாரியுங்கள் அவ்வளவு தான். பிறகு கர்மாதீத் ஆகி விடுவீர்களா? ஆக மாட்டீர்களா?

ஒருவேளை சமநிலைக்கான பயிற்சி இல்லை என்றால் எவ்வளவு தான், ஒரு மாதம் என்ன இரண்டு மாதங்களும் அமர்ந்தீர்கள் என்றாலும் மனம் அமராது, உடல் வேண்டுமென்றால் அமரும். அமர வைக்க வேண்டியது மனதையன்றி உடலை அல்ல. உடலுடன் சேர்த்து மனதையும் அமர வைக்க வேண்டும். தந்தை மற்றும் நான் வேறு எதுவும் இல்லை என்று அப்படி அமர்ந்து விடவேண்டும் அவ்வளவு தான். அந்த மாதிரி ஒரு மாதம் தபஸ்யா செய்ய முடியுமா அல்லது சேவை நினைவு வரும? நாளாக நாளாக சேவை அதிகரிக்கத் தான் செய்யும் என்று பாப்தாதாவும் நாடகமும் காண்பித்துக் கொண்டே இருக்கிறது என்றால் எப்படி அமர்ந்து விடுவீர்கள்? ஒரு வருடத்திற்கு முன்பு உங்களுடைய சேவையாக என்ன இருந்தது மற்றும் இந்த வருடம் என்ன சேவை செய்தீர்களோ அது அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா? அதிகரித்து விட்டதுதான் இல்லையா? விரும்பாவிட்டாலும் கூட சேவையின் பந்தளத்தில் கட்டப்பட்டிருக்கிறீர்கள் ஆனால் சமநிலை மூலமாக சேலையின் பந்தனம், பந்தனமின்றி சம்மந்தமாக இருக்கும். எப்படி லௌகீக சம்மந்தத்தில், ஒன்று கர்மபந்தனம் மற்றும் இன்னொன்று சேவையின் சம்மந்தம் என்று புரிந்து கொள்கிறீர்கள். அப்படி பந்தனத்தின் அனுபவம் ஆகாது, சேவையின் இனிமையான சம்மந்தமாக இருக்கும். அப்படியானால் என்ன கவனம் கொடுப்பீர்கள்? சேவை மற்றும் சுயமுயற்சிக்கான சமநிலை. சேலையில் அளவுக்கு அதிகமாக செல்லாதீர்கள். நான் தான் செய்ய வேண்டும், நான் தான் செய்ய முடியும் என்று அப்படி இருக்க வேண்டாம். செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கிறார். நான் ஒரு கருவி செய்பவன் என்று அந்த நிலை இருக்க வேண்டும். அப்படி இருந்தால் பொறுப்பு இருந்த போதிலும் களைப்பு குறைவாக இருக்கும். அனேக குழந்தைகள், அதிக சேவை செய்தோம் இல்லையா அதனால் களைப்படைந்து விட்டோம். தலை பாரமாக ஆகி விட்டது என்று கூறுகிறார்கள். அப்படி தலை பாரமாக ஆகாது. இன்னும் செய்விப்பவர் தந்தை மிக நன்றாக மசாஜ் செய்வார். மேலும் தலை இன்னும் புத்துணர்வு பெற்று விடும். களைப்பிருக்காது. சக்தி அதிகப்படியாக வந்து விடும். எப்படி அறிவியல் மருந்துகள் மூலம் உடலில் சக்தி வர முடியும் என்றால், தந்தையின் நினைவு மூலம் ஆத்மாவில் சக்தி வர முடியாதா என்ன? மேலும் ஆத்மாவில் சக்தி வந்தது என்றால் உடலில் தானாகவே பிரபாவம்

ஏற்படும். இதில் நீங்கள் அனுபவிகளாகவும் இருக்கிறீர்கள், எப்பொழுதாவது அனுபவம் ஆகிறது தான் இல்லையா? பிறகு சென்று கொண்டிருக்கும்பொழுதே பாதை மாறி விடுகிறது மேலும் தெரிய வருவதில்லை. எப்பொழுது யாராவது சோர்வாக களைப்பாக அல்லது தலை பாரமாக ஆகி விட்டார் என்றால் என்ன ஆனது, ஏன் ஆனது என்ற உணர்வு பின்பு வருகிறது ஆனால் ஒரு வார்த்தை 'செய்பவர் மற்றும் செய்விப்பவர்' என்பதை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் கடினமா அல்லது சுலபமா? ஆம் சுலபம் தான் என்று கூறுங்கள். நல்லது.

இப்பொழுது 9-லட்சம் பிரஜைகளை உருவாக்கியிருக்கிறீர்களா? வெளிநாட்டில் எத்தனை பேர் உருவாகியிருக்கிறார்கள்? 9-லட்சம் உருவாகியிருக்கிறார்களா? மேலும் பாரதத்தில் உருவாகியிருக்கிறார்களா? உருவாகவில்லை. அப்படியானால் முடிவின் (கடிகார) முள்ளை நீங்களே நகர விடுவதில்லை. சமநிலை வையுங்கள். வைர விழா ஆண்டு இல்லையா? நன்றாக அதிகமாக சேவை செய்யுங்கள் ஆனால் சமநிலை வைத்து சேவை செய்தீர்கள் என்றால் பிரஜைகள் விரைவில் உருவாவார்கள். காலம் எடுக்காது. இயற்கையும் மிகவும் களைப்படைந்து விட்டது, ஆத்மாக்களும் நம்பிக்கை இழந்து விட்டார்கள். மேலும் எப்பொழுது நம்பிக்கை இழந்து விடுகிறார்களோ அப்பொழுது யாரை நினைவு செய்கிறார்கள்?. பகவான் தந்தையை நினைவு செய்கிறார்கள் ஆனால் அவருடைய முழு அறிமுகம் இல்லாத காரணத்தினால் தேவி தேவதைகள் உங்களை அதிகமாக நினைவு செய்கிறார்கள். அப்படியானால் நம்பிக்கை இழந்த ஆத்மாக்களின் கூக்குரல் உங்களுக்கு கேட்க வரவில்லையா? வருகிறதா அல்லது நீங்கள் உங்கள் விஷயத்திலேயே மூழ்கியிருக்கிறீர்களா? இரக்கம் நிறைந்தவர்கள் தான் நீங்கள் இல்லையா? தந்தையையும் என்னவென்று கூறுகிறார்கள்? கருணை நிறைந்தவர். மற்ற அனைத்து தர்மங்களைச் சேர்ந்தவர்கள் அவசியம் கருணை வேண்டும் என்று கேட்பார்கள், சுகம் வேண்டும் என்று கேட்க மாட்டார்கள் ஆனால் அனைவருக்கும் கருணை வேண்டும். அப்படியானால் கொடுப்பவர் யார்? கொடுப்பவர்கள் நீங்கள் தானே? அல்லது பெறுபவர்களா? பெற்றுக் கொடுப்பவர்கள். வள்ளலின் குழந்தைகள் தான் இல்லையா? எனவே தன்னுடைய சகோதர சகோதரிகள் மேல் இரக்க மனமுடையவர் ஆகுங்கள். மேலும்

இரக்கமனமுடையவராகி சேவை செய்தீர்கள் என்றால் அதில் நிமித்தம் என்ற உணர்வு இயல்பாகவே இருக்கும். யார் மேலேயும் அவர் எவ்வளவு தான் மோசமானவராக இருந்தாலும் ஆனால் ஒருவேளை உங்களுக்கு அந்த ஆத்மா மேல் இரக்கம் இருக்கிறது என்றால் உங்களுக்கு அவர் மேல் ஒருபொழுதும் வெறுப்பு அல்லது பொறாமை அல்லது கோபத்தின் பாவனை வராது. இரக்கத்தின் பாவனை சுலபமாகவே பொறுப்புணர்வை வெளிக் கொண்டு வந்து விடும். காரணத்தோடு இருக்கும் இரக்கம் இல்லை, உண்மையான இரக்கம். காரணத்திற்கான இரக்கமும் இருக்கிறது. எந்த ஆத்மா மேலாவது மனதின் பற்றுதல் இருக்கிறது என்றால் மிகுந்த இரக்கம் வருகிறது என்று நினைக்கிறார்கள். அப்படி இது காரணம் நிறைந்த இரக்கமானது. உண்மையான இரக்கம் இல்லை. உண்மையான இரக்கத்தில் எந்த பற்றுதலும் இருக்காது. எந்த தேக உணர்வும் இருக்காது, ஆத்மா, ஆத்மா மேல் இரக்கம் காட்டுகிறது. தேக அபிமானம் மற்றும் தேகத்தின் எந்தவொரு கவர்ச்சியின் பெயர், அடையாளம் இல்லை. சிலருடைய பற்றுதல் உடல் மேல் இருக்கும், சிலருடைய பற்றுதல் குணங்கள் மேல் இருக்கும், விசேஷங்கள் மேல் இருக்கும் ஆனால் விசேஷம் மற்றும் குணம் கொடுத்தவர் யார்? ஆத்மாவோ எவ்வளவு தான் பெரியவராக இருந்தாலும் அவரும் தந்தையிடமிருந்து பெறுபவர் தான். தன்னுடையது அல்ல, தந்தை கொடுத்திருக்கிறார். அப்படியானால் ஏன் நேரடியாக கொடுப்பவரிடமிருந்து பெறக்கூடாது. எனவே தான் சுயநலமற்ற இரக்கம் என்று கூறினோம். சில குழந்தைகள், சுயநலம் இருக்கும் ஆனால் எனக்கு மிகவும் இரக்கம் ஏற்படுகிறது என்று கூறி குறும்புத்தனத்தை காண்பிக்கிறார்கள். வேறு எதுவும் இல்லை இரக்கம் மட்டும் இருக்கிறது என்று கூறுவார்கள் ஆனால் சுயநலமற்ற இரக்கம் இருக்கிறதா? என்று சோதனை செய்யுங்கள். பற்றுதலற்ற இரக்கம் இருக்கிறதா? ஏதாவது அற்ப காலத்தின் பிராப்தியின் காரணமாகவோ இரக்கம் இல்லையே? மிக நல்லவர்கள் இல்லையா அதனால் கொஞ்சம் என்று கூறுவார்கள். கொஞ்சம் என்பதற்கும் அனுமதி கிடையாது. ஒருவேளை கர்மாதீத் ஆக வேண்டும் என்றால் இவை அனைத்தும் தேக உணர்வில் கொண்டு வரக்கூடிய தடைகள் ஆகும். நல்லவர் தான், ஆனால் அப்படி ஆக்குபவர் யார்? நல்லதை நன்றாக தாரணை செய்யுங்கள் ஆனால் நல்லதில் பிரபாவம் அடையாதீர்கள். விலகியவராக தந்தையின் அன்பிற்குரியவராகவும் இருக்க வேண்டும்.

யார் தந்தையின் அன்பிற்குரியவரோ அவர் எப்பொழுதும் பாதுகாப்பாக இருக்கிறார். புரிந்ததா?

ஒருவேளை சேவையை அதிகரிக்கிறீர்கள், மேலும் அதிகரிக்கத் தான் வேண்டும் என்றால் ஸ்தாபனையை அருகில் கொண்டு வர வேண்டுமா இல்லையா? யார் கொண்டு வருவார்கள்? தந்தை கொண்டு வருவாரா? அனைவரும் கொண்டு வருவார்களா? நீங்கள்தான் துணைவர்கள் இல்லையா? துணைவர்கள் குழந்தைகள் நீங்களின்றி தந்தையும் எதுவும் செய்ய முடியாது. பாருங்கள் ஒருவேளை தந்தைக்குப் புரிய வைக்க வேண்டியதாக இருந்தாலும் கூட உடலின் துணையை எடுக்க வேண்டியதாக இருக்கிறது. உடல் இன்றி பேச முடியுமா? பழைய வண்டியாக இருந்தாலும் நல்லதாக இருந்தாலும் ஆனால் ஆதாரமோ எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆதாரமின்றி செய்ய முடியாது. பிரம்மாபாபாவின் துணையை எடுத்திருக்கிறோம் இல்லையா, அதனால் தான் நீங்கள் பிராமணர்கள் ஆனீர்கள். பிரம்மா குமார் என்று கூறுகிறீர்களேயன்றி சிவ குமார் என்று கூறுவதில்லை. ஏனென்றால் நிராகார தந்தைக்கும் சாகாரத்தின் ஆதாரம் எடுக்கத் தான் வேண்டும். எப்படி சாகார பிரம்மாவின் ஆதாரம் எடுத்தோம், இப்பொழுது கூட பிரம்மாவின் அவ்யக்த பரிஷ்தாவின் ரூபத்தில் ஆதாரம் எடுக்காமல் உங்களுடைய பாலனை செய்ய முடியாது. சாகாரத்தில் எடுத்தாலும் சரி, ஆகார ரூபத்தில் எடுத்தாலும் சரி ஆனால் ஆத்மாவின் ஆதாரம் மற்றும் துணையை எடுக்கத் தான் வேண்டியதிருக்கிறது. அவரோ அனைத்து சக்திகளும் நிறைந்தவர் தான், எப்படி மந்திரவாதி ஒரு நொடியில் அழியும் விளையாட்டை காண்பிக்க முடிகிறது என்றால் அனைத்து சக்திகளும் நிறைந்தவர் என்ன விரும்புகிறாரோ அதைச் செய்ய முடியாதா? செய்ய முடியுமா? இப்பொழுதே விநாஷத்தை கொண்டு வர முடியுமா? தனியாக கொண்டு வர முடியுமா? தனியாகச் செய்ய முடியாது. அவர் அனைத்து சக்திகளும் நிறைந்தவராக இருந்தாலும் கூட துணைவர்கள் உங்களின் சம்மந்தத்தில் கட்டப்பட்டிருக்கிறார். அப்படி தந்தைக்கு உங்கள் மேல் எவ்வளவு அன்பு இருக்கிறது. விரும்பினால் செய்ய முடியும், ஆனால் செய்ய முடியாது. மந்திரக்கோலை சுற்ற முடியாதா என்ன? ஆனால் இராஜ்ய அதிகாரியாக யார் ஆவார்கள் என்று தந்தை கூறுகிறார். தந்தை ஆவாரா என்ன? நீங்கள் ஆவீர்கள். ஸ்தாபனையும் செய்து விடலாம்,

விநாஷத்தையும் செய்து விடலாம் ஆனால் யார் இராஜ்யம் செய்வார்கள்? நீங்களின்றி காரியம் நடக்குமா? எனவே தந்தைக்கு உங்கள் அனைவரையும் கர்மாதீத் ஆக்கத் தான் வேண்டும். ஆகத்தான் வேண்டுமா அல்லது தந்தை வலுக்கட்டாயமாக ஆக்கட்டுமா? தந்தைக்கு ஆக்க வேண்டும் மற்றும் நீங்கள் அனைவரும் ஆகவே தான் வேண்டும். இது இனிமையான நாடகம், நாடகம் பிடித்திருக்கிறது தான் இல்லையா? அல்லது என்ன, இப்படி உருவாக்கப்பட்டிருக்கிறது என்று எப்பொழுதாவது நொந்து போகிறீர்களா? இது மாற வேண்டும் என்று அப்படி யோசிக்கிறீர்களா? இது ஏற்கனவே உருவாக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கும் நாடகம், இது மாற முடியாது என்று தந்தையும் கூறுகிறார். மீண்டும் நடக்க வேண்டுமேயன்றி மாற முடியாது. நாடகத்தில் இந்த கடைசி ஜென்மத்தில் உங்களுக்கு சக்திகள் இருக்கின்றன. நாடகம் தான் ஆனால் நாடகத்தில் இந்த உயர்ந்த பிராமண ஜென்மத்தில் அதிகமான சக்திகள் கிடைத்திருக்கின்றன. தந்தை வில் (உயில்) எழுதிக் கொடுத்திருக்கிறார். அதனால் வில் பவர் (ஆத்ம பலம்) இருக்கிறது. அப்படியானால் எந்த வார்த்தையை நினைவு வைத்துக் கொள்வீர்கள்? செய்பவர் செய்விப்பவர். உறுதியாக இருக்கிறதா அல்லது விமானத்தில் சென்று கொண்டே மறந்து விடுவீர்களா? மறக்காதீர்கள்.

இப்பொழுது மீண்டும் உங்களுடைய உடலின் பந்தனத்திலிருந்து விலகிய கர்மாதீத் நிலை, காரியத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறோம் ஆனால் விலகிய நிலை, பார்த்துக் கொண்டிருக்கிறோம். பேசிக் கொண்டிருக்கிறோம் ஆனால் விலகிய நிலை. எஜமானன் மற்றும் தந்தை மூலமாக பொறுப்பிலிருக்கும் ஆத்மா ஆவேன், இந்த நினைவில் மீண்டும் மனம் மற்றும் புத்தியை நிலைத்திருக்கச் செய்யுங்கள். (டிரில்). நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள எப்பொழுதும் சேவையின் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய சேவாதாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் சுயமுயற்சி மற்றும் சேவை இரண்டின் சமநிலை வைத்திருக்கக்கூடிய ஆனந்தம் நிறைந்த ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் சுயநலமற்று இரக்க மளமுடையவராகி அனைத்து ஆத்மாக்களுக்காக உண்மையான இரக்கம் வைக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு,

எப்பொழுதும் ஒரு நொடியில் தன்னை கர்ம பந்தனம் மற்றும் அனேக ராயல் பந்தனங்களிலிருந்து விடுவித்துக் கொள்ளக்கூடிய தீவிர முயற்சியாளர் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: 'விட்டால் விடுபடும்' என்ற இந்தப் பாடம் மூலமாக நம்பர் ஒன் பெறக்கூடிய பறக்கும் பறவை ஆகுக!

பறக்கும் பறவையாக ஆவதற்காக 'விட்டால் விடுபடும்' என்ற பாடத்தை உறுதிப்படுத்துங்கள். எந்த விதமான கிளையை புத்தி ரூப கால்களினால் பிடித்துக் கொண்டு அமராதீர்கள். இந்தப் பாடத்தின் மூலம் பிரம்மாபாபா நம்பர்-1 ஆனார். உடன் இருப்பவர்கள் என்னை விட்டால் விடுபடுவேன், உறவினர்கள் விட்டால் விடுபடுவேன் என்று இப்படி யோசிக்கவில்லை. தடை போடுபவர்கள், தடை போடுவதை விட்டார்கள் என்றால் விடுபடுவேன் என்று அப்படி இல்லாமல், சுயம் நானே விட்டால் தான் விடுபடும் என்று நடைமுறையில் தனக்கு இந்த பாடத்தைக் கற்பித்தார். எனவே நம்பர்-1'ல் வருவதற்காக அந்த மாதிரி தந்தையை பின்பற்றி நடங்கள்.

சுலோகன்: யாருடைய எண்ணங்களில் ஒரு பாபா இருக்கிறாரோ அவருடைய மனநிலை எப்பொழுதும் சக்திசாலியாக இருக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋

# **22.03.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்**

# பிராமண வாழ்க்கையின் பெர்சனாலிட்டி (தனித்தன்மை) -அனைத்து கேள்விகளிலிருந்து விடுபட்டு எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருப்பது!

இன்று அனைத்து பிராப்திகளை அளிப்பவர், பாப்தாதா தன்னுடைய அனைத்து பிராப்தி சொரூப குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதா மூலமாக பிராப்திகளோ அதிகமாக ஆகியிருக் கிறது, அதை வர்ணனை செய்வதாக இருந்தால் மிக அதிகமாக இருக்கிறது ஆனால் நீளமான பட்டியலை கூறுவதற்குப் பதிலாக 'இந்த பிராமண வாழ்க்கையில் பிராப்தியில்லை என்று ஒன்றுமில்லை' என்று இதைத்தான் வர்ணிக்கிறீர்கள். அப்படி பிராப்திகளோ அதிகம் நீளமான பட்டியல் இருக்கிறது என்று பாப்தாதா பார்க்கிறார். அப்படி யாருக்கு அனைத்து பிராப்திகளும் இருக்கின்றனவோ அதனுடைய அடையாளம் நடைமுறை வாழ்க்கையில் என்னவாகத் தென்படும் என்பதைத் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அனைத்து பிராப்திகளின் அடையாளமாக அவருடைய முகம் மற்றும் நடத்தையில் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலையின் பெர்சனாலிட்டி (தனித்தன்மை) தென்படும். பெர்சனாலிட்டி தான் யாரையும் ஈர்க்கிறது. அப்படி அனைத்து பிராப்திகளின் அடையாளமாக மகிழ்ச்சி நிறைந்த நிலையின் பெர்சனாலிட்டி இருக்கிறது. அதைத் தான் திருப்தி என்றும் கூறுகிறார்கள் ஆனால் தற்சமயம் முகத்தில் எப்பொழுதும் மகிழ்ச்சியின் பொலிவாக என்ன தென்பட வேண்டுமோ அது தென்படுவதில்லை. சில நேரம் மகிழ்ச்சி நிறைந்த நிலை மற்றும் சில நேரம் கேள்வி நிறைந்த நிலை. இரண்டு விதமாக இருக்கிறது. ஒன்று கொஞ்சம் சூழ்நிலை வந்தது என்றால் கேள்வி நிறைந்த நிலை அதாவது

ஏன், என்ன, எப்படி, எப்பொழுது... இது கேள்வி நிறைந்த நிலை. மேலும் பிராப்தி நிரம்பியவர் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்திருப்பார். அவருக்கு ஒருபொழுதும் எந்த விஷயத்திலும் கேள்வி இருக்காது. ஏனென்றால் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியிருக்கிறார். அப்படி இந்த ஏன், என்ன என்று இருக்கிறது இல்லையா, அது குழப்பமானது, யார் நிரம்பியிருக்கிறாரோ அவர் மேலே, கீழே ஆடுவதில்லை தழும்புவதில்லை). எது காலியாக இருக்குமோ அதில் ஆட்டம் இருக்கும். அப்படி நான் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்து இருக்கிறேனா என்று தன்னைத் தானே கேளுங்கள். எப்பொழுதாவது மட்டுமல்லாமல் எப்பொழுதும் இருப்பது. 10-வருடம் நிரம்பியவர்களோ எப்பொழுதும் அப்படி இருப்பீர்களா அல்லது முடியாதா? ஆம் என்று சொல்லவில்லை, யோசிக்கிறீர்களா? மகிழ்ச்சி நிறைந்த நிலை ஒருவேளை குறைகிறது என்றால் அதற்கான காரணம் பிராப்தி குறைவு. மேலும் பிராப்தி குறையின் காரணமாக ஏதாவது இச்சை இருக்கிறது. இச்சைக்கான அஸ்திவாரம் பொறாமை மற்றும் பிராப்தியின்மை. மிக சூட்சுமமான இச்சைகள் பிராப்தியின்மையின் பக்கம் இழுத்து விடுகின்றன. பிறகு ராயல் ரூபத்தில் என்னுடைய இச்சையில்லை (விருப்பம்) ஆனால் நடந்து விட்டது என்றால் நல்லது என்று கூறுகிறார்கள் ஆனால் எங்கு அற்பகாலத்தின் இச்சை இருக்கிறதோ அங்கு அச்சா (நல்லது) இருக்க முடியாது. எனவே ஞானத்தின் வாழ்க்கையிலும், ஞானத்தின் ராயல் ரூபத்தின் இச்சைகள் அது பெரிய ரூபமுடையதாக இருந்தாலும் அல்லது சூட்சும ரூபத்தில் இருந்து விட்டாலும் அதை சோதனை செய்யுங்கள். ஏனென்றால் இப்பொழுது பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் தந்தைக்குச் சமமாக சம்பன்னம் மற்றும் சம்பூர்ணமாக ஆக்க விரும்புகிறார். யார் மேல் அன்பு இருக்கிறதோ அவருக்குச் சமமாக ஆவது ஒன்றும் கடினமான விஷயம் இல்லை.

பாப்தாதாவுடன் அனைவருக்கும் அதிக அன்பு இருக்கிறதா அல்லது அன்பு மட்டும் இருக்கிறதா? (அதிக அன்பு இருக்கிறது). உறுதியாகவா? அப்படியானால் அன்பிற்காக தியாகம் செய்வது அல்லது மாற்றம் செய்வது என்ன பெரிய விஷயமா? (இல்லை). அப்படியானால் முழுமையாக தியாகம் செய்திருக் கிறீர்களா? என்ன தந்தை கூறுகிறாரோ, என்ன தந்தை விரும்புகிறாரோ அதைச் செய்திருக் கிறீர்களா? எப்பொழுதும் செய்தீர்களா? எப்பொழுதாவது என்பது

காரியத்திற்கு உதவாது. எப்பொழுதும் இராஜ்ய பாக்கியத்தை அடைய வேண்டுமா? அல்லது எப்பொழுதாவதற்காகவா? எப்பொழுதிற்காகவும் வேண்டும் இல்லையா. எனவே எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலை, வேறு எந்த உணர்வும் முகத்தில் மற்றும் நடத்தையில் தென்பட வேண்டாம். சில நேரம் இன்று சகோதரி அவர்களின் அல்லது சககோதரர் அவர்களின் மூட் (மனநிலை) சரியில்லை என்று கூறுகிறார்கள் இல்லையா? நீங்களும் இன்று என்னுடைய மூட் சரியில்லை என்று கூறுகிறீர்கள். அப்படியானால் இதை என்னவென்று கூறுவது? எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலையாக ஆனதா? சில குழந்தைகள் பாராட்டுதலின் ஆதாரத்தில் மகிழ்ச்சி நிறைந்த நிலையை அனுபவம் செய்கிறார்கள் ஆனால் அந்த மகிழ்ச்சி நிறைந்த நிலை அற்ப காலத்திற்கானது. இன்றிருக்கிறது, கொஞ்ச காலத்திற்கு பிறகு முடிவடைந்து விடும். எனவே என்னுடைய மகிழ்ச்சி பாராட்டுதலின் ஆதாரத்திலோ இல்லையே என்ற இதை சோதனை செய்யுங்கள். எப்படி இன்றைய நாட்களில் வீடு கட்டுகிறார்கள் என்றால் சிமெண்ட்டுடன் மணலை அதிகம் சேர்த்து விடுகிறார்கள், கலப்படம் செய்கிறார்கள். இதுவும் அதே போலத்தான். அஸ்திவாரம் கலப்படமாக இருக்கிறது. யதார்த்தம் இல்லை. அப்படி கொஞ்சம் சூழ்நிலையின் புயல் வந்தது மற்றும் ஏதாவது பிரச்சனை ஏற்படுகிறது என்றால் மகிழ்ச்சி நிறைந்த நிலை முடிவடைந்து விடுகிறது. அப்படி அந்த மாதிரியான அஸ்திவாரமோ இல்லையே?

ராயல் ரூபத்தின் இச்சையின் சொரூபம் பெயர், புகழ் மற்றும் மதிப்பு, மரியாதை என்று பாப்தாதா முன்பே கூறியிருக்கிறார், இப்பொழுது மீண்டும் கோடிட்டுக் காண்பிக்கிறார். சேவையில் பெயர் வர வேண்டும் என்று சேவையை ஆதாரமாக எடுக்கிறார்கள் ஆனால் யார் பெயர் கிடைப்பதற்காக சேவை செய்கிறார்களோ அவர்களுடைய பெயரோ அற்ப காலத்திற்காக இவர் மிக நன்றாக சேவை செய்பவர். மிக நன்றாக அனைவரையும் ஈர்ப்பவர் என்றோ ஏற்பட்டு விடுகிறது ஆனால் பெயருக்காக சேவை செய்பவர்களின் பெயர் உயர்ந்த பதவி அடைபவர்களின் பட்டியலில் பின்னுக்கு தள்ளப்பட்டு விடுகிறது. ஏனென்றால் பழுக்கவே இல்லை ஆனால் பழத்தை சாப்பிட்டு விட்டார். எனவே பழுத்த பழத்தை எங்கே அவரால் சாப்பிட முடியும். காரணம் பழுக்காமலேயே சாப்பிட்டு விட்டார். இப்பொழுது சேவை செய்தார்.

இப்பொழுதே பெயர் பெற்றார் என்றால் இது பழுக்காத பழம் ஆகும் அல்லது சேவையையோ நான் மிக அதிகமாகச் செய்தேன், மிக அதிகமான சேவைக்கு நான் பொறுப்பாளராக இருக்கிறேன் என்ற ஆசை வைத்தார் என்றால் இது பெயர். புகழின் ஆதாரத்தில் சேவை நடந்தது. இதைத் தான் பழுக்காத பழத்தை சாப்பிடுபவர் என்று கூறுவது. பழுக்காத பழத்தில் சக்தி இருக்குமா என்ன? மற்றும் சேவை செய்தார் பின்பு சேவையின் முடிவில் எனக்கு மரியாதை கிடைக்க வேண்டும் என்ற விருப்பத்தை வைக்கிறார் ஆனால் இது மரியாதை (மான்) இல்லை ஆனால் அபிமானம் ஆகும். எங்கு அபிமானம் இருக்கிறதோ அங்கு மகிழ்ச்சி நிறைந்த நிலை இருக்க முடியாது. அனைத்தையும் விட மிகப் பெரிய கௌரவம் பாப்தாதாவின் இதயத்தில் கௌரவத்தைப் பெறுவது. ஒருவேளை ஆத்மாக்களின் இதயத்தில் கௌரவம் கிடைத்தும் விட்டது என்றாலும் ஆத்மாக்கள் அவர்களே பெறுபவர்கள், அவர்கள் கொடுப்பவர்கள் இல்லை, அவர்களோ மாஸ்டர் கொடுப்பவர்கள் எனவே மரியாதை வேண்டும் என்றால் எப்பொழுதும் பாப்தாதாவின் இதயத்தில் தன்னுடைய கௌரவத்தை பெறுங்கள். இந்த அனைத்து ராயல் இச்சைகளும் பிராப்தி சொரூபம் ஆக விடுவதில்லை. எனவே மகிழ்ச்சி நிறைந்த நிலையின் பெர்சனாலிட்டி எப்பொழுதும் முகம் மற்றும் நடத்தையில் தென்படுவதில்லை. எந்தவொரு சூழ்நிலையிலும் மகிழ்ச்சி நிறைந்த மனநிலையில் மாற்றம் ஏற்படுகிறது என்றால் நிரந்தரமான மகிழ்ச்சி நிறைந்த நிலை என்று கூற மாட்டோம். பிராமண வாழ்க்கையின் மூட் (மனநிலை எப்பொழுதும் சியர்ஃபுல் (உற்சாகம் நிறைந்த) மற்றும் கேர்ஃபுல் (கவனம் நிறைந்த). மனநிலை மாறக்கூடாது. பிறகு இன்று எனக்கு மிகுந்த தனிமை வேண்டும் என்று ராயல் ரூபத்தில் கூறுகிறார்கள். ஏன் வேண்டும்? ஏனென்றால் சேவை மற்றும் பரிவாரத்திலிருந்து ஒதுங்க விரும்புகிறார்கள் ஆனால் அமைதி வேண்டும், தனிமை வேண்டும் என்று கூறுகிறார்கள். இன்று என்னுடைய மூட் அப்படி இருக்கிறது என்றால் மூடை மாற்றாதீர்கள். என்ன காரணமாக இருந்தாலும், ஆனால் நீங்கள் காரணத்திற்கு நிவாரணம் செய்பவர்களா அல்லது காரணத்தில் வருபவர்களா? நிவாரணம் செய்பவர்கள். என்ன கான்டிராக்ட் எடுத்திருக்கிறீர்கள்? கான்டிராக்டர்கள் தான் இல்லையா? அப்படி என்ன கான்டிராக்ட் எடுத்திருக்கிறீர்கள்? இயற்கையின் மூடையும் மாற்றம் செய்வோம். இயற்கையையும் மாற்ற வேண்டும்

தான் இல்லையா? அப்படி இயற்கையை மாற்றம் செய்பவர் தன்னுடைய மூடை மாற்றம் செய்ய முடியாதா? மூட் சேஞ் ஆகிறதா இல்லையா? சில நேரம் ஆகிறதா? பின்பு கடற்கரையில் போய் அமருகிறார்கள், ஞானக்கடல் இல்லை ஸ்தூலமான கடல். வெளிநாட்டினர் அப்படி செய்கிறார்கள் இல்லையா? அல்லது என்னவென்று தெரியவில்லை இன்று தனிமையாக அனுபவம் ஆகிறது என்று கூறுவார்கள். அப்படியானால் தந்தையின் இணைந்த ரூபம் என்னவானது? பிரித்து விட்டீர்களா? இணைந்த ரூபத்திலிருந்து பிரிந்து தனியாக ஆகி விட்டீர்களா? இதைத் தான் அன்பு என்று கூறுவதா? எனவே எந்த விதமான மூட், ஒன்று மூட் ஆஃப் ஆவது அதுவோ பெரிய விஷயம் ஆனால் மூட் மாறுவது இதுவும் சரியில்லை. அப்படி மூட் ஆஃப் ஆகுபவர்களோ விதவிதமான அதிகமான காட்சிகளைக் காண்பிக்கிறார்கள், பாப்தாதா பார்க்கிறார். பெரியவர்களுக்கு மிகுந்த காட்சிகளைக் காண்பிக்கிறார்கள் அல்லது தன்னுடைய உடன் இருப்பவர்களுக்கு மிகுந்த காட்சிகளைக் காண்பிக்கிறார்கள். அந்த மாதிரி விளையாட்டை செய்யாதீர்கள். ஏனென்றால் பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளின் மேல் அன்பு இருக்கிறது. யார் முக்கியமாக பொறுப்பாளராக இருக்கிறாரோ அவர் தந்தைக்குச் சமமாக ஆகி விடட்டும், மற்றவர்கள் ஆனார்களா அல்லது இல்லையா அதைப் பற்றி ஒன்றும் கவலையில்லை. அனைவரையும் சமமானவராக ஆக்கத் தான் வேண்டும். இது தான் பாப்தாதாவின் அன்பாகும். அப்டடி அன்பிற்கான பிரதிபலனைக் கொடுப்பதற்காக வந்திருக்கிறார் என்றால் குறும்பு விளையாட்டின் மூலம் பிரதிபலன் கொடுக்கிறீர்களா என்ன? சில நேரம் குறும்பு விளையாட்டை காண்பிக்கிறார்கள், சில நேரம் தந்தைக்குச் சமமாக ஆகிக் காண்பிக்கிறார்கள். இப்பொழுது அந்த நேரம் முடிவடைந்து விட்டது.

இப்பொழுது வைர விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் இல்லையா? பொதுவாக 60-வயதிற்கு பிறகு வானபிரஸ்த (முதிய) நிலை தொடங்குகிறது. அப்படி இப்பொழுது நீங்கள் சிறிய குழந்தைகள் இல்லை, இப்பொழுது வானபிரஸ்த் ஆக அதாவது அனைத்தையும் தெரிந்தவர்கள், அனுபவி ஆத்மாக்கள், ஞானம் நிறைந்தவர்கள், சக்திகள் நிறைந்தவர்கள் மற்றும் வெற்றியடையும் ஆத்மாக்கள் நீங்கள். எப்படி எப்பொழுதும் ஞானம் நிறைந்தவராக இருக்கிறீர்களோ அதே

போல் சக்தி நிறைந்தவர்களாகவும் மற்றும் வெற்றி நிறைந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் தான் இல்லையா? சில நேரம் வெற்றி ஏன் ஏற்படுவதில்லை. அதற்கான காரணம் என்ன? பார்க்கப்போனால் வெற்றி உங்கள் அனைவரின் பிறப்புரிமை ஆகும் அப்படி கூறுகிறீர்கள் தான் இல்லையா? கூற மட்டும் செய்கிறீர்களா அல்லது நம்பவும் செய்கிறீர்களா? அப்படியானால் ஏன் வெற்றி கிடைப்பதில்லை அதற்கான காரணம் என்ன? எப்பொழுது தன்னுடைய பிறப்புரிமை என்றால் உரிமை பிராப்தி ஆவதில் மற்றும் அனுபவம் ஆவதில் ஏன் குறை இருக்கிறது? என்ன காரணம்? பெரும்பான்மையோர் தன்னுடைய பலஹீனமான எண்ணாத்தை அதாவது ஆகுமா, ஆகாதா என்பதை முன்பாகவே உருவாக்கி விடுகிறார்கள். அப்படி இந்த தன்னுடைய பலஹீனமான எண்ணமானது மகிழ்ச்சி நிறைந்த நிலைக்குப் பதிலாக கேள்வி நிறைந்த நிலையை உருவாக்கி விடுகிறது. ஆகுமா அல்லது ஆகாதா, என்னவாகும் தெரியவில்லையே.. இந்த எண்ணம் மதில் சுவராகி விடுகிறது மற்றும் வெற்றி அந்த சுவரின் உள்ளே மறைந்து விடுகிறது. நிச்சய புத்தி உடையவர் வெற்றி அடைவார் என்ற இது உங்களுடைய சுலோகன் தான் இல்லையா? எப்பொழுது இந்த சுலோகன் தற்காலத்திற்கானதோ, எதிர்காலத்திற்கானது இல்லை, தற்சமயத்திற்கானது என்றால் எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருக்க வேண்டுமா அல்லது கேள்வி நிறைந்த நிலையிலா? அப்படி மாயா தன்னுடைய பலஹீனமான எண்ணங்களின் வலையை விரித்து விடுகிறது மேலும் தன்னுடைய வலையிலேயே சிக்க வைத்து விடுகிறது. நான் வெற்றி அடைபவன் தான் என்ற இந்த நிச்சயத்தின் மூலம், இந்த பலஹீனமான வலையை அகற்றி விடுங்கள். மாட்டிக் கொள்ளாதீர்கள் ஆனால் அகற்றி விடுங்கள். அகற்றுவதற்கான சக்தி இருக்கிறதா? மெது மெதுவாக செய்யாதீர்கள். உடனடியாக ஒரு நொடியில் இந்த வலை விரிவடைவதைத் தடுத்து நிறுத்துங்கள். ஒருவேளை ஒரு தடவையாவது இந்த வலையில் மாட்டிக் கொண்டீர்கள் என்றால் விடுபடுவது கடினமாகும். வெற்றி எனது பிறப்புரிமை, இந்த பிறப்புரிமை பரமாத்மா பிறப்புரிமை ஆகும், இதை யாரும் பறிக்க முடியாது. அந்த மாதிரி நிச்சப்புத்தி உடையவர் மகிழ்ச்சி நிறைந்தவராக சுலபமாக மற்றும் இயல்பாக இருப்பார். கடின உழைப்பு செய்வதற்கு அவசியம் இல்லை.

தோல்விக்கான இன்னொரு காரணம் என்ன? நீங்கள் மற்றவர்களுக்கும் எண்ணம், நேரம், செல்வம் அனைத்தையும் பயனுள்ளதாக்குங்கள் என்று கூறுகிறீர்கள். அப்படி பயனுள்ளதாக ஆக்குவது என்றால் வெற்றி அடைவது. பயனுள்ளதாக ஆக்குவது தான் வெற்றியின் ஆதாரம் ஆகும். ஒருவேளை வெற்றி கிடைக்கவில்லை என்றால் அவசியம் ஏதோ ஒரு பொக்கிஷத்தைப் பயனுள்ளதாக ஆக்கவில்லை எனவே தான் வெற்றி கிடைக்கவில்லை. பொக்கிஷங்களின் பட்டியலையோ தெரிந்திருக்கிறீர்கள் இல்லையா? எனவே எந்தப் பொக்கிஷத்தைப் பயனுள்ளதாக ஆக்காமல் வீணாக இழந்தேன் என்று சோதனை செய்யுங்கள். அப்பொழுது இயல்பாகவே வெற்றி பிராப்தி ஆகி விடும். பயனுள்ளதாக ஆக்குங்கள் மற்றும் வெற்றியை அடையுங்கள் என்ற இது ஆஸ்தியும் தான் மற்றும் வரதானமும் தான். பயனுள்ளதாக ஆக்கத் தெரியுமா அல்லது இல்லையா? (தெரியும்) அப்படியானால் வெற்றி கிடைக்கிறதா? பயனுள்ளதாக ஆக்குவது விதை மற்றும் வெற்றி அதன் மூலம் கிடைக்கும் பழம் அதாவது பலன், ஒருவேளை விதை நன்றாக இருந்து பழம் கிடைக்கவில்லை என்பது இருக்க முடியாது. பயனுள்ளதாக்கும் விதையில் ஏதோ குறை இருக்கிறது அதனால் தான் வெற்றி என்ற பழம் கிடைப்பதில்லை. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த நிலையின் தனித்தன்மையில் இருங்கள். மகிழ்ச்சி நிறைந்த நிலையில் இருப்பதினால் மிக நல்ல அனுபவம் செய்வீர்கள். பொதுவாகவே மகிழ்ச்சி நிறைந்த நிலையில் யாரையாவது பார்த்தீர்கள் என்றால் எவ்வளவு நன்றாக இருக்கிறது. அவருடைய நெருக்கத்தில் இருப்பது. அவருடன் பேசுவது, அமர்வது எவ்வளவு நன்றாக இருக்கிறது. மேலும் யாராவது கேள்ளி நிறைந்தவர் வந்து விட்டார் என்றால் நொந்து போய் விடுவீர்கள். எனவே என்ன ஆக வேண்டும் என்ற லட்சியத்தை வையுங்கள். கேள்வி நிறைந்த நிலை அல்ல, மகிழ்ச்சி நிறைந்த நிலை ஆக வேண்டும்.

இன்று சீசனின் கடைசி நாள். கடைசியில் என்ன செய்யப்படுகிறது. ஏதாவது யாகம் வளர்க்கிறார்கள் என்றால் கடைசியில் என்ன செய்கிறார்கள். சுவாஹா செய்கிறார்கள். அப்படியானால் நீங்கள் என்ன செய்வீர்கள்? கேள்வி நிறைந்த நிலையை சுவாஹா செய்யுங்கள். இது

ஏன் நடக்கிறது? இது என்ன நடக்கிறது?... என்று அப்படி வேண்டாம். ஞானம் நிறைந்தவர்களாக இருக்கிறீர்கள் இல்லையா? பின்பு ஏன், என்ன என்பது இருக்க வேண்டாம். அப்படி இன்றிலிருந்து இந்த வீணான கேள்வியை சுவாஹா செய்யுங்கள். உங்களுடைய நேரமும் மிச்சமாகும், மேலும் மற்றவர்களின் நேரமும் மிச்சமாகும். தாதிகளின் நேரமும் இந்த என்ன, ஏன், எப்படி என்பதில் செல்கிறது. அப்படி இந்த நேரத்தை தன்னுடையதையும், மற்றவர்களுடையதையும் மிச்சப்படுத்துங்கள். சேமிப்பு கணக்கைச் செய்யுங்கள். பிறகு 21-ஜென்மங்கள் மிக சுகமாக சாப்பிடுங்கள், மகிழ்ச்சியாக இருங்கள், அங்கு சேமிக்க வேண்டியதாக இருக்காது. அப்படியானால் சுவாஹா செய்தீர்களா அல்லது யோசிப்பீர்களா? யோசிக்க வேண்டியதாக இருந்தால் நன்றாக யோசித்துக் கொள்ளுங்கள். உங்களிடமே இது எப்படி முடியும். இதை செய்ய முடியுமா அல்லது முடியாதா என்று கேட்டுக் கொள்ளுங்கள். ஒரு நிமிடத்தில் யோசித்துக் கொள்ளுங்கள். உறுதியான காரியம் செய்யுங்கள். உங்களிடம் எத்தனை கேள்விகள் கேட்க வேண்டுமோ அதை ஒரு நிமிடத்தில் கேட்டு விடுங்கள். கேட்டு விட்டீர்களா? சுவாஹாவும் செய்து விட்டீர்களா அல்லது கேள்வி மட்டும் கேட்டீர்களா? வரும் நாட்களில் கேள்விகள் முடிவடைந்து விட வேண்டும். ஒரு நிமிட அமைதிக்கு பிறகு) முடித்து விட்டீர்களா? (ஆம்). சும்மா அந்த மாதிரி ஆம் என்று சொல்லாதீர்கள். எப்பொழுது கேள்வி நிறைந்த நிலை உள்ளது என்றால், துன்பம், துயரத்தில் வருவது. கேள்வி நிறைந்த நிலை என்றால் துன்பப்படுவது மற்றும் துன்பப்படுத்துவது என்பது வெகு காலத்து மிக நல்ல அனுபவம் உங்களுக்கு இருக்கிறது இல்லையா? எனவே தன்னுடைய நிச்சயம் மற்றும் பிறப்புரிமையின் கௌரவத்தில் இருந்தீர்கள் என்றால் துன்பம், துயரத்தில் வர மாட்டீர்கள். எப்பொழுது இந்த கௌரவத்திலிருந்து விலகிச் செல்வீர்களோ அப்பொழுது தான் துன்பம், துயரத்தில் வருகிறீர்கள். புரிந்ததா? மிக நல்ல முறையில் புரிந்து கொண்டீர்களா அல்லது ஆம் புரிந்து கொண்டோம் என்று இப்பொழுது கூறுவீர்கள் மற்றும் வெளிநாடு சென்ற பிறகு கடினம் என்று கூறுவீர்களா? அந்த மாதிரி இல்லையே? நல்லது.

நாலா புறங்களிலுமுள்ள அனைத்து கேள்வி நிறைந்த நிலையை பரிவர்த்தனை செய்யக்கூடிய, எப்பொழுதும் மகிழ்ச்சி நிறைந்த

நிலையின் தனித்தன்மையில் இருக்கக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய வெற்றி மற்றும் பிறப்புரிமையின் நினைவில் இருக்கக்கூடிய நினைவு சொரூப விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் பயனுள்ளதாக ஆக்குவதினால் சுலபமாக வெற்றியை அனுபவம் செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, தந்தையின் நெருக்கமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: சம்மந்தத்தில் திருப்தி என்ற தூய்மையை தாரணை செய்து எப்பொழுதும் லேசாக மற்றும் குஷியாக இருக்கக்கூடிய உண்மையான முயற்சியாளர் ஆகுக!

முழு நாளில் வகை வகையான ஆத்மாக்களின் சம்மந்தம் ஏற்படுகிறது. முழு நாளில் திருப்தி மற்றும் சம்மந்தத்தில் வரக்கூடிய மற்ற ஆத்மாக்களின் திருப்தியின் சதவீதம் எவ்வளவு இருந்தது. திருப்தியின் அடையாளமாவது தானும் மனதால் லேசாக, குஷியாக இருப்பார் மற்றும் மற்றவர்களுக்கும் குஷி கொடுப்பார். சம்மந்தத்தின் தூய்மை என்றால் திருப்தி. இது தான் சம்மந்தத்தின் உண்மை மற்றும் தெளிவு, எனவே உண்மை இருந்தால் நடனமாடுவார் என்று கூறப்படுகிறது. உண்மையான முயற்சியாளர் எப்பொழுதும் குஷியில் நடனமாடிக் கொண்டே இருப்பார்.

சுலோகன்: யாருக்கு எந்த விஷயத்தில் துக்கம் இல்லையோ அவர் தான் கவலையில்லா மஹாராஜா ஆவார்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 03.04.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சேவைகளின் கூடவே எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு மூலமாக பழைய மற்றும் வீணான சம்ஸ்காரங்களிலிருந்து விடுபட்டவர் ஆகுக!

இன்று எல்லைக்கட்பாற்பட்ட தந்தை தன்னுடைய எல்லைக்கப்பாற்பட்ட நிரந்தர சகயோகி துணைவர் களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். நாலாபுறங்களிலுமுள்ள நிரந்தர சகயோகி குழந்தைகள், எப்பொழுதும் தந்தையின் இதயத்தில் இதயசிம்மாசனதாரிகளாக இருப்பவர்கள், நிராகார தந்தைக்கோ தனக்கென்று அகாலதக்த் (அழியாத ஆசனம்) இல்லை ஆனால் குழந்தைகள் உங்களுக்கு எத்தனை ஆசனங்கள் இருக்கின்றன? அப்படி பாப்தாதா ஆசனதாரி குழந்தைகளைப் பார்த்து ஆஹா! என்னுடைய ஆசனதாரி குழந்தைகளே ஆஹா! என்று எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறார். குழந்தைகள் தந்தையைப் பார்த்து குஷி அடைகிறார்கள், நீங்கள் அனைவரும் பாப்தாதாவைப் பார்த்து குஷி அடைகிறீர்கள் ஆனால் பாப்தாதா எத்தனை குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். ஏனென்றால் ஒவ்வொரு குழந்தையும் விசேஷ ஆத்மா ஆவார். கடைசி வரிசை எண்ணில் இருப்பவராக இருந்தாலும் கடைசியாக இருந்தபோதிலும் விசேஷமாக கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலர் என்ற பட்டியலில் இருக்கிறார். எனவே ஒவ்வொரு குழந்தையையும் பார்த்து தந்தைக்கு அதிக குஷி இருக்கிறதா அல்லது உங்களுக்கா? (இருவருக்கும்). தந்தைக்கு எத்தனை குழந்தைகள்? எத்தனை குழந்தைகளோ அவ்வளவு குஷி இருக்கிறது. மேலும் உங்களுக்கு இரட்டை குஷி அவ்வளவு தான். உங்களுக்கு பரிவாரத்தின் (ஈஸ்வரிய குடும்பம்) குஷியும் இருக்கிறது ஆனால் தந்தையின் குஷி

நிரந்தரமானது. மேலும் உங்களுடைய குஷி நிரந்தரமானதா அல்லது சில நேரம் மேலே கீழே செல்லக்கூடியதா?

பிராமண வாழ்க்கையின் மூச்சு குஷி ஆகும் என்று பாப்தாதா நினைக்கிறார். குஷி இல்லை என்றால் பிராமண வாழ்க்கை இல்லை. மேலும் அழியாத குஷி இருக்கிறது. சில நேரம் மற்றும் சதவிகிதத்தில் இருப்பதாகவோ இல்லை. குஷி என்றால் குஷி தான். இன்று 50-சதவிகிதம் குஷி இருக்கிறது. நாளை 100-சதவிகிதம் இருக்கிறது என்றால் வாழ்க்கையின் மூச்சு மேலே கீழே போகிறது தான் இல்லையா? உடலே சென்று விட்டாலும் குஷி செல்லக்கூடாது என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். அப்படி இந்தப் பாடம் நிரந்தரமாக உறுதியாக இருக்கிறதா அல்லது கொஞ்சம் கொஞ்சம் பிஞ்சாக அதாவது உறுதியற்றதாக இருக்கிறதா? நிரந்தரம் என்பது கோடிடப்பட்டிருக்கிறதா? சில நேரம் இருக்கக்கூடியவர்கள் என்ன ஆவார்கள்? எப்பொழுதும் குஷியில் இருப்பவர் கௌரவத்துடன் தேர்ச்சி பெறுபவராகவும் மேலும் சில நேரம் குஷியில் இருப்பவர்களுக்கு தர்மராஜ்புரியைக் கடந்துச் செல்ல வேண்டியதாக இருக்கும். கௌரவமாக தேர்ச்சி பெறுபவர்கள், ஒரு நொடியில் தந்தையுடன் செல்வார்கள், நிற்க மாட்டார்கள். அப்படியானால் நீங்கள் அனைவரும் யார்? உடன் செல்பவர்களா அல்லது நிற்கக்கூடியவர்களா? உடன் செல்பவர்கள்). அந்த மாதிரியான சார்ட் இருக்கிறதா? ஏனென்றால் விசேஷமாக வைர விழா ஆண்டில் பாப்தாதாவிற்கு ஒவ்வொரு குழந்தையின் பொருட்டும் என்ன நல்ல விருப்பம் இருக்கின்றது என்ற அதை தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா?

பாப்தாதா அனைத்து குழந்தைகளின் சார்ட்டைப் பார்த்தார். அதில் என்ன பார்த்தார் என்றால் தற்சமயத்திற்கு ஏற்றபடி ஒரு விஷயத்தில் விசேஷ கவனம் வேண்டும். எப்படி சேவையில் மிகுந்த ஊக்கம், உற்சாகத்தோடு முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறீர்கள், மேலும் வைர விழாவில் விசேஷமாக சேவையின் ஊக்கம், உற்சாகம் இருக்கிறது. இதில் தேர்ச்சி அடைந்திருக்கிறீர்கள். ஒவ்வொருவரும் அவரவர்களின் சக்திக்கு ஏற்றபடி சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் செய்து கொண்ட இருப்பார்கள் ஆனால் முக்கியமாக இப்பொழுது என்ன தேவை? நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்றால் நேரத்தின்

நெருக்கத்திற்கு ஏற்றபடி இப்பொழுது எந்தவிதமான அலை இருக்க வேண்டும்? (வைராக்கியத்தின்). எந்த வைராக்கியம் -எல்லைக்குட்பட்டதா அல்லது எல்லைக்கப்பாற்பட்டதா? எவ்வளவு சேவையின் ஊக்கம், உற்சாகம் இருக்கிறதோ அந்த அளவு நேரத்தின் தேவைக்கு ஏற்றபடி சுயஸ்திதியில் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் எந்த அளவு இருக்கிறது? ஏனென்றால் உங்களுடைய சேவையின் வெற்றியாக வெகு விரைவிலேயே பிரஜைகள் தயாராகி விட வேண்டும் என்றிருக்கிறது. அதனால் தான் சேவை செய்கிறீர்கள் இல்லையா? எனவே எதுவரை பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் உங்களிடம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு இல்லையோ அதுவரை மற்ற ஆத்மாக்களிலும் வைராக்கிய உள்ளுணர்வு வர முடியாது. மேலும் எதுவரை வைராக்கிய உள்ளுணர்வு இல்லையோ அதுவரை தந்தையின் அறிமுகம் அனைவருக்கும் கிடைத்து விட வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அது கிடைக்க முடியாது. எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் நிரந்தரமான வைராக்கியம் ஆகும். ஒருவேளை நேரத்திற்கு ஏற்றபடி அல்லது சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி வைராக்கியம் வருகிறது என்றால் வைராக்கியம் நம்பர்-1 ஆகி விடும். மேலும் நீங்கள் இரண்டாம் நம்பராகி விடுவீர்கள். சூழ்நிலை அல்லது நேரம் வைராக்கியத்தை கொண்டு வந்தது. சூழ்நிலை அகன்றது. நேரம் கடந்து சென்றது என்றால் வைராக்கியமும் நகர்ந்து சென்று விட்டது. இதை எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் என்று அல்லது எல்லைக்குட்பட்ட வைராக்கியம் என்று கூறுவோமா? அப்படி இப்பொழுது எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் வேண்டும். ஒருவேளை வைராக்கியம் துண்டிக்கப்பட்டு விடுகிறது என்றால் அதற்கான முக்கிய காரணம் தேக உணர்வாகும். எதுவரை தேக உணர்வின் வைராக்கியம் இல்லையோ அதுவரை எந்தவொரு விஷயத்தின் வைராக்கியமும் நிரந்தரமானதாக இருப்பதில்லை. அற்ப காலத்திற்கானதாக இருக்கும். உறவில் இருந்து வைராக்கியம் என்பது பெரிய விஷயம் அல்ல. அதுவோ உலகத்தில் கூட அனேகர்களுக்கு உள்ளப்பூர்வமாக வந்து விடுகிறது ஆனால் இங்கு தேக உணர்வின் விதவிதமான ரூபங்கள் என்ன இருக்கின்றனவோ, அந்த விதவிதமான ரூபங்களையோ தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? எத்தனை தேக உணர்வின் ரூபங்கள் இருக்கின்றன. அதன் விஸ்தாரத்தையே தெரிந்திருக்கிறீர்கள், ஆனால் இந்த அனேக தேக உணர்வின்

ரூபங்களைத் தெரிந்து எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியத்தில் இருக்க வேண்டும். தேக உணர்வு ஆத்ம அபிமானத்தில் மாறி விட வேண்டும். எப்படி தேக உணர்வு ஒரு இயற்கையானதாக ஆகி விட்டது. அதே போல் ஆத்ம அபிமானம் இயற்கையாகி விட வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு விஷயத்திலும் முதல் வார்த்தை உடல் தான் வருகிறது. உறவாக இருந்தாலும் கூட உடலினுடைய உறவு தான், பதார்த்தங்களாக இருந்தாலும் உடலுக்குக்கான பதார்த்தங்கள் தான். அப்படி மூல ஆதாரம் தேக உணர்வு எதுவரை ஏதாவது ரூபத்தில் தேக உணர்வு இருந்து கொண்டிருக்கிறது என்றால் வைராக்கிய உள்ளுணர்வு இருக்க முடியாது. மேலும் தற்சமயம் தேக உணர்வின் தடையாக என்ன இருக்கிறதோ அதற்கான காரணம் தேகத்தின் பழைய சம்ஸ்காரத்தின் மேல் வைராக்கியம் இல்லை என்று பாப்தாதா பார்த்தார். முதலில் தேகத்தின் பழைய சம்ஸ்காரங்களிலிருந்து வைராக்கியம் வேண்டும். சம்ஸ்காரம் ஸ்திதியை (மனநிலை) கீழே கொண்டு வருகிறது. சம்ஸ்காரத்தின் காரணமாக சேவையில் மற்றும் உறவு நெருக்கத்தில் தடை ஏற்படுகிறது. அப்படி எதுவரை தேகத்தின் பழைய சம்ஸ்காரத்திலிருந்து வைராக்கியம் வரவில்லையோ அதுவரை எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் எப்பொழுதும் இருப்பதில்லை என்று ரிசல்ட்டில் பார்த்தோம். சம்ஸ்காரம் விதவிதமான ரூபத்தில் தன் பக்கம் சுவர்ந்து விடுகிறது. அப்படி எங்கு ஏதாவது விதமான ஈர்ப்பு இருக்கிறதோ அங்கு வைராக்கியம் இருக்க முடியாது. எனவே நான் என்னுடைய பழைய மற்றும் வீனனான சம்ஸ்காரத்திலிருந்து விடுபட்டிருக்கிறேனா என்று சோதனை செய்யுங்கள். வைராக்கிய உள்ளுணர்வு இருக்க வேண்டும் என்று எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் செய்யவும் செய்கிறார்கள் ஆனால் சிலரிடம் அல்லது பெரும்பான்மையோரிடம் சம்ஸ்காரம் ஏதாவது ரூபத்தில் தன் பக்கம் ஈர்க்கும் அளவிற்கு மிகுந்த பலமுடையதாக இருக்கிறது. அப்படி முதலில் பழைய சம்ஸ்காரத்திலிருந்து வைராக்கியம் வேண்டும். விரும்பாவிட்டாலும் சம்ஸ்காரம் வெளிப்பட்டு விடுகின்றன. ஏன்? விரும்பவில்லை, நீங்கள் விரும்புவதில்லை ஆனால் சூட்சுமத்தில் (பழைய) சம்ஸ்காரங்களை பஸ்மம் ஆக்கவில்லை. அங்கங்கே அம்ச மாத்திரத்தில் இருந்து விட்டிருக்கிறது, மறைந்திருக்கிறது. அது விரும்பாவிட்டாலும் அந்த நேரம் வெளிப்பட்டு விடுகிறது, பிறகு விரும்பவில்லை தான், ஆனால் என்ன செய்வது அட்பபடி ஆகி விட்டது,

ஆகி விடுகிறது. இதை யார் சொல்வது -தேக உணர்வா அல்லது ஆத்ம அபிமானமா?

சம்ஸ்காரங்களிலிருந்து வைராக்கிய உள்ளுணர்வு பலஹீனமாக இருக்கிறது என்று பாப்தாதா பார்த்தார். அழித்திருக்கிறீர்கள் ஆனால் அம்சமும் இருக்கக்கூடாது என்று அந்த மாதிரி அழிக்கவில்லை, மேலும் எங்கு அம்சம் இருக்கிறதோ அங்கு வம்சமோ இருக்கவே இருக்கும். இன்று அம்சமாக இருக்கிறது, பிறகு காலப்போக்கில் வம்சத்தின் ரூபம் எடுத்து விடுகிறது. மாற்றான் வசம் ஆக்கி விடுகிறது. சொல்வதிலோ அனைவரும் என்ன கூறுகிறார்கள்? எப்படி தந்தை ஞானம் நிறைந்தவரோ அதே போல் நாங்களும் ஞானம் நிறைந்தவர்கள் ஆனால் எப்பொழுது சம்ஸ்காரத்தின் மோதல் இருக்கிறதோ அப்பொழுது ஞானம் நிறைந்தவரா அல்லது ஞானத்தின் இழுப்பு இருக்கிறதா? என்ன இருக்கிறது? ஞானம் நிறைந்தவருக்குப் பதிலாக ஞானத்தை இழுப்பவராக ஆகி விடுகிறீர்கள். அந்த நேரம் யாரிடமாவது கேட்டீர்கள் என்றால் அப்படி நடக்கக்கூடாது. செய்யக்கூடாது என்று நான் புரிந்தும் கொள்கிறேன் ஆனால் ஆகி விடுகிறது என்று கூறுகிறார்கள் அப்படியானால் ஞானம் நிறைந்தவராக ஆனாரா அல்லது ஞானத்தை இழுப்பவராக ஆனாரா? யார் ஞானம் நிறைந்தவராக இருக்கிறாரோ அவரை எந்தவொரு சம்ஸ்காரம், சம்மந்தம், பதார்த்தம் தாக்க முடியாது.

வைர விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். வைர விழாவின் அர்த்தம் வைரம் ஆவது. அதாவது எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியம் உடையவராக ஆவது. எவ்வளவு சேலையின் ஊக்கம் இருக்கிறதோ அந்த அளவு வைராக்கிய உள்உணர்வின் மேல் இல்லை. இதில் அலட்சியம் இருக்கிறது. இதெல்லாம் இருக்கத் தான் செய்யும். சரியாகி விடும். நேரம் வரும்பொழுது சரியாகி விடும் என்றால் நேரம் உங்களுடைய ஆசிரியரா அல்லது பாபா ஆசிரியரா, யார்? ஒருவேளை அந்த நேரத்தில் மாற்றம் செய்தீர்கள் என்றால் (நேரம் உங்களுடைய ஆசிரியராக ஆகி விட்டதல்லவா? உங்களுடைய படைப்பு உங்களுடைய ஆசிரியராக இருந்தால் இது நன்றாக இருக்கிறதா? எப்பொழுது அந்த மாதிரி சூழ்நிலை வருகிறது என்றால் என்ன கூறுகிறீர்கள்? அந்த நேரத்தில் செய்து விடுவேன். நடந்தேறிவிடும்

என்று கூறுகிறீர்கள். தந்தைக்கும் கவலைப்படாதீர்கள் ஆகி விடும் என்று ஆறுதல் அளிக்கிறீர்கள். அந்த நேரத்தில் முற்றிலும் முன்னேறிச் சென்று விடுவேன் என்றால் நேரத்தை ஆசிரியர் ஆக்குவது என்ற இது மாஸ்டர் படைப்பவர் உங்களுக்காக நன்றாக இருக்கிறதா? இல்லைதானே. நேரம் படைப்பாகும். மேலும் நீங்கள் மாஸ்டர் படைப்பவர் ஆவீர்கள். அப்படி படைப்பு மாஸ்டர் படைப்பவரின் ஆசிரியர் ஆவது என்ற இது மாஸ்டர் படைப்பவரின் அழகே இல்லை. அப்படி இப்பொழுது பாப்தாதா என்ன நேரம் கொடுத்திருக்கிறாரோ அதில் வைராக்கிய உள்உணர்வை வெளிப்படுத்துங்கள். ஏனென்றால் சேவையின் இழுபறியில் வைராக்கிய உள்உணர்வு முடிவடைந்து விடுகிறது. அப்படியே சேவையில் குஷியும் கிடைக்கிறது, சக்தியும் கிடைக்கிறது. மேலும் உடனடி பலனும் கிடைக்கிறது ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கியமும் சேவையில் தான் முடிவடைந்து விடுகிறது. எனவே இப்பொழுது தனக்குள் இந்த வைராக்கிய உள்ளுணர்வை எழுப்பி விடுங்கள். சென்ற கல்பத்திலும் ஆனீர்கள் என்றால் நீங்கள் தான் ஆனீர்களா அல்லது வேறு யாருமா? நீங்கள் தான் இல்லையா? அது உள்ளடங்கி இருக்கிறது அதை வெளிப்படுத்துங்கள். எவ்வளவு தான் சாதனம் பிராப்தியாகியிருந்தாலும் மேலும் சாதனமோ உங்களுக்கு நாளாக நாளாக அதிகமாக கிடைக்கவே கிடைக்கும் ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வின் சாதனா (இடைவிடாத பயிற்சி உள்ளடங்கிப் போய்விட வேண்டாம். வெளிப்பட வேண்டும். சாதனம் மற்றும் சாதனாவின் சமநிலை இருக்க வேண்டும். ஏனென்றால் வரும் நாட்களில் இயற்கை. உங்களுடைய தாசியாக இருக்கும். மரியாதை கிடைக்கும், சுயமரியாதை கிடைக்கும் ஆனால் அனைத்தும் இருந்தும் வைராக்கிய உள்உணர்வு குறைய வேண்டாம். அப்படி எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலத்தை தன்னுள் அனுபவம் செய்கிறீர்களா அல்லது சேவையில் பிஸியாகி விட்டீர்களா? எப்படி உலகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சேவையின் பிரபாவம் தென்படுகிறது இல்லையா? அதே போல் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் பிரபாவம் தென்பட வேண்டும். தொடக்க காலத்தில் உங்கள் அனைவரின் நிலை என்னவாக இருந்தது. பாகிஸ்தானில் எப்பொழுது இருந்தீர்களோ அப்பொழுது சேவை இருக்கவில்லை. சாதனம்

இருந்தது, ஆனால் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வின் வாயுமண்டலம் சேவையை வளரச் செய்தது. அப்படி யாரெல்லாம் வைர விழாவைச் சேர்ந்தவர்களோ அவர்களின் ஆதி சம்ஸ்காரம் இப்பொழுது உள்ளடங்கிப் போய்விட்டது. இப்பொழுது மீண்டும் இந்த உள்ளுணர்வை வெளிக் கொண்டு வாருங்கள். ஆதி ரத்தினங்களின் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு ஸ்தாபனை செய்தது, இப்பொழுது புது உலகின் ஸ்தாபனைக்காக மீண்டும் அதே உள்உணர்வை அதே வாயுமண்டலத்தை வெளிக் கொண்டு வாருங்கள். அப்படி என்ன அவசியம் என்று கேட்டீர்களா?

சாதனமே இல்லை. மேலும் எனக்கோ வைராக்கியம் இருக்கிறது என்று கூறினால் யார் நம்புவார்கள். சாதனம் இருக்க வேண்டும் மற்றும் வைராக்கியமும் இருக்க வேண்டும். முந்தைய காலத்தின் சாதனம் மற்றும் இப்பொழுதைய சாதனங்களில் எவ்வளவு வேற்றுமை இருக்கின்றன. சாதனா மறைந்து விட்டது மற்றும் சாதனம் பிரத்யக்ஷம் ஆகி விட்டது. சாதனத்தை னமார நன்றாக உபயோகியுங்கள். ஏனென்றால் சாதனம் உங்களுக்காகவே தான் இருக்கிறது ஆனால் சாதனாவை உள்ளடக்கி வைக்காதீர்கள். முழுமையான சமநிலை இருக்க வேண்டும். எப்படி உலகத்தினருக்கு தாமரை மலருக்குச் சமமாக ஆகுங்கள் என்று கூறுகிறீர்கள் என்றால் சாதனம் இருந்த போதும் தாமரை மலருக்குச் சமமாக ஆகுங்கள். சாதனம் தீயவை அல்ல, சாதனமோ உங்களுடைய கர்மத்தின், யோகத்தின் பலன் ஆகும் ஆனால் உள்ளுணர்வின் விஷயம் ஆகும். சாதனத்தின் குடும்பத்தில் சாதனங்களின் வசமாகி மாட்டிக் கொண்டுவிடவில்லையே? என்று அப்படி இல்லையே? தாமரை மலருக்குச் சமமாக விலகியிருப்பவராக மற்றும் தந்தைக்கு அன்பிற்குரியவராக இருங்கள். உபயோகம் செய்து கொண்டே அவைகளின் பிரபாவத்தில் வர வேண்டாம். விலகியிருக்க வேண்டும். சாதனம் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வை உள்ளடக்கி விட வேண்டாம். இப்பொழுது உலகம் அனைத்து விஷயத்திலும் அளவுக்கு அதிக நிலையில் சென்று கொண்டிருக்கிறது என்றால் இப்பொழுது உண்மையான வைராக்கிய உள்ளுணர்வின் அவசியம் இருக்கிறது. மேலும் அந்த வாயுமண்டலத்தை முதலில் தன்னில் பிறகு உலகத்தில் உருவாக்குபவர்கள் நீங்கள் ஆவீர்கள்.

அப்படியானால் வைர விழாவைச் சேர்ந்தவர்கள் என்ன செய்வார்கள்? அவையைப் பரப்புவீர்கள் தான் இல்லையா? நீங்களோ அனுபவிகள், தொடக்கத்தின் அனுபவம் இருக்கிறது தான் இல்லையா? அனைத்தும் இருந்தது. சுத்தமான நெய்யை எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு அருந்த முடியும். இருந்தும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு இருந்தது. உலகத்தினரோ சுத்தமான நெய்யை அருந்துகிறார்கள் ஆனால் நீங்களோ குடித்தீர்கள். நெய்யின் நதிகளை பார்த்தீர்கள். அப்படி வைர விழாவைச் சேர்ந்தவர்கள் விசேஷ காரியம் செய்ய வேண்டும். உங்களுக்குள் ஒன்றாகக் கூடினீர்கள் என்றால், ஆன்மீக உரையாடல் செய்யுங்கள். எப்படி சேவைக்கான கூட்டம் கூட்டுகிறீர்களோ அதே டோல் இதற்கான கூட்டத்தையும் கூட்டுங்கள். ஒரு நொடியில் அசரீரி ஆகி விடுங்கள் என்று பாப்தாதா கூறுகிறார் மேலும் விரும்புகிறார், அதற்கான அஸ்திவாரம் இந்த எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்ளுணர்வு. இல்லையென்றால் எவ்வளவு தான் முயற்சி செய்தாலும் ஒரு நொடியில் ஆக முடியாது. யுத்தத்திலேயே சென்று விடும் ஆனால் எங்கு வைராக்கியம் இருக்கிறதோ அங்கு இந்த வைராக்கியம் தகுதியான நிலமாகும். அதில் என்ன விதைத்தாலும் அதனுடைய பழம் உடனே வந்து விடும். அப்படியானால் என்ன செய்ய வேண்டும். நானும் இப்பொழுது வைராக்கிய உள்உணர்வில் செல்ல வேண்டும் என்று அனைவருக்கும் உணர்வு இருக்கட்டும். நல்லது. என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? சுலபமா அல்லது கடினமா? கொஞ்சம் கொஞ்சம் ஈர்ப்போ இருக்குமா அல்லது இருக்காதா? சாதனம் உங்களை தன் பக்கம் இழுக்காதா?

எப்பொழுது விரும்புகிறீர்களோ. எங்கே விரும்புகிறீர்களோ, எப்படி விரும்புகிறீர்களோ அங்கு மனநிலையை ஒரு நொடியில் நிலைத்திருக்க வைக்க முடிய வேண்டும் என்ற இந்த பயிற்சி இப்பொழுது தேவை, சேவையில் வர வேண்டியதாக இருந்தது என்றால் சேவையில் வாருங்கள். சேவையிலிருந்து விலகி விட வேண்டும் என்றால் விலகி விடுங்கள். சேவை நம்மை இழுக்கிறது என்று அப்படியும் வேண்டாம். சேவை இல்லாமல் இருக்க முடியாது. எப்பொழுது விரும்புகிறீர்களோ எப்படி விரும்புகிறீர்களோ அந்த மாதிரி மனோபலம் வேண்டும். மனோபலம் இருக்கிறதா? நில் என்றால் நின்று

விட வேண்டும். வைக்கிறீர்கள் புள்ளி ஆனால் அது கமா வாக ஆகி விடுகிறது என்று அப்படி இருக்க வேண்டாம். முற்றுப்புள்ளி, புள்ளி கூட இல்லை ஆனால் முற்றுப்புள்ளி என்ன விரும்புகிறீர்களோ அதை நடைமுறையில் செய்ய முடிய வேண்டும். விரும்புகிறோம், ஆனால் அப்படி ஆவது கடினம் என்றால் இதை என்னவென்று கூறுவது! மனோபலம் என்றா அல்லது பலம் என்றா? வீணானது முடிந்து விட வேண்டும் என்று நினைத்தீர்கள் என்றால் ஒரு நொடியில் முடிந்து விட வேண்டும்.

அனேக குழந்தைகள். நாங்கள் யோகாவில் அமர்கிறோம் ஆனால் யோகாவிற்குப் பதிலாக யுத்தத்தில் இருக்கிறோம் என்று கூறுகிறார்கள்? இதை பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். யோகியாக இருப்பதில்லை. யுத்தம் செய்பவர்களாக இருக்கிறார்கள். மேலும் ஒருவேளை யுத்தம் செய்யும் சம்ஸ்காரம் வெகு காலம் இருக்கிறது என்றால் என்னவாகி விடுவீர்கள்? சூரியவம்சியாகவா அல்லது சந்திரவம்சியாகவா? நினைத்தீர்கள் மற்றும் நடந்தது. நினைப்பது மற்றும் நடப்பது ஒரு நொடிக்கான வேலை. இதைத்தான் மனோபலம் என்று கூறுவது, திட்டத்தை மிக நன்றாக உருவாக்குகிறீர்கள், இதற்கான மனோபலம் இருக்கிறது ஆனால் பத்து திட்டங்கள் உருவாகின்றன, ஆனால் நடைமுறையில் நடப்பதோ ஐந்து என்று அப்படியில்லையே? இதைச் செய்வோம், இது இருக்கும், அது இருக்கும் என்று மிக நன்றாக யோசிக்கிறீர்கள் ஆனால் நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டு விடுகிறது. எனவே நினைத்தீர்கள், உடனே காரியம் நடைமுறையில் நடந்தேறியது. அப்படி அனுபவம் ஆக வேண்டும். அந்த மாதிரியான மனோபலம் இருக்க வேண்டும். நல்லது. ஆதிரத்தினங்களுக்கு பாப்தாதாவின் தரப்பிலிருந்து அனைத்து உறவுகளினால் பல கோடி மடங்கு வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் உரித்தாகுக.

நாலாபுறங்களிலுமுள்ள சிம்மாசனதாரி உயர்ந்த பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் எல்லைக்கப்பாற்பட்ட வைராக்கிய உள்உணர்வு மூலம் வாயுமண்டலத்தை உருவாக்கக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய உயர்ந்த விசேஷங்களை காரியத்தில் ஈடுபடுத்தக்கூடிய விசேஷ ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும்

ஒரு தந்தை மற்றும் ஸ்ரீமத் என்ற கையை அனுபவம் செய்யக்கூடிய நெருக்கமான ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம்: தன்னை எல்லைக்கப்பாற்பட்ட மேடையில் இருப்பதாகப் புரிந்து எப்பொழுதும் உயர்ந்த பங்கை செய்யக்கூடிய கதாநாயக நடிகன் ஆகுக!

நீங்கள் அனைவரும் உலகின் அழகுப் பெட்டகத்தில் இருக்கக்கூடிய அழகான பொருட்கள் ஆவீர்கள், அனேக ஆத்மாக்களின் இடையே எல்லைக்கப்பாற்பட்ட மிகப் பெரிய மேடையில் இருக்கிறீர்கள். உலகில் உள்ள ஆத்மாக்கள் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற இந்த நினைவிலேயே ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயலைச் செய்தீர்கள் என்றால் உங்களுடைய ஒவ்வொரு காரியமும் உயர்ந்ததாக இருக்கும் மற்றும் சுதாநாயக நடிகன் ஆகி விடுவீர்கள். அனைவரும் பொறுப்பிலிருக்கும் ஆத்மாக்கள் உங்களிடமிருந்து பிராப்தியின் பாவனை வைக்கிறார்கள். எனவே வள்ளலின் குழந்தைகள் நீங்கள் எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே இருங்கள். மேலும் அனைவரின் ஆசைகளை நிறைவேற்றிக் கொண்டே இருங்கள்.

சுலோகன்: சத்தியத்தின் சக்தி உங்களிடம் இருக்கிறது என்றால் மற்றும் சக்தியின் பிராப்தி கிக் கொண்டே இருக்கும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 31.12.1996 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## புதிய வருடத்தில் அனுபவம் நிறைந்தவராகி அனைவரையும் அனுபவிகளாக ஆக்குங்கள்!

இன்று பார்வையாலேயே நன்மை செய்யும் பாப்தாதா தனது அனைத்து மிக அன்பிற்குரிய, சகயோகி, அன்பில் ஐக்கியமாகியிருக்கும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு குழந்தையின் நெற்றியில், இதயத்தில், அன்பின் நிரூபணம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது (ஹாலில் பின்னால் அமர்ந்திருக்கும் சகோதர சகோதரிகளிடம்) நாங்களோ பின்னால் அமர்ந்திருப்பவர்கள் என்றால் தென்பட மாட்டோம் என்று நீங்கள் நினைக்கலாம், ஆனால் பாப்தாதாவின் கண்களில் தூரத்திலிருக்கும் ஒவ்வொன்றும் எதிரில் தென்படும் அளவிற்கு அந்த மாதிரியான புதுமையான டி.வி இருக்கிறது. எங்காவது ஏதாவது மூலையில் அமர்ந்திருந்தால் கூட பாப்தாதாவின் எதிரில் இருக்கிறீர்கள். இருந்தாலும் இப்பொழுதோ சௌகரியமாக அமர்ந்திருக்கிறீர்கள் தான் இல்லையா (கை தட்டினார்கள்). இன்று மிகுந்த ஊக்கம் உற்சாகம் மற்றும் குஷி இருக்கிறது தான் இல்லையா, அது கை தட்டல் மூலம் தென்படுகிறது ஆனால் பாப்தாதா உங்களுடைய இதயத்தின் குஷியைத் தெரிந்திருக்கிறார். ஒவ்வொரு குழந்தைக்கும் சகயோகத்தின் நிரூபணம் கொடுப்பதில் மிகுந்த குஷி ஏற்படுகிறது என்று பாப்தாதா பார்க்கிறார். எனவே ஆயிரம் புஜங்கள் உடையவராகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படி புஜங்கள் சகயோகத்தின் அடையாளம் ஆகும். ஒவ்வொரு குழந்தையும் நாலாபுறங்களிலும் பாரத தேசத்திலும், வெளிநாட்டிலும் உடலால், மனதால், பொருளால் அனைவரும் அவசியம் சகயோகம் கொடுத்திருக்கிறார்கள் என்று பாப்தாதா தெரிந்திருக்கிறார். மேலும் உங்கள் அனைவரின் சகயோகத்தின் விளைவாக இன்று நீங்கள் அனைவரும் சௌகரியமாக அமர்ந்து பார்த்துக் கொண்டும்

இருக்கிறீர்கள், கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள். இப்பொழுது கை தட்டுவதை அதிகமாகச் செய்யாதீர்கள். உங்களுடைய குஷியின் மனதின் கை தட்டல் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது.

பாருங்கள். இன்று இரண்டு விசேஷங்கள். ஒன்று இந்த சாந்திவனத்தில் நீங்கள் அனைவரும் மிகுந்த ஊக்கம், உற்சாகத்துடன் எதைக் கட்டியிருக்கிறீர்களோ அதனுடைய திறப்பு விழாவை பாப்தாதாவுடன் சேர்ந்து குழந்தைகள் நீங்களும் செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் இன்று நாடகப்படி புது வருடமும் தொடங்கத்தான் போகிறது. எனவே அனைத்து குழந்தைகளுக்கும் பாப்தாதா தனது இரு கரங்களையும் விரித்து இரண்டு விஷயங்களுக்கான வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார். மேலும் எப்படி இந்த நேரம் இப்பொழுது சாகார ரூபத்தில் தந்தையிடம் சேர்ந்து ஊக்கம் உற்சாகம் மற்றும் குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறீர்கள். அதே போலவே புதிய வருடத்தில் எப்பொழுதும் நிரந்தரமாக அவ்யக்த ரூபத்தில் துணைவன் என்று புரிந்து அனுபவம் செய்ய வேண்டும் -இந்த துணையின் அனுபவம் மிகப்பிரியமானது. பாப்தாதாவிற்கும் குழந்தைகள் இல்லாமல் நன்றாக இருப்பதில்லை (மைக் வேலை செய்யவில்லை). முதல் முதல் அனுபவம் தான் இல்லையா. எனவே இதுவும் நாடகத்தின் காட்சி என்று புரிந்து கொள்ளுங்கள், எந்த விஷயத்திலும் மேலே கீழே செல்லாதீர்கள். நல்லது தான். மேலும் நல்லதாகவே இருக்கும். மிக நல்லது, மிக நல்லது என்று கூறி நீங்களும் நல்லவர்கள் ஆகி விடுவீர்கள். மேலும் நாடகத்தின் ஒவ்வொரு காட்சியும் நல்லதாகி விடும். ஏனென்றால் உங்களுடைய நல்லதாவதின் எண்ண அலைகள் எந்த மாதிரியான காட்சியாக இருந்தாலும் எதிர்மறையை நேர்மறையில் மாற்றி விடும். இந்த அளவு சக்தி குழந்தைகள் உங்களிடம் இருக்கிறது. அதை உபயோகிக்க மட்டும் செய்யுங்கள். சக்திகள் மிக அதிகமாக இருக்கிறது, தேவையான நேரத்தில் உபயோகம் செய்து பார்த்தீர்கள் என்றால் மிக நல்ல நல்ல அனுபவம் செய்வீர்கள்.

இது புதிய ஹால் மேலும் புதிய வருடம் என்றால் இதில் என்ன செய்வீர்கள்? புதிய வருடத்தில் ஏதாவது புதுமை செய்வீர்கள் இல்லையா? அப்படி இந்த வருடம் அனுபவம் நிறைந்தவர் ஆகி மற்றவர் களுக்கும் அனுபவம் செய்விட்பதற்கான வருடம் ஆகும்.

புரிந்ததா -என்ன செய்ய வேண்டும் என்று? அனுபவம் செய்ய வேண்டும். வாய்மொழி மூலமாக வர்ணனையோ செய்யவே செய்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு சக்தியின், ஒவ்வொரு குணத்தின் அனுபவம் செய்ய வேண்டும். நீங்கள் அனுபவி மூர்த்தி தான் இல்லையா? நீங்கள் அனுபவி மூர்த்தியா அல்லது வாய்மொழி மூர்த்தியா? அனுபவியாக இருந்தபோதிலும் ஆனால் இந்த வருடத்தில் எந்தவொரு குழந்தையும் எனக்கு இந்த விஷயங்களின் அனுபவமோ இருக்கிறது, ஆனால் இந்த விஷயத்தின் அனுபவம் மிகவும் குறைவு என்று கூறக்கூடாது. அந்த மாதிரி எந்தக் குழந்தையும் இருக்கக்கூடாது, ஏனென்றால் ஞானத்தின் அர்த்தமே புரிந்து கொள்வது மட்டுமல்ல ஆனால் அனுபவம் செய்வது, மேலும் எதுவரை அனுபவம் செய்யவில்லை என்றால் மற்றவர்களையும் அனுபவியாக ஆக்க முடியாது. ஒருவேளை வார்த்தை அளவில் இருக்கிறது. அனுபவம் வரை இல்லை என்றால் எந்த ஆத்மாக்களின் சேவைக்கான பொறுப்பாளர் ஆகிறீர்களோ அவர்களும் வார்த்தை மூலமாக மிக நன்றாக இருக்கிறது, மிக நன்றாக இருக்கிறது, அதிசயமாக இருக்கிறது என்று இதுவரை வருகிறார்கள். அனுபவியாக ஆகி விடுவது. இது கோடியில் சிலர், அந்த சிலரிலும் சிலராக இருக்கிறார்கள். மேலும் பிரத்யக்ஷத்தின் ஆதாரம் அனுபவம் ஆகும். அனுபவம் நிறைந்த ஆத்மாக்கள் ஒருபொழுதும் வாயுமண்டலம் மற்றும் எவருடைய தொடர்பின் பாதிப்பிலும் வர முடியாது. வார்த்தைகளின் பிரபாவத்தில் மட்டும் வருபவர்கள் சில நேரம் நடனமாடுவார்கள். மேலும் சில நேரம் யோசிப்பார்கள், அனுபவம் என்றால் உறுதியான அஸ்திவாரம். பாதி அனுபவம் இருக்கிறது என்றால் பாதி அஸ்திவாரம் உறுதியாக இருக்கிறது, அதன் அடையாளமானது அவர் சிறிய பெரிய விஷயங்களில் ஆடுவார் உறுதியாக இருக்க மாட்டார். ஏனென்றால் வரும் விஷயங்கள் மற்றும் பிரச்சனைகள் பலம் நிறைந்ததாகி விடுகிறது. எனவே அரைகுறை அஸ்திவாரம் உள்ளவர்கள் ஆடுவார்கள், விழ மாட்டார்கள் ஆளால் ஆட்டம் காண்பார்கள். எனவே முதலில் இந்த வருடத்தில் தன்னுடைய அனுபவம் நிறைந்தவர் என்ற அஸ்திவாரத்தை உறுதியாக்குங்கள். அனேக குழந்தைகள் இன்று வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறார்கள் மற்றும் நாளை முகம் கொஞ்சம் மாறியதாக இருக்கிறது, இதற்கான காரணம் என்ன? அனுபவத்தின் அஸ்திவரம் உறுதியாக இல்லை. அனுபவம் நிறைந்த

ஆத்மாக்கள் எவ்வளவு பெரிய பிரச்சனையானாலும், அது ஒன்றுமே இல்லை என்ற மாதிரி அதற்கான தீர்வு காண்பார்கள். வந்தது மேலும் சாட்சியாகி தன்னுடைய பங்கை செய்தார், விலகியவராக மற்றும் அன்பானவர்களாகி விளையாட்டுக்குச் சமமாக பார்ப்பார்கள். விஷயமல்ல ஆனால் விளையாட்டு, பொழுதுபோக்கு. பொழுதுபோக்கு பிடிக்கும் இல்லையா? அப்படி எந்த விஷயமாக இருந்தாலும் எப்பொழுது அஸ்திவாரம் கொஞ்சம் உறுதியில்லாமல் இருக்கிறதோ அப்பொழுது அந்த விஷயம் பெரியதாக அனுபவம் ஆகிறது. 75-சதவிகிதம் உறுதியானாலும், 90-சதவிகிதம் உறுதியானாலும் கூட ஆடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பாப்தாதாவிற்கு குழந்தைகளின் கடின உழைப்பு அதாவது யுத்தம் செய்வது பிடிப்பதில்லை. ஏன் கஷ்டப்பட வேண்டும்? ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? யோகிக்கு பதிலாக யுத்தம் செய்பவராக ஆகப் போகிறவர்களா நீங்கள் அல்லது யோகி ஆத்மாக்களா? யுத்தம் செய்யக்கூடிய சம்ஸ்காரம் சந்திரவம்சத்தில் எடுத்துச் சென்று விடும் ஆனால் யோகி ஆத்மாவின் சம்ஸ்காரம் சூரியவம்சத்தில் கொண்டு செல்லும், அப்படியானால் என்ன ஆக வேண்டும்? சூரிய வம்சியாக ஆக வேண்டுமா அல்லது சந்திரவம்சியாக ஆக வேண்டுமா? சூரியவம்சி ஆக வேண்டும் என்றால் யுத்தம் முடிவடைந்து விட வேண்டும். இந்த வருடத்தின் யுத்தம் செய்வது முடிவடைந்து விட்டதா? இந்த விஷயத்தில் ஆம் அல்லது இல்லை என்று கூறுவதில்லை. சொல்வதினால் கூறுகிறீர்களா? பாப்தாதாவோ பார்க்காவிட்டாலும் கூட குழந்தைகளின் ரிசல்ட்டைப் பார்த்து விடுகிறார், ஒவ்வொரு நேரத்தின் ரிசல்ட் கண்களின் எதிரில் அல்ல ஆனால் இதயத்தில் வந்தே விடுகிறது. இங்கு சாகார உலகத்தில் நீங்கள் எப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் அல்லது அதிகமாக ஆடுகிறீர்கள் என்றால் அங்கே வதனத்தில் தந்தைக்கு யாரோ ஆடுகிறார்கள் என்று அனுபவம் ஆகிறது. எனவே எப்படி சாந்திவனத்தில் குஷி, இந்த ஹாலில் குஷி இருக்கிறதோ அதே போல் பாப்தாதா மற்றும் இவ்வளவு பெரிய சபையின் நடுவில் இந்த வருடத்தில் குழப்பதிலிருந்து விலகி ஆடாத அசையாதவராக ஆகவே தான் வேண்டும். ஆவோம் என்றல்ல ஆகியே தீருவோம் என்ற உறுதிமொழியை எடுங்கள். அந்த மாதிரி எடுப்பீர்களா? அந்த மாதிரி யோசிப்போம், செய்வோம். பார்ப்போம் என்றில்லாமல் ஆகத்தான் வேண்டும் என்று யார் நினைக்கிறார்களோ அவர்கள் கையை

உயர்த்துங்கள். நல்லது. வாழ்த்துக்கள். மேலும் யார் ஏதாவது காரணத்தினால் கையை உயர்த்தவில்லையோ, ஆகவே முடியாது என்று அப்படி இருக்கவே முடியாது, ஆனாலும் ஏதாவது காரணத்தினால் கையை உயர்த்தவில்லை என்றால் அவர்கள் எழுந்திருங்கள். வெட்கம் வருகிறதா கையை உயர்த்துவதற்கு? அப்படியானால் எப்பொழுது கையை உயர்த்துவதில் வெட்கம் வருகிறது என்றால் செய்யும் நேரத்திலும் வெட்கப்பட வேண்டும் என்று யோசியுங்கள். இது வெட்கப்படுவதற்கான விஷபம் என்று நினைத்தீர்கள் என்றால் அது மீண்டும் நடக்காது, உறுதியானவர் ஆகி விடுவீர்கள். ஏனென்றால் அனேசு குழந்தைகள் அடிக்கடி பொறுப்பிலிருக்கும் குழந்தைகளிடம் அல்லது ஆன்மீக உரையாடலில் அடிக்கடி பாப்தாதாவிடம் பாபா வினாஷத்தின் தேதியைக் கூறுங்கள் என்ற ஒரே கேள்வியைத் தான் கேட்கிறார்கள். அனைவரின் கேள்வி தான் இல்லையா? நல்லது பாப்தாதாவும் இரண்டாயிரம் ஆண்டில் முடிவடைந்து விடும் என்று கூறினால் கூட என்ன செய்வீர்கள். இது தேதி ஒன்றையும் தரவில்லை தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். பாப்தாதா உங்களிடம் கேட்கிறார் உதாரணமாக இரண்டாயிரம் ஆண்டு வரை முடிந்து விடும் என்று கூறினால் என்ன செய்வீர்கள்? அலட்சியமானவராக ஆவீர்களா அல்லது தீவிரமாக முயற்சி செய்பவராக ஆவீர்களா? தீவிரமான முயற்சியாளர் ஆவீர்கள். மேலும் இந்த வருடத்தில் வினாஷத்தின் குழப்பம் ஏற்பட்டது என்றால் என்ன செய்வீர்கள் என்று பாப்தாதா கேட்கிறார். இன்னும் தீவிர முயற்சி செய்வீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் தேதியின் உணர்விலேயே இருப்பீர்களா, இவ்வளவு நாட்கள் முடிந்தது, ஒரு மாதம் முடிந்தது, ஒரு வருடம் முடிந்தது. மீதம் இத்தனை மாதங்கள் இருக்கின்றன என்று எண்ணிக் கொண்டே இருப்பீர்களா? அப்படி தேதியின் உணர்விலேயே இருப்பீர்களா அல்லது ஆத்ம உணர்வில் இருப்பீர்களா? என்ன செய்வீர்கள்? அலட்சியமானவராக ஆக மாட்டீர்களா? இன்னும் நான்கு வருடங்கள் இருக்கின்றன என்று அப்படி நினைக்க மாட்டீர்களா? என்ன ஆகி விட்டது கடைசி வருடத்தில் செய்து விடுவோம் என்று அந்த மாதிரி அலட்சியமானவராக ஆக மாட்டீர்களா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் ஆகி விடுவீர்களா? நீங்கள் ஆகா விட்டாலும் கூட மாயா கேட்டுக் கொண்டிருக்கிறது, மேலும் அது அந்த மாதிரியான விஷயங்களை உங்கள் எதிரில் கொண்டு வரும் அதனால் அலட்சியம்,

சோம்பல் இடையிடையே வரும். பின்பு என்ன செய்வீர்கள்? எனவே தேதியின் உணர்வுள்ளவர்களாக ஆகாதீர்கள் ஆனால் ஒவ்வொரு நேரமும் கடைசி நேரம், அந்த அளவு ஒவ்வொரு நேரமும் எவரெடியாக இருங்கள் என்று பாப்தாதா ஏற்கனவே கூறியிருக்கிறார். நல்லது. உதாரணமாக இரண்டாயிரமாவது வருடத்திற்குப் பிறகு நடக்கும் என்று பாப்தாதா கூறுகிறார் அதை நீங்களும் நம்பிவிட்டீர்கள், உண்மை அல்ல, ஆனாலும் நம்பிவிட்டீர்கள் என்றால் நீங்கள் இரண்டாயிரமாவது ஆண்டில் சம்பூர்ணம் ஆவீர்களா? மேலும் மற்றவர்களை எப்பொழுது ஆக்குவீர்கள்? சத்யுகத்தில் ஆக்குவீர்களா என்ன? ஆக்குபவர்கள் மிகக் குறைவானவர்கள் மேலும் ஆகுபவர்கள் மிக அதிகமானவர்கள் என்றால் அவர்களுக்காக நேரம் வேண்டுமா இல்லையா? சென்ற சீசனிலும் குறைந்தது சத்யுகத்தின் தொடக்கத்தில் உள்ள 9-லட்சம் டேர்கள் உருவாகியிருக்கிறார்களா என்று கேட்டிருந்தோம். ஆகவில்லை என்றால் வினாஷம் எப்படி நடக்கும்? யார் மேல் இராஜ்யம் செய்வீர்கள்? பழைய ஆத்மாக்கள் மேல் ராஜ்யம் செய்வீர்களா? புதிய ஆத்மாக்களோ தயாராகவில்லை மேலும் வினாஷம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வீர்கள்? எனவே பாப்தாதா இந்த காரியத்தை தன்னுடைய குழந்தைகளிடம் யார் ஜோஷியர்களாக இருக்கிறார்களோ அவர்களிடமே பொறுப்பைக் கொடுத்தோம். ஜோதிடர் என்ன காரியம் செய்ய முடியுமோ அதை தந்தை ஏன் செய்ய வேண்டும்? இருந்தாலும் அவர்களும் தந்தையின் குழந்தைகளே அவர்களையும் சம்பாதிக்க விடுங்கள். அவர்களுடைய சம்பாத்தியத்தின் சாதனமே இது தான். ஒருவேளை யாருக்காவது மிக அவசரமாக இருக்கிறது என்றால் அந்தக் குழந்தைகளிடம் (ஜோதிடர்களிடம்) கேளுங்கள். தந்தை கூற மாட்டார்.

இந்த வருடம் என்ன செய்ய வேண்டும் என்று புரிந்து கொண்டீர்களா? அனுபவம் நிறைந்தவர் ஆக வேண்டும். அனேக குழந்தைகள் ஆன்மீக உரையாடலில் மிகவும் இனிமையிலும் இனிமையான உரையாடல் செய்து கொண்டே -என்ன செய்வது பாபா, இந்த அளவோ செய்தாகி விட்டது, மீதி உள்ளதை நீங்கள் செய்து விடுங்கள் என்று கூறுகிறார்கள். இராஜ்யம் நாங்கள் செய்வோம்.ஆனால் சம்பூர்ணமானவராக நீங்கள் ஆக்கி விடுங்கள் என்று கூறுகிறார்கள். அந்த மாதிரி ஆகுமா? தந்தை அவசியம் உதவி செய்பவராக இருக்கிறார், மேலும் இறுதிவரை

இருப்பார் என்ற இது உத்திரவாதம் ஆனால் யாருடைய உதவியாளராக இருப்பார்? யார் முதலில் தைரியம் என்ற காலை முன்னுக்கு வைக்கிறார் என்றால் பின்பு தந்தை இரண்டாவது காலை வைப்பதில் முழுமையாக உதவி செய்கிறார். தைரியம் என்ற காலை எடுக்கவே இல்லை மற்றும் பாபா நீங்கள் செய்து விடுங்கள், செய்து விடுங்கள் என்று கூற மட்டும் செய்கிறார்கள் என்றால் பாப்தாதாவும் பார்க்கலாம், முதலில் காலையோ வையுங்கள் என்று தான் கூறுவார். ஒரு கால் கூட வைக்கவில்லை என்றால் எப்படி நடக்கும். எனவே இந்த வருடத்தில் தைரியம் என்ற கால் உறுதியாக இருக்கிறதா என்று ஒவ்வொரு நேரமும் சோதனை செய்யுங்கள். தந்தையிடம் கூறுவதற்கு முன்பு இதை சோதனை செய்யுங்கள் -தைரியம் என்ற காலை எடுத்து வைத்தீர்கள் மற்றும் உதவி கிடைக்கவில்லை என்ற இது அசம்பவம் ஆகும். கொஞ்சம் தைரியம் என்ற காலை மட்டும் எடுத்து வையுங்கள், எனவே தான் இந்த மாதிரியான வர்ணனை இருக்கிறது, அதில் முதல் வார்த்தையாக என்ன வருகிறது? தைரியம் உள்ள குழந்தைகளுக்கு தந்தையின் உதவி இருக்கிறது. இதை தலைகீழாக ஆக்காதீர்கள். உதவி தந்தையினுடையது, தைரியம் குழந்தைகளினுடையது என்று அப்படியல்ல. தந்தையோ ஆஹா! எனது செல்லமான குழந்தைகளே ஆஹா! என்று புன்முறுவல் செய்கிறார். நிச்சயத்துடன் தைரியம் என்ற காலை கொஞ்சமாவது முன்னுக்கு எடுத்து வைத்தீர்கள் என்றால் பல மடங்கு உதவிக்காக ஒவ்வொரு குழந்தைக்காக தந்தை ஒவ்வொரு நேரமும் தயாராக இருக்கிறார்.

நல்லது. புதிய வருடத்தில் வேறு என்ன செய்வீர்கள்? இது வரையிலும் சேவையின் ஒரு விஷயம் இன்னும் செய்ய வேண்டியதாக இருக்கிறது, அது எது? கீதை சொன்ன பகவானோ நிரூபணம் ஆகி விடும் ஆனால் பாப்தாதா சென்ற வருடத்தில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் அன்பிற்குரிய சகயோகி, நெருக்கத்தில் உள்ளவர்களோ அதிகம் உருவாகியிருக்கிறார்கள் இன்னும் உருவாவார்கள் ஆனால் இப்பொழுது வாரிசு குழந்தைகளை உருவாக்குங்கள் என்று கூறியிருந்தோம். வாரிசு குழந்தைகளை குறைவாக உருவாக்குகிறீர்கள் ஏனென்றால் பாப்தாதா ஒவ்வொரு சேவை நிலையத்தின் தினசரி ரிசல்ட்டைப் பார்க்கிறார். அப்படி நாலாபுறங்களிலுமுள்ள ரிசல்ட்டில் வாரிசு குழந்தைகள் குறைவாக இருக்கிறார்கள். அன்பிற்குரிய

சகயோகிகள் நல்லவர்கள் தான், ஆனால் அவர்களை முன்னேற்றம் அடையச் செய்யுங்கள் அல்லது யாராவது புதியவர்களை, கடைசியில் வந்தவர்களையும் அதிவேகமாக முன்னேற்றி வாரிசு குழந்தையாக தந்தையின் எதிரில் கொண்டு வாருங்கள். சில சில குழந்தைகள் அப்படி உருவாகிறார்கள், ஆனால் விரல் விட்டு எண்ணும் எண்ணிக்கையில் மட்டுமே இருக்கிறார்கள். எப்பொழுது இரண்டாயிரமாவது ஆண்டு வரை மாற்றம் ஏற்பட்டு விட வேண்டும் என்று விரும்புகிறீர்கள். அனைவருமே அப்படித் தான் விரும்புகிறீர்கள் என்றால் வாரிசாக எத்தனை பேர்களை ஆக்கியிருக்கிறீர்கள்? சத்யுகத்தின் பிரஜை கூட இராயலானவர்கள் தேவையாக இருக்கிறது. அது குறைவாக இருக்கிறது. பிரஜைகள் உருவாகியிருக்கிறார்கள். இந்த அனேக விதமான மாநாடுகள் செய்தீர்கள் மற்றும் வெளியுலக மேடையில் என்னென்ன நிகழ்ச்சிகள் கிடைத்தனவோ அதன் மூலம் இந்த வருடத்தில் பிரபாவமும் ஏற்பட்டது மற்றும் பிரஜைகளும் உருவானார்கள். இது நல்ல ரிசல்ட்டாக இருந்தது ஆனால் பாப்தாதா என்ன விரும்புகிறார்? இப்பொழுது வாரிசு தரமுள்ளவர்களைத் தயார் செய்யுங்கள். இங்கு வாரிசு தயார் செய்தீர்கள் என்றால் தான் அட்வான்ஸ் பார்ட்டியும் வெளிப்படுவார்கள். மேலும் தந்தையின் பெயர், பிரத்யக்ஷதாவின் முரசு நாலாபுறமும் ஒலிக்கும். இதுவரையிலுமான ரிசல்ட்டில் இவர்களும் நல்ல காரியம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள் அல்லது இவர்கள் தான் செய்ய முடியும் என்று சிலர் கூறுகிறார்கள் ஆனால் பரமாத்மாவின் பக்கம் கவனம் செல்ல வேண்டும், பரமாத்மாவின் காரியம் நடந்து கொண்டிருக்கிறது என்ற இந்த விஷயம் மறைந்திருக்கிறது. குழந்தைகள் அவர்களுடைய சக்தியினால், அன்பினால் தந்தையை பிரத்யக்ஷம் செய்வதற்கான நல்ல முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இந்த அளவு அன்பிற்குரியவர்கள், சகயோகிகள் இருக்கிறார்கள் இருந்தும் தந்தையின் பிரத்யக்ஷதா மைதானத்தில் வரவில்லை. இந்த அளவு நடந்திருக்கிறது என்பது நல்லது தான் ஆனால் இப்பொழுது நேரம் வந்தாகி விட்டது. தந்தை வந்து விட்டார் என்று அனைவரின் வாயிலிருந்து வெளியாக வேண்டும். அப்பொழுது தான் விநாஷமும் வரும். எனவே விநாஷம் எப்பொழுது ஏற்படும் என்று தந்தையிடம் கேட்காதீர்கள் என்று தந்தை கூறுகிறார். நீங்கள் எப்பொழுது தயார் ஆவீர்கள் என்று உங்களிடம்

தந்தை கேட்கிறார். தயாராகி விட்டீர்களா? திரையை அகற்றலாமா? அல்லது திரை அகற்றப்பட்டு விடும். மேலும் நீங்கள் தயாராகிக் கொண்டே இருப்பீர்களா? குறைந்தது 16108-மிக உறுதியான இரத்தினங்களையாவது பிரத்யக்ஷம் செய்யுங்கள், மாலையையாவது உருவாக்குங்கள். தயராகி விட்டது என்று தந்தையும் பார்க்க வேண்டும். இந்த அளவு வாய்ப்பு இருக்கிறது, அதிகமாக எதையும் கூறவில்லை. 9-லட்சம் உருவாக்குங்கள் என்று கூறவில்லை. 16108-ன் மாலையை உருவாக்குங்கள். அப்படி இந்த வருடம் உருவாக்குங்கள். 16108-ன் தடையற்ற உறுதியான மாலை தயாராகி விட்டதா என்று பார்ப்போம் அல்லது இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் மேலே கீழே செல்வீர்களா? கொஞ்சம் கொஞ்சம் விளையாட்டைக் காண்பிப்பீர்களா? பாண்டவர்கள் என்ன நினைக்கிறீர்கள்? கூறுங்கள், தயாராகி விட்டீர்களா? தாதிகளோ ஆம் என்று கூறுகிறார்கள், அனைத்து சக்திகளும் ஆம் என்று கூறுகிறீர்களா? 16108-தயாராகி விட்டதா? நல்லது. 18-ம் தேதியன்று மாலையை உருவாக்கிக் கொடுங்கள். கையை உயர்த்தச் சொன்னால் பாதி சபை 16000-ல் இருக்கிறோம் என்று கூறும். நான் 16000-ல் இருக்கிறேன் என்று யார் நினைக்கிறீர்களோ அவர்கள் தாதிகளுக்கு, நான் 16000-ல் இருக்கிறேன் அல்லது 108-ல் இருக்கிறேன் என்று ஒரு சிறு காகிதத்தில் எழுதிக் கொடுங்கள். பிறகு தாதிகள் அதை தேர்வு செய்வார்கள். எழுதிக் கொடுத்து விட்டோம் என்று மட்டும் நினைக்காதீர்கள். முதலில் அவர்கள் தேர்வு செய்வார்கள். பிறகு பாப்தாதா தேர்வு செய்வார். பின்பு முடிவு ரிசல்ட்டைக் கூறுவோம், நல்லது.

இந்த வருடம் இன்னும் என்ன செய்வீர்கள்? பாப்தாதா எல்லாக் குழந்தைகளிடமும் ஒரு முடிவைப் (result) பார்த்தார். இங்குள்ளவர் மட்டுமில்லை, நாலா புறமும் உள்ள குழந்தைகளின் ஒரு விஷயத்தின் முடிவைப் பார்த்தார், அது என்ன விஷயம்? சேமிப்பு கணக்கு யார் எவ்வளவு செய்துள்ளனர் என்பதை? அது மனதின், சொல்லின், செயலின், சம்பந்தம், தொடர்பின் கணக்காகட்டும் - உங்கள் அனைவரது சவால் உள்ளது, தனக்காக மட்டுமில்லை ஆனால் உலகினருக்கு முன் கூறுகிறீர்கள், ஒரு ஜென்மத்தில் 21-ஜென்மத்திற்கான சேமிப்பு செய்ய வேண்டும் என. இவ்வாறு கூறுகிறீர்கள்தானே? எனில் ஒரு

ஜென்மத்தில் 21-ஜென்மத்திற்கான சேமிப்பு எவ்வளவு செய்ய வேண்டும்?

இப்போது மனதின் மூலம் செய்யும் சேமிப்பில், ஒன்று, அரை கல்பம் உங்களுக்கு மனதின் மூலம் உள்ளுணர்வு அல்லது வைப்ரேஷன் பரப்புவதற்கான அவசியமே இல்லை, 21-ஜென்மம் இந்த முயற்சி செய்வதற்கான அவசியமே இல்லை மற்றும் இரண்டு, துவாபரம் முதல் உங்களுடைய சித்திரங்களை விதவிதமான ரூபத்தில் பூஜை செய்கின்றனர், உங்களுக்கேத் தெரியாது நாம் எந்த ரூபத்தில் பூஜிக்கப்படுகிறோம் என்பது ஆனால் பூஜிக்கப்படுகிறீர்கள்தானே. 33-கோடி தேவதைகளுக்கு மதிப்பு உள்ளது எனில் அரை கல்பம் மதிக்கத் தகுந்தவராகவும், பூஜைக்குரியவராகவும் ஆகிறீர்கள். அந்த ஜட சித்திரங்கள் மூலம் உங்களுடைய மனஸா சேவை தானாகவோ நடந்து கொண்டிருக்கிறது. எந்த ஒரு பக்தனும் உங்களுடைய ஜட சித்திரம் முன் வந்தார் எனில் அவருக்கு மனதின் அதிர்வலை மூலம் சாந்தி, குஷி, சக்தியின் அனுபவம் ஆகிறது, இது மனதினுடைய சேமிப்பின் பிரபாவம் ஆகும். சொல்லின் மூலம் சேமிப்பு செய்பவர்களின் கணக்கு நன்றாக உள்ளது, அவர்களுக்கு சொல்லின் மூலம் மகிமையும் பூஜையும் அதிகம் நடக்கின்றது. வார்த்தை மூலம் அவர்களுக்கு மகிமை மற்றும் பூஜை யுக்தியுக்தாக நடக்கிறது. உழைப்பின் பூஜை அல்ல ஆனால் யுக்தியுக்தான பூஜை நடக்கிறது, ஏனெனில் வார்த்தை மூலம் நீங்கள் அனைவரும் அவர்களுக்குச் சுகம் அளிக்கிறீர்கள், சாந்தி அளிக்கிறீர்கள் எனில் அரை கல்பம் வார்த்தை மூலம் நிறைய யுக்தியுக்தான மகிமை ஆகிறது. ஒன்று மகிமை செய்யப்படுகிறது மற்றும் யுக்தியுக்த் பூஜை நடக்கிறது. மேலும் செயல் மூலம் சதா சேமிப்பு செய்யும் ஆத்மாக்கள் உள்ளனர், பாதி நாள் செய்வது, பாதி நாள் செய்யாமல் இருப்பது, எப்போதாவது செய்வது, செய்யாமல் இருப்பது என்றில்லாமல் ஆனால் சதா மற்றும் ஒவ்வொரு கர்மத்திலும் ஒருவேளை சேமிப்பு செய்தார் என்றால் அவருடைய ஒவ்வொரு கர்மத்திற்கும் பூஜை நடக்கும். மிகக் குறைவான தேவதைகளுக்குத்தான் ஒவ்வொரு கர்மத்திற்கும் பூஜை நடக்கிறது. அவ்வப்போது என்பவருக்கு முழு நாளில் அவ்வப்போதுதான் பூஜை நடக்கும். சிநேகம், சகயோகி ஆத்மாக்களுக்கு, சிநேகம் மூலம் சகயோகம் மூலம் சேமிப்பு செய்யும் ஆத்மாக்களுக்கு, சிறிய

மூர்த்தியாக இருந்தாலும்கூட, கோவிலும்கூட சிறியதாக இருக்கலாம் ஆனால் அந்த மூர்த்தி மூலம் சிநேகம் மற்றும் சகயோகத்தினுடைய வரதானம் நடைமுறையில் அனுபவம் ஆகும். புரிந்ததா! இப்போது தன்னை சோதியுங்கள், நான்கு விஷயங்களிலும் என்னுடைய சேமிப்பு எவ்வளவு உள்ளது? என்பதை. மூன்றில் அதிகமாகவும், ஒன்றில் குறைவாகவும் அல்லது ஒன்றில் அதிகமாகவும் மூன்றில் குறைவாகவும் இருக்கிறதா?

பாப்தாதா முடிவைப் (result) பார்த்தபோது அவருக்குப் பிடிக்கவில்லை. இப்போது அமர்ந்து என்ன சொல்வது, எனவே சுருக்கமாகக் கூறுகிறேன், விநாசம் சீக்கிரம் ஆக வேண்டுமெனில் இந்த வருஷத்திலிருந்து இந்த நான்கு விஷயங்களின் சேமிப்பை அதிகரியுங்கள். குறைந்த செலவில் அதிக லாபம் அடையுங்கள். பேச்சிலும் நிறைய வீணாகிறது, எது தேவையில்லாத விஷயம் மீது அதிக நேரம் வீணாகிறது. மனதால் நினைக்க வேண்டாத விஷயங்களைச் சிந்திப்பதால் சேமிப்பு குறைகிறது. வீணாகி விடுகிறது சேமிப்பாவதில்லை எனில் விநாசத்திற்கு முன் சேமிப்பை அதிகரியுங்கள். பாப்தாதாவிற்கு விநாசத்திற்கான கட்டளை இடுவதற்கு நேரமாகாது, கையைத் தட்டியதும் ஆகி விடும்! இந்தக் கையையோ தட்டுகிறீர்கள் ஆனால் இப்போது தயாராவதற்கான கையைத் தட்டுங்கள். (எல்லோரும் அடிக்கடி கை தட்டுகிறார்கள்). இன்று கை தட்டுபவர்களின் கூட்டம் அதிகமாக உள்ளது. பாப்தாதா குழந்தைகளைப் பார்த்து குஷி அடைகிறார். இந்த வருஷம் என்ன செய்ய வேண்டும் என்பது புரிந்ததா?

பாப்தாதாவிடம் ஒவ்வொரு குழந்தையின் டிவி உள்ளது. பாப்தாதா அவ்வப்போது ஒவ்வொரு குழந்தையின் டிவியை திடீரென போட்டார் (ON) என்றால் நிறைய வேடிக்கையான காட்சிகளைப் பார்க்கின்றார். எதிர்பாராமல் செய்கின்றனர், முன்கூட்டியே திட்டமிட்டு செய்தார்கள் எனில் ஒழுங்காக அமர்கின்றனர், ஒழுங்காக செய்கின்றனர் ஆனால் எதிர்பாராத விளையாட்டை பார்த்தோம் எனில் இப்போதும்கூட பெரும்பான்மையான குழந்தைகளிடம் வீணானதின் சேமிப்பு அதிகம் உள்ளது. பாப்தாதா முன்பே ஒரு சுலோகன் கொடுத்திருந்தார் -குறைவாகப் பேசுங்கள், இனிமையாகப் பேசுங்கள்! நினைவிருக்கிறதா? எல்லோருமே இந்த சுலோகனை நாலாபுறமும் எழுதி

மாட்டியிருந்தீர்கள், ஆனால் அது சுவற்றிலேயே ஒட்டி விட்டது, இப்போது மனதில் பதிய வையுங்கள். அட்வான்ஸ் பார்ட்டியை பற்றி அனைவருமே கேட்கின்றீர்கள் அவர்கள் எங்கு உள்ளனர், என்ன செய்கின்றனர்? ஏன் பிரத்யக்ஷம் ஆகவில்லை என? எனவே அந்த ஆத்மாக்கள் கூறுகின்றனர் நாங்கள் பிரத்யக்ஷம் ஆகிறோம் எனில் தனியாக ஆவோமா அல்லது சேர்ந்தே ஆவோமோ? என. ஒருவேளை அவர்களது பிரத்யக்ஷம் ஆனது என்றால் இவர்கள் யார், என்ன செய்கின்றனர் என்ற இதில் நீங்கள் இருக்க மாட்டீர்கள். என்ன அட்வான்ஸ் பார்ட்டி மட்டுமே பிரத்யக்ஷம் ஆகட்டுமா? எல்லோரும் சேர்ந்து ஒன்றாக கை தட்டுவோம் என அவர்களும் உங்களுக்காக காத்திருக்கின்றனர். இன்னொரு பக்கம் விநாசத்தின் நேரம் உங்களுக்காக காத்திருக்கிறது, ஒன்றாக சேர்ந்து எல்லோரும் கை தட்டுவோம் என. நேரமோ உங்களது படைப்பு, நீங்கள் கட்டளையிட்டால் போதும் அது சதா தயாராகவே உள்ளது. எனில் நீங்கள் இப்போது ஆடாது அசையாதவர்களாக ஆக்குவதற்கு, ஆவதற்கு உங்களைத் தயார் செய்யுங்கள். யாரெல்லாம் உங்கள் சம்பந்தம் தொடர்பில் வருகிறார்களோ -டீச்சர்களோ, நிமித்த சகோதர சகோதரிகளோ -ஒவ்வொருவரும் தங்களது சம்பந்தம் தொடர்பில் வருகின்ற ஆத்மாக்களை இந்த வருடம் அப்படி தயார் செய்ய வேண்டும் அவர்களது வாயிலிருந்து நாங்கள் அனுபவி மூர்த்திகள் என்பது வர வேண்டும். சென்டரில் உடன் இருப்பவர் ஆகட்டும், குடும்பத்தில் இருப்பவர் ஆகட்டும், ஆனால் ஒவ்வொருவரின் சகயோகத்தின் மூலம், உள்ளுணர்வின் மூலம் அத்தகைய குழு தயார் செய்யுங்கள், யாருடைய வாயின் மூலமும், யாருடைய உள்ளுணர்வின் மூலமும் அந்த மாதிரி அனுபவம் ஆகக்கூடாது இவர்கள் அனுபவமூர்த்தி ஆகக்கூடியவர்கள், இன்னும் ஆகவில்லை என! புரிந்ததா? சென்டரில் உள்ள மூத்தவர்களோ ஆகி விட்டனர், நாமோ ஆகவில்லை என இப்படி புரிந்து கொள்ளக் கூடாது. அனைவருடைய விரலும் தேவை. சமையலறையில் வேலை செய்பவராகக்கூட இருக்கலாம் ஆனால் அனைவருமே பொறுப்பாளிகள் தான்!

இப்போது இந்த வருடத்தின் இறுதியில் இதன் முடிவை கேட்போம் ஏனெனில் வைர விழாவோ முடிந்து விட்டது, இப்போது முடிவின் அருகில் இருக்கிறீர்கள். வைர விழாவிலும் கூட வைரமாக

ஆகவில்லை எனில் வேறு எந்த ஜூப்ளி கொண்டாடுவீர்கள்? மற்றும் கொண்டாட வேண்டுமா அல்லது முடிக்க வேண்டுமா? 100-வருஷத்தினுடையது கொண்டாட வேண்டுமா? கொண்டாட வேண்டுமென்றால் நல்லது மெதுவாகவேச் செல்லுங்கள். ஒருவேளை சீக்கிரம் செய்ய வேண்டுமெனில் முதலில் நீங்கள் தயாராகுங்கள். தினமும் வருபவராகட்டும் அல்லது அவ்வப்போது வருபவர் பட்டியலில் இருப்பவராகட்டும், பிராமணர்களின் பட்டியலில் இருப்பவர்கள் அனைவரும் தயாராகட்டும், எப்போது நீங்கள் தயாராவீர்களோ அப்போது கை தட்டுவீர்கள். ஒருவேளை நாளையே தயாராகி விட்டார்கள் எனில் நாளை கை தட்டுவீர்கள். எனில் எல்லோரும் தயாரா அல்லது தயாராக வேண்டுமா? சென்டரில் இருப்பவர்கள் அல்லது சென்டருக்கு வந்து செல்லும் ஒவ்வொரு குழந்தையின் முடிவையும் பார்ப்போம், யார் நம்பர் எடுக்கிறீர்கள் என்று, சரியா? பாண்டவர்கள் சரியா? பாண்டவர்கள் அமைதியாக இருக்கிறீர்களே, சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களா?

பாருங்கள், பாப்தாதாவோ தனது உறுதிமொழியைச் செய்து விட்டார், குறித்த நேரத்தில் (தேதி) வந்தாரல்லவா! இப்போது நீங்களும் குறித்த நேரத்தில் தயாராகி விட வேண்டும். இந்த பெரிய கூடம் (hall) பிடித்திருக்கிறதா அல்லது சிறியதே போதுமா? இப்போதும் இன்னும் வளர்ச்சி அடைய போகிறது. இந்த கூடத்திலும் கடைசியில் நிற்க வேண்டியுள்ளது; யாரெல்லாம் சௌகரியமாக அமர்ந்து இருக்கிறார்களோ அவர்கள் பாக்கியசாலிகள். எந்த அளவு பெரியதாக உருவாக்குவீர்களோ அந்தளவு சிறியதாகிக் கொண்டே செல்லும். நல்லது, யாரெல்லாம் இந்த இடத்திற்கான சேவைக்கு நிமித்தமாக இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா மிகுந்த வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஏதாவது கொஞ்சம் அதிகமாக இருந்து விட்டது எனில் யோசிக்கக்கூடாது, தயாராக வேண்டும். இருப்பினும் பாப்தாதா பார்த்தார் கொஞ்ச நேரத்திற்குள் எவ்வளவு சீக்கிரமாக வேலை செய்துள்ளனர் என்று, அதைப்போலவே நேரத்திற்கு ஏற்ற முன்னேற்றமும் உள்ளது, இன்னும் கொஞ்சம் உள்ளது அதுவும் முடிந்து விடும். பாப்தாதாவிற்கு பிடித்துள்ளது. தாதியோ புகார் செய்தார் ஆனால் பாப்தாதாவோ வாழ்த்துக்கள் அளிக்கின்றார். உருவாக்குவதற்கு தாதியோ நிமித்தம் ஆனவர், ஒருவேளை அவர்

இதைக் கூறவில்லை எனில் உங்களால் இன்று செய்திருக்க முடியாது. எனில் அவரது வேலை கூறுவது மற்றும் பாப்தாதாவின் வேலை வாழ்த்துக்கள் அளிப்பது. பெயரையோ சொல்ல முடியாது, நிறைய பேர் இருக்கிறீர்கள் ஆனால் கட்டிடம் உருவாக்குவதற்கு முக்கியமான நிமித்தமானவர்கள் எழுந்து நிற்கவும். (நிர்வைர் சகோதரர்) இது உங்களுடைய முதுகெலும்புதானே. எல்லோரும் மனதார கூறுங்கள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்!

இம்முறை பாப்தாதாவிற்கு முடிவின் (result) சான்று கிடைத்தது, ஒவ்வொரு குழந்தைக்கும் பாப்தாதா மீது எவ்வளவு அன்பு உள்ளது என்று. தந்தை கூறினார் மற்றும் குழந்தைகள் உடனே உள்ளேன் ஐயா என ஆஜராகி விட்டனர்.

பின்னர் கட்டுமானப் பணியில் ஈடுபட்டவர்களுடன், பின்பு டீச்சர்களுடன், பின்னர் மதுபன் வாசிகள், ஒவ்வொரு மண்டலத்தினர், இரட்டை வெளிநாட்டினர் என அனைவரையும் சந்தித்தார். பாப்தாதா பழைய ஆண்டும் புதிய ஆண்டும் சந்திக்கும் இந்த சங்கமத்தில் அனைவருக்கும் பட்டமளித்தார் (title, சுவமான்) -திருப்தி ஆத்மாக்கள், திருப்தி மணிகள்! மேலும் இந்த வருடத்திற்கான ஸ்லோகன் -நான் செய்ய வேண்டும்! நான்தான் அர்ஜுனன், நான்தான் நிமித்தமானவன்!

நாலா புறங்களிலுமுள்ள அனைத்து ஊக்கம் உற்சாகத்தினால் முன்னேறிச் சென்று கொண்டிருக்கக்கூடிய, எப்பொழுதும் சிக்கனத்தின் அவதாரமாகி நேரம், எண்ணம், வார்த்தை மற்றும் செயலின் சேமிப்புக் கணக்கில் சேமிக்கக்கூடிய சாகார மற்றும் ஆகார ரூபத்தில் புது வருடத்தைக் கொண்டாடும் காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு, நாலாபுறங்களிலுமுள்ள குழந்தைகள் சாகாரத்தில் இல்லை என்றாலும் ஆகார ரூபத்தில் மதுபன்னில் தான் இருக்கிறார்கள் மற்றும் ஆகார ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். அப்படி அனைவருக்கும் பாப்தாதா புதிய வருடத்திற்கான, சாந்திவனத்தின் ஸ்தாபனைக்கான வாழ்த்துக்கள் மற்றும் அன்பு நினைவுகளைக் கொடுக்கிறார். அனைத்து திருப்திமணிகளுக்கும் நமஸ்காரம்.

**பாப்தாதா தனது திருக்கரங்களால் கொடி ஏற்றி, மெழுகுவர்த்தி ஏற்றினார், கேக் வெட்டினார் மற்றும் இரவு 12-மணிக்கு எல்லா குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களுடன் அன்பு நினைவுகளை அளித்தார்!**

பழைய வருடத்திற்கு விடை கொடுத்து விட்டு, புதிய வருடத்தை ஆரம்பித்து விட்டீர்கள். எப்படி பழைய வருடத்திற்கு விடை கொடுத்தீர்களோ, அதே போல வருஷத்துடன் கூடவே என்னவெல்லாம குறைகள், பலவீனங்கள் இந்த வருஷத்தில் வைத்துள்ளீர்களோ அதையும் சதா காலத்திற்காக விடை கொடுத்து விடுங்கள் மேலும் சர்வ குணங்களை வரவழைத்து, புதிய உலகின் நினைவின் மூலம், தீவிர வேகத்தில் முன்னேறுங்கள், பழைய விஷயங்களை விட்டுவிடுங்கள். பழையவற்றிற்கு விடை கொடுத்து விட்டீர்களா அல்லது அவ்வப்போது அழைப்பீர்களா? இல்லைதானே? சதா காலத்திற்கும் விடை கொடுத்து விட்டீர்களா? எப்படி இந்த 96'ம் வருஷம் இப்போது வராது, விடை கொடுத்து விட்டீர்கள்தானே. இப்போது 97 -முன்னே வரும், 96 -அல்ல. ஆதலால் பழைய குறைகளை ஸ்வாஹா செய்திடுங்கள். ஸ்வாஹா செய்து விட்டீர்களா? இது வைர விழாக் கூடம் தானே எனில் வைர விழாக் கூடம் என்றால் யக்ஞம், எனில் யக்ஞத்தில் ஸ்வாஹா செய்யப்பட்ட பொருள் திரும்ப எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்றால் நீங்கள் ஸ்வாஹா செய்து விட்டீர்களா? ஆம் அல்லது இல்லை? எல்லாவற்றையும் செய்து விட்டீர்களா? கொஞ்சம் மறைத்து வைக்கவில்லையே? கைச் செலவிற்கு என்று கூட வைக்கவில்லையே? என்ன செய்வது, அப்படிப்பட்ட விஷயமாக இருந்தது, கொஞ்சம் செய்ய வேண்டியிருந்தது, எதிர்காலத்திற்காக வைக்க வேண்டியிருக்கிறது, இப்படி இல்லையே. கைச்செலவிற்குக் கூட வைக்கக்கூடாது. ஸ்வாஹா என்றால் அத்தனையும் ஸ்வாஹா! எனில் முடிந்தது முடிந்து விட்டது. மற்றும் இப்போதிருந்து புதிய விஷயங்கள் ஆரம்பமாகி விட்டது. இப்போதிருந்துதானே? எனில் உண்மையான வைரமாகி விட்டீர்கள். ஆகத்தான் வேண்டும், பார்ப்போம், பக்கா'வா என -இந்த பழைய பாஷையும் முடிந்து விட்டது. இப்போது பழைய விஷயங்களைக் கூறக் கூடாது. தெரியவில்லை, தெரியவில்லை என்று சொல்லக்கூடாது! செய்துதானே ஆக வேண்டும் -இல்லை. நாம் என்ன செய்கிறோமோ அதை மற்றவர்களும் செய்வார்கள் -இந்த பாடத்தை உறுதியாக்குங்கள். சரிதானே. எனில்

வாழ்த்துக்கள், பாராட்டுக்கள்! கோடி மடங்கு பாராட்டுக்கள்! நல்லது. ஓம் சாந்தி.

வரதானம்: பரமாத்மாவிற்காக என்ற ஆதாரத்தில் விவகாரத்தை சுலபமாக்கக்கூடிய பாக்கியவான் ஆத்மா ஆகுக!

அரைகல்பம் விவகாரத்தில், பக்தியில், தர்ம க்ஷேத்திரத்தில் அனைத்திலும் கடுமையாக உழைப்பு செய்தீர்கள் மேலும் இப்பொழுது கடின உழைப்பிலிருந்து விடுபட்டு விட்டீர்கள். இப்பொழுது விவகாரம் கூட பரமாத்மாவிற்காக என்பதின் ஆதாரத்தில் சுலபமாகி விட்டது. கருவி என்று உணர்ந்து செய்து கொண்டிருக்கிறீர்கள். கருவி என்று உணர்ந்து செய்பவர்களுக்கு எப்பொழுதும் சுலபமாகவே அனுபவம் ஆகும். விவகாரம் இல்லை, ஆனால் விளையாட்டு, மாயாவின் புயல் இல்லை, ஆனால் நாடகப்படி முன்னேற்றம் அடைவதற்கான பரிசு. அப்படி கடின உழைப்பு விடுபட்டு விட்டது இல்லையா? அப்படி கடின உழைப்பிலிருந்து தன்னை பாதுகாக்கக்கூடிய உயர்ந்த பாக்கியவான் ஆத்மா ஆவேன் என்ற இந்த நினைவிலேயே இருங்கள்.

சுலோகன்: வாழ்க்கையில் இனிமை என்ற குணத்தை தாரணை செய்வது தான் மகான் தன்மை ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂